விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

24 DEC 2009




# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பதினாறு

சங்கு 11 வள்ளுவர் ஆண்டு 2040 மார்கழி 09 வியாழக்கிழமை (24.12.2009) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 05



## ஜனநாயகத்தை நிலைநிறுத்த ஆட்சி மாற்றமே ஒரே வழி!

### ஜே.வி.பி. எம்.பி. சந்திரசேகரன் யாழில் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

குடும்ப ஆதிக்கத்திலிருந்து நாட்டை மீட்டெடுத்து ஜனநாயகத்தை பாதுகாப்பதில் மக்கள் உறுதியாக இருக்கின்றனர். இவ்வாறு ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் இராமலிங்கம் சந்திரசேகரன் தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம் யாழ்ப்பாணத்துக்கு வருகைதந்திருந்த நாடாளுமன்ற உறுப்பினர் இ.சந்திரசேகரன் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

தென்பகுதி மக்கள் ஜெனரல் சரத் பொன்சேகாவை ஆதரிக்கின்றனர். ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் (16ஆம் பக்கம் பார்க்க)

## ஐரோ. அதிகாரியுடன் அமைச்சர் ரோகித பேச்சு

(கொழும்பு)

எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளர் சரத் பொன்சேகாவுக்கு ஆதரவாக கருத்து தெரிவித்த ஐரோப்பிய ஒன்றியத்தின் இலங்கைக்கான தூதுக்குழுவின் தலைவர் பேர்னாட் சவகேயை வெளிவிவகார அமைச்சர் ரோகித போகொல்லாகம அழைத்து பேச்சு நடத்தியுள்ளார். இந்த சந்திப்பு நேற்று புதன்கிழமை இடம்பெற்றுள்ளது.

முன்னாள் இராணுவ தளபதி சரத் பொன்சேகா அரசியலில் (16ஆம் பக்கம் பார்க்க)

# மோசமான மனித அவலம் நிகழ்ந்த நாடுகளின் பட்டியலுக்குள் இலங்கை!

## எம்.எஸ்.எஃப் அமைப்பு வெளியிட்டது

(கொழும்பு)

உலகளவில் பல பகுதிகளில் இடம்பெற்ற போர்களின் போது மிகப் பெரிய மனித பேரவலங்கள் இடம்பெற்ற 10 நாடுகளின் பட்டியலை எல்லைகளற்ற மருத்துவர்களுக்கான அமைப்பு (எம்.எஸ்.எஃப்) என்னும் அமைப்பு வெளியிட்டுள்ளது. இதில் இலங்கையையும் அதுபட்டியலிட்டுள்ளது. பாகிஸ்தான், சோமாலியா, ஆப்கானிஸ்தான், ஏமன், கொங்கோ ஆகிய நாடுகளும் இடம்பெறுகின்றன. (16ஆம் பக்கம் பார்க்க)

## வடகொரியாவில் கைப்பற்றப்பட்ட ஆயுத விமானம் இலங்கைக்கே வந்தது

### தாய்லாந்துப் பொலிஸார் தெரிவிப்பு

(கொழும்பு)

வடகொரியாவில் இருந்து ஆயுதங்களுடன் கடந்த வாரம் புறப்பட்ட விமானம் இறுதியாக இலங்கையை நோக்கியே சென்றதாக தாய்லாந்து பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த விமானம், எரிபொருள் நிரப்புவதற்காக தாய்லாந்தில் தரித்த பொது அதில் ஆயுதங்கள் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.

இதனையடுத்து குறித்த விமானம் தடுத்து வைக்கப்பட்டதுடன், (16ஆம் பக்கம் பார்க்க)

## இந்திய அரசுடனான உறவை குழப்ப எதிர்க்கட்சிகள் திட்டம்

(கொழும்பு)

இந்தியாவுடனான உறவுகளில் விரிசலை ஏற்படுத்துவதற்கு எதிர்க்கட்சிகள் முயற்சி மேற் கொண்டு வருவதாக போக்குவரத்து அமைச்சர் டலஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்துடன் நட்புறவான நாடுகளுடன் முறுகல்களை ஏற்படுத்த எதிர்க்கட்சிகள் மேற்குலக நாடுகளுடன் இணைந்து சதித் திட்டங்களை கட்டவிழ்த்து விடுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தியாவுக்கு எதிரான ஓர் மனநிலையை உருவாக்குவது எதிர்க்கட்சிகளின் முக்கிய இலக்காக அமைந்துள்ளது என அவர் தெரிவித்துள்ளார்.

ஜெனரல் சரத் (16ஆம் பக்கம் பார்க்க)

## ஏற்றுமதி அபிவிருத்தி அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் நேற்று யாழ். விஜயம்

(கொழும்பு)

வடபகுதி உற்பத்தி பொருட்களை சர்வதேச ரீதியில் ஏற்றுமதிக்கு தயார் செய்யும் நோக்குடன் உரிய நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்காக ஏற்றுமதி அபிவிருத்தி அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் நேற்று யாழ்ப்பாணத்திற்கு விஜயம் மேற்கொண்டார்.

நேற்றுக் காலை விமானம் மூலம் பலாலி வந்தடைந்த அமைச்சர் பீரிஸை சமூகசேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பலாலி விமான நிலையத்தில் வரவேற்றார்.

இச்சமயம் யாழ். படைகளின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மார்க்கும் உடனிருந்தார். இதனைத் தொடர்ந்து பலாலி படைத் தலைமையக (16ஆம் பக்கம் பார்க்க)

## பாணின் விலை 36 ரூபாயாக குறைவு

(யாழ்ப்பாணம்)

மாவின் விலை குறைக்கப்பட்டதையடுத்து ஒரு இறாத்தல் பாணின் விலை நாளை முதல் 7 ரூபாயினால் குறைக்கப்படுகின்றது.

அதன்படி புதிய விலை 36 ரூபாய் என நிர்ணயிக்கப்பட்டுள்ளது நுகர்வோர் பாணினை கூடுதலான கொள்வனவு செய்வதால் நுகர்வோரின்நன்மை கருதிபாணின்விலை குறைக்கப் படுகிறது. (16ஆம் பக்கம் பார்க்க)

## நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் இலங்கைக்கு அச்சுறுத்தலானது!

### அமைச்சர் ரோகித போகொல்லாகம தெரிவிப்பு



(கொழும்பு)

நாடுகடந்த தமிழீழ அரசு என்ற பெயரில் புலம் பெயர்ந்த தமிழர்கள் ஆரம்பித்துள்ள புதிய அச்சுறுத்தலை நாம் நன்றாக அறிவோம். அந்த கட்டமைப்பை நாங்கள் நிச்சயம் உடைப்போம் என்று வெளிவிவகார அமைச்சர் ரோகித போகொல்லாகம தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

புலம்பெயர்ந்து வாழும்தமிழ் சமூகமே அரசுக்கு எதிரான குற்றச்சாட்டுகளுக்கு உயிர் கொடுத்து சர்வதேச சமூகத்தை முனைப்பாக்குவதில் செயற்பட்டுவருகிறது. புலம் பெயர்ந்துவாழும் தமிழர்கள் இலங்கைக்கு பெரும் அச்சுறுத்தலாக இருந்து வருவது எமக்கு நன்றாகவே தெரியும். நாடு கடந்த (16ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.நா. அனுப்பிய கடிதத்துக்கு அரசு பதில் அனுப்பவில்லை!

### அமைச்சர் சமரசிங்க கூறுகிறார்

(கொழும்பு)

இலங்கையில் நடைபெற்ற இறுதியுத்த நடவடிக்கையின் போது விடுதலைப் புலிகளின் மூன்று முக்கிய தலைவர்கள் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் ஐக்கிய நாடுகள் சபையின் விசேட பிரதிநிதி பிலிப் அல்ஸ்டன் இலங்கை அரசுக்கு அனுப்பிய கடிதத்துக்கு அரசாங்கம் இது வரை உத்தியோக பூர்வமான பதிலை வழங்கவில்லை என இடர் முகாமைத்துவ மற்றும் மனித உரிமைகள் அமைச்சர் மகிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் அவர் தெரிவிக்கையில், முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் சரத்பொன்சேகா (16ஆம் பக்கம் பார்க்க)

## படையினர் மீதான குற்றச்சாட்டுகள் அவர்களின் ஐ.நா. பணிகளை பாதிக்கும்

### முன்னாள் கடற்படைத் தளபதி தெரிவிப்பு


(கொழும்பு)

படையினர் மேற்கொண்ட போரியல் குற்றங்கள் தொடர்பாக ஜெனரல் சரத் பொன்சேகா மேற்கொண்ட குற்றச்சாட்டுக்கள் ஐக்கிய நாடுகள் சபையில் படையினர் மேற்கொண்டு வரும் பணிகளை பாதிக்கும் என முன்னாள் கடற்படை தளபதி அட்மிரல் வசந்த கரன்னகொட தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் அரசின் தொலைக்காட்சி நிறுவனத்திற்கு மேலும் தெரிவித்துள்ளதாவது;

வெள்ளைக் கொடியுடன் சரணடைய சென்ற விடுதலைப்புலிகளின் தலைவர் களை 58 ஆவது படையினர் (16ஆம் பக்கம் பார்க்க)

**நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்**



சம்பத் வங்கியின் சுன்னாகக் கிளை திறப்பு விழா நிகழ்வுகளையும், வங்கிப் பணியாளர்களையும் படங்களில் காணலாம்.

# 13ஆவது திருத்தச் சட்டத்தையாவது அரசு முதலில் நடைமுறைப்படுத்த வேண்டும்

## பேரா.பாலசுந்தரம்பிள்ளை வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்களின் பிரச்சினைக்கு 13ஆவது திருத்தச் சட்டத்தையாவது அரசாங்கம் முதலில் நடைமுறைப் படுத்த வேண்டுமென யாழ்பல்கலைக்கழக முன்னாள் துணை வேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை கேட்டுள்ளார்.

இக் கோரிக்கையை யாழ்ப்பாணத்திற்கு நேற்று வருகை தந்த ஏற்றுமதி ஊக்குவிப்பு அமைச்சர் ஜி.எல். பீரிஸிடம் அவர் விடுத்துள்ளார்.

யாழ்ப்பாணத்திற்கு நேற்று விஜயம் மேற்கொண்ட ஏற்றுமதி ஊக்குவிப்பு அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் யாழ்.செயலகத்தில் நடைபெற்ற விஷேட மாநாட்டில் கலந்து கொண்டார்.

இதில் பேராசிரியர் பொ.பாலசுந்தரம் பிள்ளை உரையாற்றுகையில்,

யாழ்.மாவட்டத்தில் பாரிய அபிவிருத்தித் திட்டத்தில் தற்போது ஒரு பகுதியே மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதில் யாழ்.நகர அபிவிருத்தியில் தனியார் துறையினரும் ஏனைய பகுதிகளில் ஒரு பகுதியை அரசும், அரச சார்பற்ற நிறுவனங்களும் மேற்கொள்கின்றன.

தற்போது யாழ்.மாவட்டத்தில் 70ஆயிரம் பேர் வரை நலன்புரி முகாம்களிலிருந்து மீள் குடியமர்த்தப்பட்டுள்ளனர்.இதனால் யாழ்ப்பாணத்தின் சனத் தொகையில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது.

அத்துடன் யாழ்.மாவட்டத்தில் வலிகாமம் வடக்கு, வடமராட்சி கிழக்கு மற்றும் அரியாலை கிழக்கு பகுதிகளில் வசித்த வந்த மக்கள் கடந்த 1990ஆம் ஆண்டு முதல் உள்ளக இடப்பெயர் வினால் வேறு இடங்களில் தங்கியுள்ளனர்.மேற்குறித்த பிரதேசங்கள் உயர் பாதுகாப்பு வலயமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

எனவே குறித்த பிரதேசங்களிலிருந்து இடம் பெயர்ந்த மக்களை விரைவில் அவர்களின் சொந்த இடங்களில் மீள்குடியமர்த்த வேண்டும்.

### போக்குவரத்து

ஏ-9 வீதியூடாக மக்கள் போக்குவரத்து அனுமதிக்கப்பட்ட போதும் பொதுமக்களும் வர்த்தகர்களும் பெரும் சிரமங்களுக்கு மத்தி யிலேயே பயணிக்கின்றனர்.

குறிப்பாக பொதுமக்கள் முறிகண்டி பிள்ளையார் கோயிலில் இறங்கி மத வழிபாட்டில் ஈடுபடவும், பிரயாண இளைப்பாறுவதற்கும் அனுமதி வழங்கப்பட வேண்டும்.

தற்போது ஏ-9வீதியூடாக செல்லும் லொறிகள்நாவற்குழி களஞ்சியத்தில் வைத்து பொருட்கள் இறக்கி சோதனையிடப்படுவதுடன்.ஓமந்தை சோதனைச் சாவடியிலும் மீண்டும் பொருட்கள் இறக்கி சோதனையிடப்படுகிறது.

இதில் மாற்றத்தை ஏற்படுத்தி வர்த்தகர்களுக்கு வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

### வெளிநாட்டுப் பிரஜைகள்

வெளிநாட்டிலுள்ள யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் தமது சொந்த இடங்களுக்கு வருவதற்கு அல்லது திருமணம், மரணச்சடங்கு போன்றவற்றிற்கு வருவதற்கு பாதுகாப்பு அமைச்சின்அனுமதிபெறவேண்டியநிலையுள்ளது.இதனால் பல பெரும் நெருக்கடிக்கு முகம்கொடுக்கின்றனர். வெளிநாட்டவர்களுக்கு கொடுக்கும் மதிப்பு வெளிநாட்டிலிருக்கும் எம்மக்களுக்கு வழங்கப்படுவதில்லை என்பது வேதனைக்குரியது.

### யாழ்-மன்னார் ஏ-32 வீதி

பிரித்தானிய அரசின் நிதியுதவியுடன் திருத்தியமைக்கப்பட்ட மன்னார்-யாழ்ப்பாணம் ஏ-32 பாதை திறக்கப்பட்டால் யாழ்ப்பாண விவசாயிகள் பூநகரிக்கு சென்று அங்குள்ள வயல்நிலங்களில் ஈடுபட வழி கிடைக்கும்.

அத்துடன் கடற்தொழிலாளர்கள் நாச்சிக்குடா கடலில் மீன்பிடியில் ஈடுபடமுடியும்.

### பருத்தித்துறை-ஆழியவளை வீதி

பருத்தித்துறை-ஆழியவளை வீதி திறக்கப்படுவதன்மூலம்பொதுமக்கள்நாகர்கோயிலுக்குசெல்லமுடியும்.

அத்துடன் வடமராட்சி கிழக்கு பிரதேசமான நாகர் கோயிலில் மக்கள் மீள்குடியமர்த்தப்பட வேண்டும்.

இதன் மூலம் 5ஆயிரம் கடற்தொழிலா ளர்கள் நன்மையடைவதுடன் யாழ்.மாவட்டத்தில் கடலுணவு உற்பத்தியும் அதிகரிக்கும்.

### ஏற்றுமதி வியாபாரம்

இலங்கைத் தமிழர்கள் சுமார் 10இலட்சம் பேர் வெளிநாடுகளில் வசித்து வருகின்றனர்.

இம்மக்கள் யாழ்.மாவட்டத்தில் உற்பத்தி யாகும் அரிசிவகைகள், மரக்கறி, பாணங்கள், ஜாம்கள், பழவகைகள், பனம் பொருட் கள் மற்றும் கடலுணவு உற்பத்திப் பொருட்களை விரும்புகின்றனர். எனவேமேற்கூறப்பட்ட பொருட்களை நாம் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யக் கூடிய வகையில் அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அத்துடன் வடக்கு மக்கள் அதிகமாகப் பயன்படுத்தும் சைக்கிள், மோட்டார் சைக்கிள், உடுபுடைவைகளை வெளிநாடுகளிலிருந்துஇறக்குமதிசெய்வதற்குயாழ்.மாவட்ட வர்த் தகர்களுக்கு அனுமதி வழங்கப்படுவதில்லை.

எனவே யாழ்.மாவட்ட வர்த்தகர்களுக்கு மேற்குறித்த பொருட்களை வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்வதற்கான அனுமதி வழங்கப்பட்டால் வடக்கு மக்கள் குறைந்தவிலையில்அவற்றைப்பெற்றுக்கொள்ள முடியும்.

### உள்ளகப் போக்குவரத்து

ஏ-9வீதியூடாக போக்குவரத்தில் வடபிராந்திய போக்குவரத்து சபையின் பஸ்கள் அதிகளவு ஈடுபடுவதனால்மேலும் 50பஸ்கள்புதிதாகவழங்கப்பட வேண்டும்.

அத்துடன் சாரதிகள், நடத்துனர்களுக்கான வெற்றிடங்களும் விரைவில் நிரப்பப்பட வேண்டும்.

அத்துடன் தீவகப் போக்குவரத்தில் முன்பு 4 பாதைகளுடாக பஸ் சேவையில் ஈடுபட்டது. எனினும் தற்போது 2பாதையூடாகவே பஸ் சேவை நடைபெறுகின்றது.

### தமிழ் மொழி அமுலாக்கம்

நாட்டில் தமிழ், சிங்கள மொழிகள் அமுலாக்கப்பட்டுள்ளதாக அரசு தெரிவித்த போதும் தமிழ் மொழியில் முறையாக இலக்கணம் சொற்பிரயோகம் இடம்பெறுவதில்லை. இந்தக் குறைபாடு நீக்கப்பட வேண்டும்.

### காணாமல் போனவர்களுக்குமரணச்சான்றிதழ்கள்

போர் காரணமாக பெருமளவான பொதுமக்கள் காணாமல் போயுள்ளனர்.எனவே அவ்வாறு காணாமல் போனவர்கள் தொடர்பில் தகவல் எதுவும் இல்லை எனில் உறவினர்களுக்குமரணச்சான்றிதழ்வழங்கப்பட வேண்டும்.

### அரசியல் தீர்வு

தமிழ் மக்களின் இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு வழங்கப்பட வேண்டும் என தற்போதைய அரசு தெரிவித்து வருகிறது.எனினும் இதுவரை அதில் முன்னேற்றகரமான செயற்பாடுகள் எதனையும் அரசு மேற்கொள்ளவில்லை.எனவே முதற் கட்டமாக 13ஆவது திருத்தச் சட்டத்தையாவது அரசு நடைமுறைப்படுத்தி காட்ட வேண்டும். இவ்வாறு தனது உரையில் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை தெரிவித்தார். (ச-5)

## பெற்றுக் கொள்ளவும்

(யாழ்ப்பாணம்)

வரணி இடைக்குறிச்சியைச் சேர்ந்த தம்பிராசா சசீலன் என்பவருடைய தேசிய அடையாள அட்டை, விசேட அடையாள அட்டை, சாரதி அனுமதிப் பத்திரம், கற்காட் என்பன கண்டெடுக்கப்பட்டு வலம்புரி பத்திரிகை காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

உரியவர் தகுந்த ஆதாரம் காட்டி அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம். (ச-5)


## துளிர்கள் உள சமூக மேம்பாட்டு நிறுவன அறிவித்தல்

- சேவை மனப்பான்மையுள்ள அனைவரும் விண்ணப்பிக்கலாம். வயது உங்களுக்கு ஒரு தடையல்ல!
- ஒவ்வொரு D.S.பிரிவுகளிலுமுள்ள கிராம மட்டங்களில் குடும்ப ஒற்றுமையை முன்னெடுக்கும் முக்கிய பணியில்...
- எமது துளிர்களோடு இணைந்து சேவையாற்றுவதற்கு ஆர்வமுள்ள தொண்டர்களை (VOLUNTER) இணைக்கவுள்ளோம்.
- பிறந்தோம், வளர்ந்தோம், வாழ்ந்தோம்! என்றில்லாமல் நீங்களும் சமூகத்திற்கு ஏதோ, ஒரு வழியில் உதவினோம் என்ற மனத்திருப்தியில் வாழ்வை தொடரலாமே...?
- உங்கள் ஆற்றலை விருத்தி செய்து கொள்ள!
- உங்கள் தொழில்வாண்மையை வளர்த்துக் கொள்ள!
- சமூகத்துடனான உங்கள் உறவை மேம்படுத்திக் கொள்ள!
- உங்கள் ஊர்களிலே உங்களுக்கான சேவைகள் தொடர... உங்களோடு இணைந்து நாங்கள் வழிகாட்டுகின்றோம்.
- ஆர்வமுள்ள ஆண், பெண் இருபாலாரும் உங்கள் சுயவிபரங்களை D.S,G.S பிரிவுகளை குறிப்பிட்டு 31.12.2009 முன்பு அனுப்பி வையுங்கள்

இல.30, கம்பஸ் லேன்,
திருநெல்வேலி.

இயக்குநர்
துளிர்கள்

(118)



## MOON STAR

தையல் பயிற்சியாளர்கள் விண்ணப்பிக்கலாம்

- சகல ஆடைகளும் தைக்க கூடிய வகையில் 12 மாதங்கள் பயிற்சியும் தொடர்ந்து வேலை வாய்ப்பும்

மற்றும்

- ஆடை வெட்டி தைப்பவர்களும், தையலர்களும் உடன் தேவை.
- ஆர்வமுள்ள இருபாலாரும் சுயவிபரங்களுடன் 31.12.2009 முன்பு விண்ணப்பிக்கலாம்.

நல்லதொரு வாய்ப்பை உங்களுக்கு சொந்தமாக்கி கொள்ளுங்கள்

இல.30, கம்பஸ் லேன்,
திருநெல்வேலி.

பணிப்பாளர்
MOON STAR

(118)



## யாழ்ப்பாணம் மாவட்ட வெதுப்பக உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம் (வ-து)

இல.52, 3ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.

### 25.12.2009 முதல் பாண் விலை மாற்றம்

### 450g பாண் ஒன்றின் விலை ரூபா. 36/-

மாவின் விலை குறைந்தமையினால் பாண் ஒன்றின் விலை ஏழு ரூபாவினால் (7/-) குறைக்கப்படுகிறது. நுகர்வோர் பாணினை கூடுதலாக கொள்வனவு செய்வதனால் நுகர்வோர் நன்மை கருதி பாணின் விலை குறைக்கப்படுகிறது. பணிஸ் மற்றும் உபபொருட்களின் விலையில் மாற்றம் செய்யாது அதன் ஒட்டு மொத்தக் கழிவினையும் பாணின் விலையில் குறைத்துள்ளமையே மேற்படி விலைக் குறைவுக்குக் காரணம்.

அத்துடன் இவ்வளவு காலமும் விற்பனைக் கழிவாக வியாபாரிகளுக்கு வழங்கப்பட்ட ரூபா இரண்டானது (2/-) ஒரு ரூபாவாகவும் (1/-), விநியோகஸ்தர்களுக்கு கொடுப்பனவு ஒரு ரூபா ஐம்பது சதமாகவும் (1.50) மாற்றப்பட்டுள்ளது. இம் மாற்றத்தினை விநி யோகஸ்தர்களும், வியாபாரிகளும் மனமுவந்து ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

நுகர்வோர் பாணினை கொள்வனவு செய்யும் போது பாணின் நிறையினை 450g என்பதனை உறுதிப்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

-தலைவர், பொது முகாமையாளர்.

(125)

# இன்று ஒரு தகவல்

## அடுத்திருப்பவர்

அடர்த்தியான காட்டு வழியாக ஒரு வியாபாரி போய்க் கொண்டிருந்தார். அவர் எருசேலம் நகரிலிருந்து எரிகோ நகரை நோக்கிப் போய்க் கொண்டிருந்தார்.

அந்த நேரம் பார்த்து அங்கு வந்த திருடர்கள் சிலர் அவரை வழி மறித்தனர்.

அவரிடமிருந்த பணம், உடை எல்லாவற்றையும் கொள்ளையடித்துக்கொண்டு அவரையும் அடித்துப் போட்டுப் போய்விட்டனர். அவர் அப்படியே கிடந்தார்.

சிறிது நேரத்தில் அந்த வழியாக வந்த மதகுரு ஒருவர் அடிபட்டுக் கிடந்த அந்த மனிதனைக் கண்டார். கிட்ட வரவேயில்லை. அவர் பாட்டுக்கு ஒதுங்கிப் போய்விட்டார்.

சிறிது நேரம் கழித்து ஒரு பணக்கார வியாபாரி அந்தப் பக்கமாக வந்தார். அவரும் அந்த ஆளைப் பார்த்தார். ஒதுங்கிப் போய் விட்டார்.

நீண்ட நேரம் கழித்து ஒரு மனிதன் அந்தப் பக்கமாக வந்தான். ஒரு கழுதை மீது உட்கார்ந்து வந்த அவன் ஒரு சமாரியன்.

இஸ்ரேலுக்குப் பக்கத்திலுள்ள 'சமாரியா' நாட்டைச் சேர்ந்தவன்.

யூதர்களுக்குச் சமாரியர்கள் என்றால் பிடிக்காது. சமாரியர்கள் தங்களை விடத் தாழ்ந்தவர்கள் என்று யூதர்கள் கருதிய காலம் அது.

அந்தச் சமாரியன் அடிபட்டுக் கிடந்த ஆளைப் பார்த்தான். உடனே கழுதையை விட்டு இறங்கி ஓடி வந்தான். அவருக்கு வேண்டிய முதலுதவிகளைச் செய்தான். தன்னிடமிருந்த மருந்தை எடுத்துக் காயங்களுக்குப் போட்டான். துணியால் கட்டுப் போட்டான்.

அவருடைய மயக்கத்தை தெளிய வைத்தான். அவரைத் தன்னுடைய கழுதையில் உட்கார வைத்து ஒரு சத்திரத்திற்கு கொண்டு சென்றான்.

அங்கே ஒரு அறையை வாடகைக்கு எடுத்து அதில் அவரைத் தங்க வைத்து தானும் கூடவே தங்கினான்.

மறுநாட்காலையில் எழுந்து சத்திரப் பொறுப்பாளரிடம் சென்று பணம் கொடுத்துஅவருக்கு வேண்டிய வசதிகளைசெய்து கொடுத்து நன்றாகக் கவனிக்கும் படி கேட்டுக் கொண்டான்.

அத்துடன் மூன்று நாட்களில் திரும்பி வருவதாகவும் எவ்வளவு செலவானாலும் வந்து கொடுக்கிறேன். நன்றாககவனியுங்கள்என்றுகூறிவிட்டுப்புறப்பட்டுச்சென்றான்.

ஒரு சமய அறிஞரிடம் இயேசுநாதர் சொன்ன கதை இது. இந்தக் கதையை அவரிடம் சொல்லிவிட்டு, "அந்த வழியாக வந்த மூவரில் அடிபட்டவருக்கு நண்பர் யார்?" என்று கேட்டார்.

"அதிலென்ன சந்தேகம்? அந்த ஆளுக்கு இரக்கம் காட்டி உதவி செய்த அந்த சமாரியன் தான் அவருடைய நண்பன்" என்றார் அவர்.

அதற்கு இயேசுநாதர் சொன்னார்;

'சமாரியன் யூதர்களுக்குப் பிடிக்காதவன். ஆனால் ஒரு யூதன் மற்றொரு யூதனுக்கு உதவி செய்யவில்லை. அடுத்த நாட்டுக்காரனான அந்த சமாரியன் தான் உதவினான்.

ஆகவே அவன் தான் அவனுக்கு அயலான்– அதாவது அடுத்திருப்பவன்' என்றார்.

அதுமட்டுமல்ல. "எவனொருவன் தன்னிடமும் தன் சுற்றத்தாரிடமும் காட்டும் அன்பைப் பிறரிடமும் காட்டுகிறானோ அவன்தான் நிலையான மோட்சவாழ்வைப் பெறுவான்" (லூக்கா 10: 25–37) என்றார் இயேசுநாதர்.

ஆக, உடன் பிறந்தவன் என்பதை விட உதவி செய்பவன் என்பது முக்கியம். உடன் பிறந்த பாசத்தை விடவும் உதவி செய்யும் நேசம் மேலானது. இந்தக் காலத்திலும் உதவி செய்பவர்கள் உண்டு. ஒருத்தர் சொன்னார்.

'சேர்... இன்று ஒரு பெரியவர் காரில் அடிபட்டுக் கீழே விழுந்துவிட்டார். அதைப் பார்த்தவுடன் ஓடிப்போய் முதலுதவி செய்தேன். காயங்களுக்குக் கட்டுப் போட்டேன். அதன்பின் அவரை உடனே ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போய்ச் சேர்த்தேன். நன்றாகக் கவனிக்கும் படி டாக்டரிம் சொன்னேன். எவ்வளவு பணம் செலவானாலும் நான் பார்த்துக் கொள்கிறேன் என்று சொல்லிவிட்டேன்" என்றார் பெருமையாக.

"அதுசரி... அந்தக் காரை ஓட்டிக் கொண்டு வந்து அந்தப் பெரியவர் மீது மோதியவர் என்ன ஆனார்?" என்றேன்.

"ஒன்றும் ஆகவில்லை... ஏனென்றால் காரை ஓட்டிக் கொண்டு வந்ததே நான்தான்!" என்றார்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# எழுத்தாளர் ஊக்குவிப்பு மையம் வழங்கும் தமிழியல் விருதுகள்

மட்டக்களப்பு எழுத்தாளர் ஊக்குவிப்பு மையம் ஈழத்திலும், வெளிநாடுகளிலும் வாழ்கின்ற ஈழத்து தமிழ்ப் படைப்பாளிகளை ஊக்குவிக்கும் நோக்கில் தமிழியல் விருதுகளை வழங்கி வருகிறது.

அந்த வகையில் 2008 ஆம் ஆண்டுக்கான தமிழியல் விருதுகள் எதிர்வரும் ஜனவரி மாத இறுதியில் வழங்கப்படவுள்ளன.

2008 ஆம் ஆண்டுக்கான தமிழியல் விருது பெறும் மூத்த படைப்பாளிகளினதும் சிறந்த நூல்களினதும் விபரம் வருமாறு,

**உயர் தமிழியல் விருது**

எழுத்தாளர் ஊக்குவிப்பு மைய ஸ்தாபகர் ஓ.கே. பாக்கியநாதன் உயர் தமிழியல் விருது சர்வதேச புகழ்பெற்ற பிரபல திரைப்பட நெறியாளரும் ஒளிப்பதிவாளருமான பாலு மகேந்திராவுக்கு வழங்கிக் கௌரவிக்கப்படவுள்ளது.

**தமிழியல் வித்தகர் பட்டம்**

தமிழியல் வித்தகர் பட்டமும் தலா ரூபா 15 ஆயிரம் பொற்கிழியுடன் **இராம கிருஷ்ணா - கமலநாயகி தமிழியல் விருதும்** தமிழ் இலக்கிய மேம்பாட்டிற்கு உரமாய் நின்றுழைத்த மூத்த படைப்பாளிகளான:

அன்புமணி (இரா. நாகலிங்கம்), செங்கை ஆழியான் (க. குணராசா), தெளிவத்தை யோசேப், ஜின்னாஹ் ஷெரிபுத்தீன், அகளங்கன் (நா. தர்மராஜா) ஆகியோருக்கு வழங்கப்படுகிறது.

**2008 ஆம் ஆண்டு வெளிவந்த நூல்களிலிருந்து சிறந்த நூல்களாக தெரிவு செய்யப்பட்ட தமிழியல் விருதுக்கான நூல்கள் :**

**கவிதை**

புலவர் மணி ஆ.மு. ஷெரிப் புத்தீன் தமிழியல் விருதுடன் ரூபா. 10 ஆயிரம் பொற்கிழி பெறும் கவிதைக்கான இணை நூல்கள்.

எஸ். நளீம் எழுதிய '**இலைகள் துளிர்த்து குயில்கள் கூவும்**', அஷ்ரப் சிகாப்தீன் எழுதிய '**என்னைத் தீயில் எறிந்தவள்**'

**சிறுகதை**

புரவலர் ந. ஜெகதீசன் தமிழியல் விருதுடன் ரூபா. 10 ஆயிரம் பொற்கிழி பெறும் சிறுகதைக்கான இணைநூல்கள்.

த. ஆனந்த மயில் எழுதிய "**ஒரு எழுதுவினைஞனின் டைரி**", அ.ச. பாய்வா எழுதிய "**ஆத்ம விசாரம்**".

**நாவல்**

நாவலாசிரியை பவளசுந்தரம்மா தமிழியல் விருதுடன் ரூபா 10 ஆயிரம் பொற்கிழி பெறும் நாவலுக்கான இணைநூல்கள்

எஸ். ஏ. உதயன் எழுதிய "**லோமியா**", திக்குவல்லை கமால் மொழி பெயர்த்த "**குருதட்சணை**" (மொழிபெயர்ப்பு).

**சிறுவர் இலக்கியம்**

. செந்தமிழ்ச் செல்வர் சு. ஸ்ரீகந்தராஜா தமிழியல் விருதுடன் ரூபா. 10 ஆயிரம் பொற்கிழி பெறும் சிறுவர் இலக்கியத்திற்கான இணை நூல்கள்.

ஓ.கே. குணநாதன் எழுதிய "**கிச்சா**" (சிறுவர் கதை), ஆரையூர் அமரன் எழுதிய "**சிறுவர் குரல்**" (சிறுவர் பாடல்).

**நாடகம்**

கலைஞர் ஓ. கணபதிப் பிள்ளை தமிழியல் விருதுடன் ரூபா. 10 ஆயிரம் பொற்கிழி பெறும் நாடகத்திற்கான இணைநூல்கள்

எஸ். முத்துக்குமாரன் எழுதிய "**வீரவில்லாளி**" (வானொலி நாடகம்), நவாலியூர் நா. செல்லத்துரை எழுதிய "**சிலப்பதிகாரத்தில் சிலை எடுத்த சேரன்**" (மேடை நாடகம்)

**ஆய்வியல்**

புரவலர் சீ. ஏ. இராமஸ்வாமி தமிழியல் விருதுடன் ரூபா . 10 ஆயிரம் பொற்கிழி பெறும் ஆய்வியலுக்கான இணைநூல்கள்.

ஆ. மு.சி. வேலழகன் எழுதிய "**திருப்பழுகாமம் ஒரு சுருக்க வரலாறு**", எஸ். தில்லைநாதன் எழுதிய "**மட்டக்களப்புக் கோயில்களும் தமிழர் பண்பாடும்**"

**அறிவியல்**

**கல்விமான் க. முத்துலிங்கம்** தமிழியல் விருதுடன் ரூபா 10 ஆயிரம் பொற்கிழி பெறும் அறிவியலுக்கான இணைநூல்கள்.

பேராசிரியர் என். சண்முகலிங்கன் எழுதிய "**சமூகவியல் கோட்பாட்டு மூலகங்கள்**", காவலூர் இ. விஜேந்திரன் எழுதிய "**உலகின் மூன்றாவது கண்**"

**ஓவியம்**

ஓவியர் மாற்கு தமிழியல் விருதினை டாக்டர் ஆர் றுசாந்தன் (**கிக்கோ**) பெறுகின்றார்.

**வெளியீடு**

தமிழியல் விருது - 2008 தேர்வுக்காக அனுப்பிவைக்கப்பட்ட நூல்களில் அதிகூடிய 8 நூல்களை வெளியிட்ட வகையிலும் நாடகம், சிறுகதை, ஆய்வு, சிறுவர் இலக்கியம், பழந்தமிழ் இலக்கியம், கவிதை எனப் பல்துறைகளில் நூல்களை வெளியிட்ட வகையிலும், சிறந்த வெளியீட்டுத் துறைக்கான நாவலர் தமிழியல் விருது எழுத்தாளர் ஊக்குவிப்பு மையத்திற்கு வழங்கப்படுகின்றது. (ஓ-6)

# நூலகத்திற்கு அன்பளிப்புகள்

(கோண்டாவில்)

நல்லூர் பிரதேச சபையின் கொக்குவில் பொது நூலக ஆலோசனை சபை உறுப்பினரும், பிரசித்த நொத்தாரிசும் ஆன எஸ். தங்கமாமயிலோன் நூலகத்திற்கு நவீன இலத்திரனியல் சாதனங்கள் மற்றும் நூல்களை அன்பளிப்பு செய்துள்ளார் என நூலகர் அறிவித்துள்ளார். (ஓ-36)

# இராசி பலன்

24-12-2009
(மார்கழி 09 வியாழக்கிழமை)
சப்தமி காலை 6.45 மணிவரை
பூரட்டாதி முற்பகல் 8.57 மணிவரை
இராகுகாலம் 1.56-3.26 மணிவரை
சுபநேரம் 7.56-9.26 மணிவரை

| | |
|---|---|
| மேடம் | பிதாசிந்தை, கோபப்படுதல், எடுத்த காரியம் தாமதமாகும், சுபசெலவு. |
| இடபம் | எடுத்த காரியம் கைகூடும், தனதானிய சேர்க்கை, உறவினர் வருகை, போசன சுகம். |
| மிதுனம் | சுபநிகழ்வு, தொழில் ஆர்வம், முயற்சி கைகூடும், அதிகாரம். |
| கடகம் | அச்சமான நிலை, சரீரப் பிரயாசை, எதிர்பாராத செலவு, பயணம். |
| சிங்கம் | மரியாதைக்குறைவு, போசன சுகம், காரிய தாமதம், மனச் சஞ்சலம். |
| கன்னி | சென்ற இடத்தில் செல்வாக்கு, நண்பர்கள் சந்திப்பு, பொருள் சேர்க்கை, தேகநலன். |
| துலாம் | திடீர் பயணம், சுகவாழ்வு, உறவினர் தொடர்பு, தொழில் நன்மை. |
| விருச்சிகம் | புத்திரரால் கவலை, பணக் குறைவு, முயற்சி தாமதம், விவாதம். |
| தனுசு | பயந்த சுபாவம், ஆழ்ந்த சிந்தை, கல்வியில் ஆர்வம், ரோகநிலை. |
| மகரம் | பணவருவாய், அந்நியர் சந்திப்பு, பிரயாணம், வாக்கு மேன்மை. |
| கும்பம் | குடும்பக் கவலை, தனவிரயம், முயற்சி தாமதம், பெரியோர் உதவி. |
| மீனம் | போசன சுகம், அதிக பிரயாசை, நண்பர்கள் சந்திப்பு, சயன சுகம். |

வளவன்

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி |
|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 160 | 120 | 80 |
| உருளைக்கிழங்கு | 60 | 80 | 80 |
| பச்சைமிளகாய் | 280 | 320 | 300 |
| தக்காளி | 100 | 120 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 30 | 40 | 40 |
| கோவா | 70 | 70 | 80 |
| கரட் | 80 | 100 | 100 |
| பூசணி | 50 | 60 | 30 |
| புடோல் | 60 | 70 | 40 |
| வாழைக்காய் | 50 | 60 | 50 |
| சின்ன வெங்காயம் | 120 | 130 | 120 |
| பெரிய வெங்காயம் | 70 | 80 | 100 |
| பாகற்காய் | 90 | .120 | 140 |
| வெண்டிக்காய் | 50 | 60 | 40 |
| கரணைக்கிழங்கு | 30 | 40 | 40 |
| பயிற்றங்காய் | 100 | 120 | 100 |
| லீக்ஸ் | 100 | 120 | 100 |
| பீற்றூட் | 80 | 100 | -- |
| கறிமிளகாய் | 240 | 300 | -- |
| முருங்கைக்காய் | -- | -- | -- |
| போஞ்சி | 100 | 120 | 120 |
| கத்தரி தம்புள்ள | 90 | 100 | -- |
| கீரை - 1 பிடி | 30 | 40 | 20 |
| தேசிக்காய் | 100 | 80 | 120 |
| தேங்காய் (ஒன்று) | 35 | 40 | 30 |

# மணிவிழாவும் மலர்வெளியீடும்

(யாழ்ப்பாணம்)

கலைமணி சனசமூக நிலையத்தின் மணிவிழாவும் மலர்வெளியீட்டு விழாவும் எதிர்வரும் 27 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு கட்டப்பிராய் ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலய கல்யாண மண்டபத்தில் கலைமணி சனசமூக நிலையத் தலைவர் சி.இலட்சுமிகாந்தன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் க.சுரேஸ் பிரேமச்சந்திரன் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக கோப்பாய் பிரதேச செயலர் சி.ஏ.மோகன்றாஸ், யாழ். மாவட்ட காசநோய் கட்டுப்பாட்டு அதிகாரி வைத்தியகலாநிதி சி.யமுனாநந்தா, வலி. கிழக்கு பிரதேசசபை செயலாளர் த.நடராஜா, யாழ்ப்பாணம் வர்த்தக சங்கத் தலைவர் லயன் இ.ஜெனக்குமார் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

நூலின் முதற்பிரதியை பிரதம விருந்தினரிடமிருந்து பிரபல வர்த்தகர் இ.எஸ்.பி. நாகரட்ணம் பெற்றுக்கொள்வார்.

அத்துடன் நூல் வெளியீட்டுரையை வலம்புரி நாளிதழின் பிரதம ஆசிரியர் என்.விஜயசுந்தரம், நூல் ஆய்வுரையை எழுத்தாளர் சோ. பத்மநாதன் ஆகியோர் நிகழ்த்தவுள்ளதுடன் மாணவிகளின் கலைநிகழ்வுகளும் இடம்பெறவுள்ளது. (ஓ-6)

# பகிரங்க அரசியல் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

புதிய ஜனநாயகக் கட்சியின் வட பிரதேசக் குழுவின் ஏற்பாட்டில் ஜனாதிபதித் தேர்தலும் தமிழ் மக்களின் எதிர்காலமும் எனும் தலைப்பிலான பகிரங்க அரசியல் கருத்தரங்கு நாளை மறுதினம் சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு யாழ். ப.நோ.கூ.சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

புதிய ஜனநாயகக் கட்சியின் வடபிரதேச செயலாளர் தோழர் கா. கதிர்காமநாதன் தலைமையில் நடைபெறும் இக் கருத்தரங்கில் கட்சியின் பொதுச் செயலாளர் தோழர் சி.கா.செந்திவேல் பிரதான உரைநிகழ்த்தவுள்ளார்.

இந்நிகழ்வில் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு ஏற்பாட்டுக்குழுவினர் கேட்டுக்கொள்கின்றனர். (ஓ-6)

# இசைவிழா-2009

(யாழ்ப்பாணம்)

வவுனியாத் தமிழ்ச்சங்கம் நடத்தும் இசைவிழா 2009 நேற்று புதன்கிழமை ஆரம்பமாகி எதிர்வரும் 27 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை 5 தினங்கள் வவுனியா முத்தையா கலாமண்டபத்தில் நடைபெற்றுவருகிறது.

இந்நிகழ்வில் வவுனியா த யாழ்ப்பாணம் , மன்னார், முல்லைத்தீவு, கொழும்பு மாவட்டக் கலைஞர்கள் பங்குபற்றுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஓ-6)

# தாராக்குளம் வீடமைப்புத் திட்டம் குடியிருப்பாளர்களிடம் கையளிப்பு

(யாழ்ப்பாணம்)



யாழ்.வைத்தியசாலை வீதியில் அமைந்துள்ள தாராக்குளம் வீடமைப்புத் திட்டத்தின் வீடுகளை அவ் வீடுகளின் குடியிருப்பாளர்களிடம் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கையளித்துள்ளார்.

யுத்தம் காரணமாக மேற்கொள்ளப்பட்டிருந்த பாதுகாப்பு ஏற்பாடுகள் காரணமாக பல வருடங்களாக மக்கள் பாவனைக்கு விடப்படாதிருந்த இவ் வீடுகளை மக்களது பாவனைக்காக விடுவிப்பதற்கான நடவடிக்கைகளை சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேற்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

இந்நிகழ்வில் யாழ். மாநகர முதல்வர், பிரதி முதல்வர், யாழ்.பிரதேச செயலாளர், வீடமைப்பு அதிகாரசபையின் உயரதிகாரிகள், பாதுகாப்புத் தரப்பு உயரதிகாரிகள் உட்பட பலர் கலந்துகொண்டனர். (ஓ)

# சிவத்தமிழ் செல்வி அன்னையின் 85 ஆவது பிறந்தநாள் அறக்கொடைவிழா

(யாழ்ப்பாணம்)

சிவத்தமிழ்ச் செல்வி அன்னை கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் 85 ஆவது பிறந்தநாள் அறக்கொடை விழா ஜனவரி மாதம் 7 ஆம் திகதி வியாழக்கிழமை, தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தான அன்னபூரணி மண்டபத்தில் செஞ்சொற் செல்வர் ஆறு.திருமுருகன் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக கொழும்பு வெள்ளவத்தை சாரதா ஆச்சிரம ஸ்தாபகர் செல்வி வள்ளிநாயகி கணபதிப்பிள்ளை கலந்து சிறப்பிக்கவுள்ளதுடன் சிறப்பு விருந்தினர்களாக யாழ். மாவட்ட மேலதிக அரச அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம், கௌரவ விருந்தினராக அகில இலங்கை இந்துமாமன்றச் செயலாளர் கந்தையா நீலகண்டன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

நிகழ்வில் சான்றோர் கௌரவிப்பு முக்கிய நிகழ்வாக இடம்பெறவுள்ளது. இதில் திருகோணமலையைச் சேர்ந்த இளைப்பாறிய ஆசிரியர்களான, சைவத் தமிழ் பணியாற்றி வரும் பெரியவரான "காந்தி ஐயா" என அழைக்கப்படும் வ.கந்தையா சிவயோக சமாஜத்தில் பல வருடங்களாக சைவத் தமிழ் தொண்டாற்றிய திருமதி பராசக்தி நவரத்தினம் ஆகியோருடன் மாவிட்டபுரத்தைச் சேர்ந்த மூத்த நாதஸ்வர வித்துவான் கலாபூஷணம் ஞானசுந்தரம், இளைப்பாறிய ஆசிரியரும் கீரிமலை சிவநெறிக்கழகத்தை ஸ்தாபித்து சைவத் தமிழ் பணியாற்றிய ச. விநாயகரத்தினம் ஆகியோர் கௌரவிக்கப்படவுள்ளனர். (ஓ)




# கடமை நிறைவேற்று அதிபர்களுக்கான கலந்துரையாடல்

(அல்வாய்)

யாழ்.மாவட்டப் பாடசாலைகளில் கடமை நிறைவேற்று அதிபர்களாகக் கடமையாற்றும் ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல் எதிர்வரும் 28 ஆம் திகதி முற்பகல் 10 மணியளவில் யாழ்.ஆரியகுளத்திற்கு முன்பாக அமைந்துள்ள புதிய உயர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இக் கலந்துரையாடலைத் தொடர்ந்து இவ்வாசிரியர்களை நிரந்தர அதிபர்களாக்கும் கோரிக்கையை சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் முன்வைக்கவுள்ளதால் அனைத்துக் கடமை நிறைவேற்று அதிபர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு இதன் ஏற்பாட்டாளரான வல்வை றோ. க.த.க.பாடசாலை அதிபர் நா.கண்ணதாசன் கேட்டுக்கொள்கின்றார். (ஓ-19)

# ஊர் சுற்று ஓட்டப்போட்டி தொடர்பான கலந்துரையாடல்

வடமாகாண ஊர்சுற்று ஓட்டப்போட்டி எதிர்வரும் ஜனவரி மாதம் 9 ஆம் திகதி *கரவெட்டி பிரதேச செயலர் பிரிவில்* நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.இப்போட்டி தொடர்பான முன்னாயத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளல் தொடர்பான கலந்துரையாடல் எதிர்வரும் 29 ஆம் திகதி முற்பகல் 9 மணிக்கு *கரவெட்டி பிரதேச செயலகத்தில்* பிரதேச செயலரின் தலைமையில் நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடலில் சகல பிரதேச செயலக விளையாட்டு அலுவலர்கள், கரவெட்டி பிரதேச செயலகப் பிரிவு கிராம சேவை உத்தியோகத்தர்கள், வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர், அப் பிரதேச பாடசாலை அதிபர்கள் ஆகியோரை தவறாது கலந்துகொள்ளுமாறு வடமாகாண விளையாட்டுத் திணைக்களப் பணிப்பாளரினால் கோரப்பட்டுள்ளது. (ஓ)

# 'ஞானச்சுடர்' ஆன்மீக சஞ்சிகை வெளியீடு

(பருத்தித்துறை)

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலயச்சூழலில் அமைந்திருக்கும் சந்நிதியான் ஆச்சிரம கலைபண்பாட்டுப் பேரவையினரால் மாதந்தோறும் வெளியிடப்படும் "ஞானச்சுடர்" ஆன்மீக சஞ்சிகையின் மார்கழி மாத இதழ் நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் வெளியிடப்படவுள்ளது.

நிகழ்வில் வெளியீட்டுரையை குப்பிளான் கிராம அலுவலர் சோ.பரமநாதன் மற்றும் மதிப்பீட்டுரையை சாவகச்சேரி பிரதிக் கல்விப் பணிபாளர் ஆ.ஸ்ரீஸ்கந்தமூர்த்தி ஆகியோர் வழங்கவுள்ளனர். (ஓ-35)

# ஒட்டிசுட்டான் பிரதேசத்தில் 328 பேர் மீள்குடியேற்றம்

(வடமராட்சி கிழக்கு)

முல்லைத்தீவு ஒட்டிசுட்டான் பிரதேச செயலாளர் பிரிவில் முதல் கட்டமாக கடந்த 21 ஆம் திகதி திங்கட்கிழமை திருமுறிகண்டி கிராமசேவையாளர் பிரிவைச் சேர்ந்த 101 குடும்பங்களைச் சேர்ந்த 328 பேர் மீளக் குடியமர்த்தப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கு 5ஆயிரம் ரூபா பணமும் அத்தியாவசியப் பொருட்களும் உலர் உணவு முத் திரைகளும் வழங்கப்பட்டுள்ளது. திருமுறிகண்டி பகுதி முத்தையன்கட்டு ப.நோ. கூட்டுறவுச் சங்கத்தின் கிளைக் கடைகள் இரண்டும் உபதபால் அலுவலகமும் இயங்கத் தொடங்கியுள்ளனர்.

மேலும் முத்தையன்கட்டு பிரதேச செயலாளர் அலுவலகமும் தற்காலிகமாக திருமுறிகண்டி கிராமசேவையாளர் பிரிவில் இயங்குகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஓ-4-99)

# கிறிஸ்மஸ் தினம்

(யாழ்ப்பாணம்)

யாழ். திருநெல்வேலி ஸ்ரீ சத்திய சாயி சேவா நிலையத்தின் கிறிஸ்மஸ் தினவிழா நாளை வெள்ளிக்கிழமை மாலை 3 மணிக்கு நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் இசைநாடகம், கிறிஸ்தவ கீதங்கள் என்பன இடம்பெறவுள்ளதுடன் வணபிதா. டாக்டர் ஏ.எவ்.ஏச். ஜெயசேகரன் கிறிஸ்மஸ் நற்செய்தியை வழங்கவுள்ளார். (6-4)

# பளைப் பிரதேசத்தில் ஜனவரியில் மீள்குடியேற்றம்

(வடமராட்சி கிழக்கு)

கிளிநொச்சி பளை பிரதேச செயலாளர் பிரிவில் எதிர்வரும் ஜனவரி மாதம் 5ஆம் திகதிக்குப் பின் மீளக்குடியமர்த்துவதற்காக முதற்கட்டமாக புலோப்பளை கிழக்கு, புலோப்பளை மேற்கு, இத்தாவில் பளைநகரம் ஆகிய நான்கு கிராமசேவையாளர் பிரிவுகளைச் சேர்ந்த ஆயிரம் மக்கள் அழைக்கப்படவுள்ளனர்.


இதேவேளை பளை பிரதேச செயலகமும் பிரதேச சபையும் எதிர்வரும் ஜனவரி முதலாம் திகதி முதல் தமது பளைப் பகுதியிலுள்ள சொந்த அலுவலகத்தில் இயங்கவிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (ஓ-4-99)

# வான்கோழிகள் விற்பனை


(யாழ்ப்பாணம்)

அச்சுவேலியில் அமைந்துள்ள கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களத்தினது பிராந்திய கோழிப்பண்ணையில் வயது நிரம்பிய வான்கோழிகள் இறைச்சித் தேவைக்காக மட்டுப்படுத்தப்பட்ட அளவில் விற்பனைக்குள்ளதாகவும் இவ் வான்கோழிகள் கிலோ ஒன்று (உயிர்நிறை) ரூபா 400 வீதம் விற்பனை செய்யப்படவுள்ளதாகவும் யாழ். கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்கள உதவிப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

அத்துடன் தேவையானோர் 021-3211366 இலக்க தொலைபேசி மூலமோ அல்லது நேரிலோ தொடர்பு கொண்டு வேண்டிய வான்கோழிகளைப் பெற்றுக் கொள்ளலாம் எனவும் அறிவித்துள்ளார். (ஓ)



சாவகச்சேரி பிரதேசசபையின் சரசாலைப் பொதுநூலகம் நடத்திய தேசிய வாசிப்பு மாத பரிசளிப்பு விழாவில் சாவகச்சேரி கமநல சேவைகள் நிலைய விவசாய போதனாசிரியர் சு.விஜயகுமார் மங்கல விளக்கேற்றுவதையும் , அருகில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ்.பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திருமதி மதுமதி வசந்தகுமார், ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் தென்மராட்சி அமைப்பாளர் சாள்ஸ் மற்றும் ஜெயக்குமார் ஆகியோர் நிற்பதையும், நூலகர் இ.தர்மலிங்கம் உரையாற்றுவதையும் படங்களில் காணலாம். (படங்கள் :- சாவகச்சேரி நிருபர்)

தேசிய பயிலுனர் கைத்தொழில் பயிற்சி அதிகார சபையும் ஹொல்சிம் லங்கா நிறுவனமும் இணைந்து மந்துவில் கிழக்கு மற்றும் மேற்கில் ஆரம்பித்து வைத்த நலன்புரி முகாமில் இருந்து வந்துள்ள இளைஞர், யுவதிகளுக்கான கட்டடக்கலை பயிற்சி நெறியின் ஆரம்ப நிகழ்வில் தேசிய பயிலுனர் கைத்தொழில் பயிற்சி அதிகார சபையின் வட மாகாண உதவிப்பணிப்பாளர் ஜெயக்குமார் மற்றும் ஹொல்சிம் மற்றும் நிறுவன அதிகாரி பாலித ஆகியோர் இணைந்து பயிற்சி நிலையத்தை நாடாவெட்டி திறந்து வைப்பதையும் அருகில் பயிற்சி நெறியின் பரிசோதகரும் ஆங்கில ஆசிரியருமான கே.கணேஷ்வரன் நிற்பதையும் ,முன்னைய பயிற்சி நெறியை பூர்த்தி செய்த மாணவனுக்கு சான்றிதழ் வழங்கப்படுவதையும் படங்களில் காணலாம்.

## அவசர அலுவல்களின் நிமித்தம்

# கொழும்புக்கு வருவோர் பொலிஸில் பதிய வேண்டிய அவசியமில்லை

## பொலிஸ் தலைமையகம் அறிவிப்பு

(கொழும்பு)

அவசர அலுவல்களின் நிமித்தம் கொழும்புக்கு வருபவர்கள் பொலிஸில் பதிவு செய்ய வேண்டிய அவசியம் கிடையாது என பொலிஸ் தலைமையகம் அறிவித்துள்ளது.

இது தொடர்பில் சகல பிரதிப் பொலிஸ்மா அதிபர்கள் ஊடாக பொலிஸாருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளதாகப் பொலிஸ் பேச்சாளரும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருமான ஐ.எம். கருணாரட்ன தெரிவித்துள்ளார்.

அத்தியாவசிய அவசர அலுவல்கள் நிமித்தமும் உறவினர்களைப் பார்ப்பதற்காகவும் மற்றும் ஏனைய தேவைகளுக்காகவும் கொழும்புக்கு வந்து தங்குபவர்கள் பொலிஸில் பதியவேண்டிய தேவை கிடையாதெனப் பொலிஸ் பேச்சாளர் கூறினார்.

பதிவு நடைமுறையின் காரணமாக தமிழ் மக்கள் எதிர்நோக்கும் பல்வேறு பிரச்சினைகள் குறித்து ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் பாராளுமன்ற உறுப்பினருமான பஷில் ராஜபக்ஷவின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டதையடுத்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக திங்கட்கிழமை பொலிஸ் தலைமையகத்தில் நடைபெற்ற சிரேஷ்ட பொலிஸ் மா அதிபர்களின் கூட்டத்தில் அறிவிக்கப்பட்டதாகப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் கருணாரட்ன மேலும் கூறினார்.

இதுவரை காலம் வடக்கு கிழக்கு மற்றும் மலையகப் பகுதிகளிலிருந்து கொழும்புக்கு வருபவர்கள் எதிர்நோக்கிய அசௌகரியங்களைக் களையும் பொருட்டு அரசாங்கம் இந்தத் துரித நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது. (2-6)

# உள்ளூராட்சி மன்றங்களின் பதவிக்காலம் மேலும் ஒருவருட காலத்துக்கு நீடிப்பு

உள்ளூராட்சி மன்றங்களின் உறுப்பினர்களின் பதவிக்காலத்தை மேலும் ஒருவருட காலத்திற்கு நீடிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதன்படி 2011 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31ஆம் திகதி வரை உள்ளூராட்சி மன்றங்களின் உறுப்பினர்களின் பதவிக் காலம் நீடிக்கப்படவுள்ளதாக மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் ஜனக பண்டார தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

மாநகர சபைகள் நகர சபைகள் மற்றும் பிரதேச சபைகள் ஆகியவற்றின் உறுப்பினர்களின் பதவிக்காலம் எதிர்வரும் 2010ஆம் ஆண்டு ஏப்ரல் மே மற்றும் ஜுன் மாதங்களுடன் முடிவடைய வேண்டும். எனினும் அவர்களின் பதவிக் காலத்தை எதிர்வரும் 2011 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31ஆம் திகதி வரை நீடிப்பதற்கு அமைச்சர் ஜனக பண்டார தென்னக்கோன் நடவடிக்கை எடுத்துள்ளார்.

மாநகர சபைகள் நகர சபைகள் மற்றும் பிரதேச சபைகள் கட்டளைச் சட்டத்தின் அடிப்படையில் அமைச்சருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் கீழ் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

எனினும் 2011 ஆம் ஆண்டு மார்ச் 31ஆம் திகதிக்கு முன்னர் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்தும் நோக்கில் திகதியை நியமிப்பதற்கு அமைச்சருக்கு அதிகாரம் உள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (6)

## சமுர்த்தி பயனாளிகளின் நன்மை கருதி

# சமுர்த்தி வங்கிகளில் கடனுக்கான வட்டி குறைப்பு

(கொழும்பு)

அரசாங்க வங்கிகளில் கடனுக்கான வட்டி வீதம் குறைப்பு செய்யப்பட்டுள்ளதனை அடுத்து சமுர்த்தி வங்கிகளிலும் கடன் பெறுனர் நன்மை கருதி அவர்கள் பெறும் கடனுக்கான வட்டி வீதம் குறைக்கப்பட்டுள்ளதாக சமுர்த்தி அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் ஆர்.பி. பந்துல திலகசிறி தெரிவித்துள்ளார்.

அரசாங்க வங்கிகளில் கடன் பெறுவோர் தமது கடனுக்கான வட்டியாக 12 வீதம் தொடக்கம் 8 சதவீதம் வரையில் செலுத்த முடியுமென அறிவிப்புச் செய்யப்பட்டதனை அடுத்து சமுர்த்தி வங்கிகளிலும் சமுர்த்தி பயனுகரிகள் பெறும் சுயதொழில் கடன், விவசாயக் கடன், மீன்பிடிக் கடன்களுக்கான வட்டிவீதங்களும் 12 முதல் 8 சதவீதம் வரை குறைப்பு செய்யப்பட்டு சமுர்த்தி நன்மை பெற்று வரும் குடும்பங்கள் தமது தொழிற்துறைகளை மேலும் விருத்தி செய்து வருமான அதிகரிப்புச் செய்யும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை சமுர்த்தி வங்கிகள் தன்னிடம் உள்ள மேலதிக நிதியினை அரசாங்க வங்கிகளில் நிலையான வைப்பிலிட்டு வருமானம் ஈட்டி வருகின்றன. தற்போது நிலையான வைப்புகளுக்கு 7 சதவீதமான வட்டியே வழங்கப்படுவதால் சமுர்த்தி வங்கிகளில் வருமானத்தில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

நிலையான வைப்பிலிடும் தொகையினைக் குறைத்து சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் சமுர்த்தி பயனாளிகளுக்கு வீட்டுக்கடன் , இடர் கடன், மோட்டார் சைக்கிள் கடன் போன்றவற்றினை வழங்கி சமுர்த்தி வங்கிகளின் வருமான மட்டத்தை உயர்த்துவதற்கான நடவடிக்கையினையும் இலங்கை சமுர்த்தி அதிகார சபை மேற்கொண்டு வருவதாக பணிப்பாளர் நாயகம் பந்துல திலகசிறி மேலும் தெரிவித்துள்ளார். (ஓ-2-6)

# அரசியல் இருப்புக்காக அமைச்சுப் பதவி இலஞ்சமா?

## -ஜே.வி.பி. கண்டிப்பு-

(கொழும்பு)

அரசியல் இருப்பைத் தக்க வைத்துக் கொள்வதற்காக அமைச்சுப் பதவிகளை இலஞ்சமாகக் கொடுத்து ஆதரவு திரட்டிக் கொண்டிருக்கும் ஆளும் தரப்பு வேட்பாளர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் அருவருக்கத்தக்க அரசியலை வன்மையாகக் கண்டிப்பதாக ஜே.வி.பி. அறிவித்துள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து அரசு பக்கம் இறுதியாகத் தாவிய இரு உறுப்பினர்களுக்கும் வழங்கப்பட்டுள்ள அமைச்சுப் பதவிகளை உடனடியாக இரத்துச் செய்ய வேண்டுமென்று அரசாங்கத்தை வலியுறுத்துவதுடன் ஜனநாயகத்திற்கும் ஒழுக்கத்திற்கும் எதிரான அரசியலைத் தோற்கடிப்பதற்காக அணி திரளுமாறு நாட்டு மக்களைக் கோருவதாக அக்கட்சி விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அவ்வறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது,

ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து விலகிய எம்.பி.க்களான ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ மற்றும் இந்திக பண்டாரநாயக்க ஆகியோருக்கு தற்போது ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அமைச்சுப் பதவிகளை வழங்கியுள்ளார்.

தனக்கு இருக்கும் நிறைவேற்று அதிகாரத்தைப் பயன்படுத்தி தனது தனிப்பட்ட அரசியல் தேவைக்காக அமைச்சுப் பதவிகளை அதிகரித்திருப்பதன் மூலம் உலகிலேயே அதிகமான அமைச்சர்களைக் கொண்ட நாடாக எமது நாடு விளங்குகின்றது.

இறுதியாக வழங்கப்பட்டுள்ள இரண்டு அமைச்சு நியமனங்களால் நாட்டுக்கோ அல்லது பொது மக்களுக்கோ எந்தவிதமான நன்மையும் ஏற்படப் போவதில்லை. இன்னும் சில மாதங்களில் பொதுத் தேர்தல் ஒன்றுக்கு முகம் கொடுக்கவிருப்பதால் மேற்குறிப்பிட்ட அமைச்சுப் பதவிகளில் இருந்து ஆகப் போவது ஒன்றுமில்லை.

அரசியல் இருப்பு மற்றும் அதிகாரத்தை தக்க வைத்துக்கொள்வதற்காகவே இத்தகைய தீர்மானங்களை அரசு நிறைவேற்றிக் கொண்டிருக்கின்றது.

ஜனாதிபதித்தேர்தல் அறிவிக்கப்பட்டதன் பின்னரே இந்த அமைச்சுப் பதவிகள் வழங்கப்பட்டுள்ளன என்பது யாவரும் அறிந்த விடயமாகும்.

அமைச்சுப்பதவிகளை வழங்குவது தேர்தல் சட்டவிதிகளுக்குள் அடங்காதது என்றாலும் இந்த நியமனங்கள் அரசியல் ஒழுக்க நெறியின் பிரகாரம் தவறானதாகும்.

அத்தோடு தமது ஆதரவை அதிகரித்துக்கொள்வதற்கு இலஞ்சமாக அமைச்சுப் பதவிகள் வழங்கப்பட்டமை தான் சிக்கலானது என்று கூறியுள்ளது. (6-2)


## அரசாங்க அதிபரின் அறிவித்தல்

**மணல் விநியோகம் தொடர்பானது**

யாழ். மாவட்ட செயலகத்தினால் 2009.11.20ஆம் திகதிவரை வழங்கப்பட்டிருந்த மணல் அனுமதிப் பத்திரங்களுள் ஒரு குறிப்பிட்டளவு அனுமதிப் பத்திரங்களுக்கான மணல் இதுவரை பெறப்படவில்லை.

இவ் அனுமதிப் பத்திரங்களுக்கான மணலை 2010 ஜனவரி 31ஆம் திகதி வரை முன்னுரிமை அடிப்படையில் பெறுவதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

எனவே யாழ். மாவட்டச் செயலகத்தினால் வழங்கப்பட்ட மணல் அனுமதிப் பத்திரங்களை வைத்திருக்கும் பயனாளிகள் தமக்குரிய மணலை 2010 ஜனவரி 31ஆம் திகதிக்கு முன்னர் பெறுமாறும், அதற்குப் பின்னர் இவ் அனுமதிப் பத்திரங்கள் செல்லுபடியற்றவை ஆகிவிடும் எனவும் பயனாளிகளுக்கு தெரியப்படுத்தப்படுகின்றது.

ஒப்பம்: க.கணேஷ்
அரசாங்க அதிபர்,
மாவட்டச் செயலகம்,
யாழ்ப்பாணம்.

(C-4029)

# இடியும் நிலையிலுள்ள பக்கிங்ஹாம் அரண்மனை

## பொதுமக்கள் பார்வைக்குத் தடை



(லண்டன்)

இங்கிலாந்து நாட்டில் லண்டன் நகரில் உள்ள பக்கிங்ஹாம் அரண்மனை இடியும் நிலையில் இருப்பதால் அதை கிறிஸ்மஸ் பண்டிகையின் போது மூடுவதற்கு ராணி எலிசபெத் திட்டமிட்டிருக்கிறார்.

லண்டனில் உள்ள பக்கிங்ஹாம் அரண்மனையில் அரச குடும்பத்தினர் தங்கியிருக்கிறார்கள். பொதுவாக கிறிஸ்மஸ் பண்டிகை உள்ளிட்ட நாட்களில் இந்த அரண்மனை பொதுமக்கள் பார்வையிடுவதற்காக திறக்கப்படும். இந்த ஆண்டு இந்த அரண்மனை பொதுமக்கள் பார்வையிடுவதற்கு அனுமதிப்பது இல்லை என்றும் அரண்மனையை மூடி விடுவது என்றும் ராணி எலிசபெத் திட்டமிட்டிருக்கிறார்.

அரண்மனை கட்டிடம் இடியும் நிலையில் உள்ளதால் இந்த நடவடிக்கையை அவர் எடுக்கவுள்ளார்.

சமீப காலமாக சுவர்களில் பதிக்கப்பட்டுள்ள கற்கள் விழுந்து வருகின்றன. இப்படி ஒருமுறை கற்கள் விழுந்ததில் பாதுகாப்பில் ஈடுபட்டிருந்த பொலிஸ்காரர் ஒருவர் லேசாக காயம் அடைந்தார். இதேபோல இளவரசி ஆன்னி பயணம் செய்த கார், அரண்மனையின் வரவேற்பு அறையில் வந்து நின்றபோது கட்டடத்தின் கற்கள் விழுந்தன. இதில் இளவரசி மயிரிழையில் தப்பினார்.

அரண்மனையின் தரையில் கீறல்கள் விழுந்துள்ளன. இதனால் அரண்மனை ஊழியர்கள் நடப்பதற்குக் கூட இயலாமல் அவதிப்படுகிறார்கள்.

இதனால் ராணி எலிசபெத் அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தினார். அதன்பிறகு அரண்மனைகள் மூடிவிடுவது என்று முடிவு எடுத்திருக்கிறார். அரண்மனையை அடுத்த ஆண்டு பழுது பார்ப்பது என்றும் முடிவு எடுக்கப்பட்டது. இதற்கு 310 கோடி ரூபாய் செலவாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்தத் தொகையை ஒதுக்கும்படி அரசாங்கத்தை அரண்மனை அதிகாரிகள் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். (ஓ)

# சவூதியின் வான் தாக்குதல்களில் 54 யேமன் மக்கள் பலி

சவூதி அரேபியா நடத்திய வான் தாக்குதல்களில் சுமார் 54 யேமன் மக்கள் பலியாகியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சவூதி அரேபிய வான் படை விமானங்களினால் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக யேமனிய ஹூத்தி கிளர்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

கடந்த வாரம் சவூதி அரேபிய விமானங்கள் நடத்திய தாக்குதலில் சுமார் 70 அப்பாவிப் பொதுமக்கள் உயிரிழந்துள்ளதாக கிளர்ச்சியாளர்கள் குற்றம் சுமத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

கடந்த ஓகஸ்ட் மாதம் முதல் யேமனிய கிளர்ச்சியாளர்களுக்கும், சவூதி அரேபிய படையினருக்கும் இடையில் மோதல்கள் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

யேமனிய சிறுபான்மை சமூகமான ஹூத்தி மக்கள், பெரும்பான்மை ஷியா முஸ்லிம்களுக்கு எதிராகப் போரட்டங்களை நடத்தி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

1962 ஆம் ஆண்டு முடிவுக்குக் கொண்டு வரப்பட்ட சயிடி சட்டங்கள் மீளவும் அமுல்படுத்தப்பட வேண்டுமென ஹூத்தி கிளர்ச்சியாளர்கள் கோரிக்கை விடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

யேமனிய அரசாங்கத்திற்கு எதிரான கிளர்ச்சிகளை தடுப்பதற்கு சவூதி அரேபியா நேரடி உதவிகளை வழங்கி வருகின்றது.

இதன்காரணமாகவே சவூதி அரேபிய படையினருக்கும், யேமனிய ஹூத்தி கிளர்ச்சியாளர்களுக்கும் இடையில் மோதல்கள் நடைபெற்று வருகின்றன. (ஓ)




# அமெரிக்க சிற்றி வங்கி கொள்ளைக்கும் ரஷ்யாவின் சைபர் குழுவிற்கும் தொடர்பு ?

## அமெரிக்க பத்திரிகை சந்தேகம்

(வோஷிங்டன்)

சிற்றி வங்கியில், ஐந்து கோடி ரூபாய் கொள்ளையடிக்கப்படக்காரணமாக அமைந்த, கணனி பாதுகாப்புத் தகர்ப்புக்குறித்து, பெடரல் புலனாய்வு நிறுவனம் விசாரணை நடத்தி வருகிறது. இதில், ரஷ்யாவின் சைபர் குழுவிற்கு தொடர்பிருக்கலாம் என, அமெரிக்க பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

"ஹேக்கிங்" என்பது கணனி மென்பொருளில் இருந்து அடிப்படைத் தகவல்களை திருடும் கலையாகும். இதை இத்துறையில் சாமர்த்தியம் நிறைந்தவர்கள் மட்டுமே கையாள முடியும். ஆகவே, ரஷ்யாவில் உள்ள நுணுக்கம் தெரிந்த, "சைபர் குழு" ஈடுபட்டிருக்கிறது என்று சந்தேகிக்கப்படுகிறது.

இதுகுறித்து அமெரிக்காவின் வால்ஸ்ட்ரீட் பத்திரிகை வெளியிட்டுள்ள செய்தியில் சிற்றி வங்கியின் முதன்மை நிறுவனமான, சிற்றி குழுமத்தில், அரசுக்கு தற்போது 27 சதவீதம் பங்குகள் உள்ளன. ரஷ்ய வர்த்தக நெட்வேர்க்கில் இருந்து இணையத்தள முகவரி மூலமாக சந்தேகிக்கப்படும் வகையிலான பரிவர்த்தனைகள் நடைபெறுவதை, அமெரிக்க முதலீட்டாளர்களே முதலில் கண்டறிந்தனர்.

இதற்குத் தேவையான சாதனங்கள் மற்றும் மென்பொருட்களை ரஷ்ய குழு ஒன்று விற்பனை செய்கிறது. இவர்கள், பணத்தை கொள்ளையடிப்பதோடு, வங்கி தொடர்பான தகவல்களை அழித்துவிடலாம் என பாதுகாப்பு அதிகாரிகள் அச்சம் தெரிவித்துள்ளனர்.

நியூயோர்க் நகரைச் சேர்ந்த ரொபர்ட் பிளான்கார்டு என்பவர், யாரோ சிற்றி வங்கியில் உள்ள தன் கணக்கில் இருந்து, ஐந்து கோடி ரூபாயைத் திருடியதாக தெரிவித்துள்ளார். பின்னர், அந்தப் பணம் மீட்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. இவ்வாறு அந்த செய்தியில் கூறப்பட்டுள்ளது. (ஓ-2-6)

# பெண்ணை கடத்தி காயப்படுத்தியவர்களுக்கு மூக்கையும் காதுகளையும் வெட்ட உத்தரவு

## பாகிஸ்தான் நீதிமன்றம் தீர்ப்பு

பாகிஸ்தானின் லாகூர் நகரிலுள்ள நீதிமன்றமொன்று பெண்ணொருவரை கடத்திச் சென்று காயப்படுத்திய இருவருக்கு மூக்கையும் காதுகளையும் வெட்ட உத்தரவிட்டுள்ளது.

மேற்படி இருவரும் தம்மை திருமணம் செய்ய மறுத்த பெண் ஒருவரை கடத்திச் சென்று அவரது மூக்கையும் காதுகளையும் அறுத்துள்ளனர்.


இந்நிலையில் இந்த இருவரையும் விசாரித்த நீதிபதி காலீத் நவீத்டார் அவ்விருவருக்கும் மூக்கையும் காதுகளையும் வெட்ட உத்தரவிட்டுள்ளார்.

அத்துடன் குற்றவாளிகள் இருவருக்கும் ஆயுள் சிறைத் தண்டனையையும் தலா 7 இலட்சம் பாகிஸ்தான் ரூபா வீதம் தண்டப் பணத்தையும் விதித்து அவர் தீர்ப்பளித்தார். (6-2)

# சர்தாரி மீதான ஊழல் வழக்குகளை இரத்து செய்தது என் தவறு

## முஷாரப் தெரிவிப்பு

(இஸ்லாமாபாத்)



அவசர சட்டத்தின் கீழ் ஊழல் வழக்குகளை இரத்து செய்தது நான் செய்த தவறு என பாகிஸ்தான் முன்னாள் அதிபர் முஷாரப் தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தான் அதிபராக இருப்பவர் ஆசிப் அலி சர்தாரி பெனாசிர் பூட்டோ பிரதமராக இருந்த போது சர்தாரி நிறைய ஊழல் செய்ததாக ஏராளமான வழக்குகள் பதிவு செய்யப்பட்டன. அரசு நிர்வாகப் பணிகளுக்கு போடப்படும் ஒப்பந்தங்களில் 10 முதல் 20 சதவீதம் வரை இலஞ்சமாகப் பெற்றவர் என்று வெளிப்படையாக உலக அரங்கில் பேசப்பட்ட புகார் உண்டு. 2007ஆம் ஆண்டு முஷாரப் அதிபராக இருந்தபோது சர்தாரியை மன்னிக்கும் நோக்கோடு அவருக்கு உடந்தையாக இருந்த ஊழல் அதிகாரிகள் மீதான வழக்கையும் தள்ளுபடி செய்வதற்காக பொது மன்னிப்பு அளிக்கும் சட்டத் திருத்தம் கொண்டுவரப்பட்டது. இதன்படி எட்டாயிரம் ஊழல் வழக்குகள் தள்ளுபடி செய்யப்பட்டன.


அதிபர் சர்தாரி உள்ளிட்டோர் மீதான ஊழல் வழக்குகள் தள்ளுபடி செய்ததை எதிர்த்து தொடரப்பட்ட வழக்கை மேல் நீதிமன்றம் விசாரித்தது. தலைமை நீதிபதி இப்திகார் சவுத்ரி தலைமையிலான 17 நீதிபதிகள் அடங்கிய குழு முஷாரப் காலத்தில் ஊழல் வழக்குகளை தள்ளுபடி செய்தது. செல்லாது என கடந்த வாரம் தீர்ப்புக் கூறியது.

இதன்மூலம் தற்போதைய அதிபர் சர்தாரி மீதான ஊழல் வழக்குகளை மீண்டும் விசாரிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

தற்போதைய உள்துறை மற்றும் இராணுவ அமைச்சர்கள் மீது மீண்டும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதற்கான பிடியாணை அறிவித்தல் இந்த அமைச்சர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

இதுகுறித்து முன்னாள் அதிபர் முஷாரப் தன்னுடைய இணையத்தளத்தில் குறிப்பிடுகையில் அவசரசட்டத்தை கொண்டு வந்து ஊழல் வழக்குகளை இரத்து செய்தது நான் செய்த தவறு. இதனால் பாகிஸ்தான் மக்கள் கட்சி ஆட்சிக்கு வந்ததாக கூறமுடியாது. அவர்கள் தேர்தலில் வெற்றிபெற்று ஆட்சியில் அமர்ந்துள்ளனர். அப்போது காணப்பட்ட அரசியல் சூழல் காரணமாக இந்த அவசர சட்டத்தைக் கொண்டு வர நேரிட்டது என்றார். (ஓ-6)

# தெருவில் தூங்கிய இங்கிலாந்து இளவரசர் மக்களின் மனதில் நன்மதிப்பு



லண்டனில் வீடு இல்லாத "டீன் ஏஜ்" இளைஞர்கள் தெருவோரங்களில் படுத்துறங்குகின்றனர். அவர்கள் படும் கஷ்டங்கள் குறித்து பொது மக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்த இங்கிலாந்து இளவரசர் வில்லியம் ஒருநாள் இரவு தெருவோரத்தில் தூங்கிப்பொழுதைக் கழித்தார். பொதுமக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்தவே அவர் இது போன்ற நடவடிக்கையில் ஈடுபட்டதாக பிரிட்டிஷ் வீடு இல்லாதோர் அறக்கட்டளை மைய பொறுப்பாளர் ஒபாகின் தெரிவித்தார். இந்த அமைப்பின் காப்பாளராக இளவரவசர் வில்லியம் உள்ளார்.

மத்திய லண்டனில் உள்ள பிளாக் பிரையர்ஸ் பாலம் அருகே 4 டிகிரி சென்ரி கிரேட் குளிரில் இளவரசர் வில்லியம் ஒரு மரப்பெட்டியின் மீது படுத்துறங்கினார். அவரது இந்த நடவடிக்கை இங்கிலாந்து மக்கள் மனதில் நன்மதிப்பை ஏற்படுத்தியுள்ளது. (6-2)

# அணு ஆயுதங்களை குறைக்க அமெரிக்கா - ரஷ்யா திட்டம்

(மாஸ்கோ)

அமெரிக்காவும், ரஷ்யாவும் பனிப்போர் காலத்து அணு ஆயுதங்களை பெருமளவு குறைக்கத் திட்டமிட்டிருப்பதாக ரஷ்ய வெளிநாட்டு மந்திரி செர்ஜி லாவ்ரோ தெரிவித்தார். அவர் அரசாங்கத்துக்குச் சொந்தமான பத்திரிகை ஏஜென்சி ஒன்றுக்கு பேட்டி அளிக்கையில்,

1991ஆம் ஆண்டு இரு நாடுகளும் ஆயுதக் குறைப்புக்காக ஒரு ஒப்பந்தம் செய்து கொண்டன. இந்த ஒப்பந்தம் தோல்வி அடைந்துவிட்டது. இதற்கு மாற்றாக புதிய ஒப்பந்தம் கையெழுத்தாக இருக்கிறது. இந்த ஒப்பந்தத்தின்படி அதிக அளவுக்கு அணு ஆயுதங்கள் குறைக்கப்பட இருக்கின்றன என்று தெரிவித்துள்ளார். (ஓ-2-6)

# பெஷாவர் நகரில் தற்கொலை தாக்குதல் மூவர் பலி; 18 பேர் காயம்

பாகிஸ்தானில் வடமேற்கு எல்லைப்புற மாநிலத்தின் தலைவர் பெஷாவரில் உள்ள ஒரு பிரஸ் கிளப்புக்கு வெளியே தற்கொலை தாக்குதல் நடந்தது. பிரஸ் கிளப்புக்குள் ஒரு தற்கொலை தீவிரவாதி நுழைய முயன்ற போது, அவரை பொலிஸார் தடுத்து நிறுத்தி விசாரித்தார்.

அப்போது, அவன் தன் உடலில் கட்டி இருந்த வெடிகுண்டுகளை வெடிக்கச் செய்தான். இதில் அந்த பொலிஸ்காரர் உட்பட 3பேர் பலியானார்கள். 18 பேர் காயம் அடைந்துள்ளனர். காயம் அடைந்தவர்களில் சிலர் பத்திரிகையாளர்கள் ஆவர். இந்தத் தாக்குதல் நடந்தபோது, பிரஸ் கிளப்பில் பலர் இருந்தனர். தாக்குதலில் பிரஸ் கிளப் சேதம் அடைந் தது. இந்தத் தாக்குதலுக்கு எந்த ஒரு தீவிர வாத அமைப்பும் பொறுப்பு ஏற்கவில்லை. (ஓ-2-6)

# புவிவெப்பம் தணிப்பில் எவ்வித முடிவையும் எட்டாத கோபன்ஹேகன் உச்சி மாநாடு

கோபன்ஹேஹன் நகரில் கடந்த சில நாட்களாக பரபரப்புடன் நடைபெற்று வந்த தட்பவெப்பம் குறித்த சர்வதேச உச்சி மாநாடு ஒருவிதமாக முடிவுக்கு வந்துவிட்டது. சுற்றுச் சூழல் பாதுகாப்பு குறித்த அக்கறை மிகுந்த ஆர்வலர்கள், அமைப்புகள், இதழியலாளர்கள் என்று பல தரப்பினரும் இந்த முடிவு ஏமாற்றம் அளிப்பதாகவே உள்ளது என்று சலிப்பு மேலிடக் கூறியுள்ளனர்.

இந்தப் பூமண்டலம் மனித சமுதாயத்துக்கு இயற்கை அளித்த ஒப்பில்லாத வரம். மனித குல நாகரிக வளர்ச்சி பெருமைக்குரிய எல்லைகளைத் தொட்டு நின்றது. இயற்கையின் விநோதங்களை மனிதன் தனது அறிவாற்றலால், ஆராய்ச்சியால் கண்டறிந்து அதை




சமூக வளர்ச்சிக்கும் முன்னேற்றத்துக்கும் பயன்படுத்தி வந்துள்ளான். அந்த வகையில் 19ஆம் நூற்றாண்டில் நீராவி என்ஜின் கண்டு பிடிக்கப்பட்டது. உலகில் தொழில் புரட்சிக்கு வழி வகுத்தது. ஆனால் அந்தத் தொழிற் புரட்சி உலகந்தழுவிய அளவில் இயந்திர உற்பத்திக்குப் பெரிதும் பயன்படுத்தப்பட நேரிட்ட போது சுற்றுச் சூழல் தூய்மைக்குக் கேடு நிகழ்ந்தது. பூமிக்கு மேலான வளிமண்டலம் மாசு படலாயிற்று.

உலக நாடுகளின் பொருளாதார வளர்ச்சிக்கு மின் உற்பத்தி அடித்தளமாக அமைந்தது என்றால் அந்த மின்சாரத்தை உற்பத்தி செய்ய பூமிக்கு அடியிலிருந்து அகழ்ந்தெடுக்கப்பட்ட நிலக்கரியை எரியூட்டிப் பயன்படுத்துவது அவசியமானது. உலக நாடுகள் அனைத்தையும் ஒவ்வொரு நாட்டின் நகரங்கள், கிராமங்களையும் இணைத்து மக்கள் தொடர்புக்கும், வர்த்தகத்திற்கும் பெரிதும் உதவிய போக்குவரத்து சாதனங்கள் பல்கிப் பெருகின என்றால் அவற்றோடு சேர்ந்து பூமிக்கும், கடலுக்கும் அடியிலிருந்து எடுக்கப்பட்ட திரவ எரிபொருளான பெற்றோலியப் பொருட்கள் பெருமளவுக்குப் பயன்படுத்தப்பட நேரிட்டது. இவை நிலக்கரியும், பெற்றோலியப் பொருட்களும் சேர்ந்து எழுப்பும் புகை மண்டலம் காற்று வெளியைக் காபனீரொட்சைட் வாயுவால் மாசுபடுத்தியது.

இதர தொழில்களில் பயன்படுத்தப்பட்ட இராசாயனக் கழிவுகளும் இந்த மாசுப்பெருக்கத்தின் பரிமாணத்தை மேலும் பெருக்கின. இவை இயற்கை நிகழ்வுகளின் மீதும் தாக்கத்தைச் செலுத்தலாயின. கூடவே காடுகள் அழிக்கப்பட்டதும் பல்லாயிரக்கணக்கான நூற்றாண்டு காலமாக இயற்கை சேமித்து வைத்த வளங்கள் அனைத்தும் வேகவேகமாகப் பயன்பாட்டுக்கு உட்படுத்தப்பட்டதும் அந்த வளங்களை மீண்டும் பெருக்குவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படாததும் பாரதூரமான விளைவுகளுக்கு இட்டுச் சென்றன. உயிரினங்களின் வாழ்க்கைக்குத் தேவையான சுத்தமான காற்று, நீர் அனைத்தும் மாசுபட்டன. மறுபக்கம் இயற்கைச் சீற்றங்கள் பேரிடர்களாக விடியலாயின. வளர்ச்சியும், முன்னேற்றமும் தொழிற்புரட்சி தந்த வரம் என்றால் சுற்றுச் சூழல் பாதிப்பு அதனால் விளைந்த சாபக்கேடாக உடன் வந்தது.

இந்தச் சுற்றுச்சூழல் பாதிப்பின் ஒரு முக்கிய வெளிப்பாடு புவி வெப்பம் உயர்வும் அதன் தொடர்ச்சியாகக் கடல் நீரும் வெப்பமடைந்து கடல் மட்டம் உயரும் ஆபத்துமாக எதிர் நின்றது. பூமியின் காற்று மண்டலத்துக்குக் கவசமாக அமைந்துள்ள ஓசோன் படலத்தில் ஓட்டை விழுந்து மனித குலத்துக்குப் பேரபாயத்தை விளைவிக்கும் சூழல் அச்சுறுத்தியது. பருவ மழை உள்ளிட்ட இயற்கையின் தொடர் நிகழ்வுகளில் பாதகமான மாற்றங்கள் தென்படலாயின. இவற்றை எதிர்கொள்ள முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் உலகளாவிய முறையில் மேற்கொள்ளப்படாவிட்டால் மனித சமுதாயம் ஒரு பேரழிவை எதிர்கொள்வது தவிர்க்க முடியாததாகிவிடும் என்ற கவலை எழுந்தது.

ஐக்கிய நாடுகள் சபை 1972 இல் இது குறித்த ஒரு சர்வதேச மாநாட்டைக் கூட்டி அதில் மனித சமுதாயத்தின் சுற்றுப்புறச் சூழல் தொடர்பான ஒரு பிரகடனத்தை மேற்கொண்டது. இம் மாநாடு ஸ்டாக்ஹோம் நகரில் நடைபெற்றது. இதையடுத்து ஐ.நா. முயற்சியில் 1989 ,1991 ஆம் ஆண்டுகளில் சுற்றுச்சூழலும், வளர்ச்சியும் குறித்த பேரவைத் தீர்மானங்களும் மேற்கொள்ளப்பட்டன. கடல் மட்டம் உயர்வதனால் பாதிப்புக்குள்ளாகக்கூடிய தாழ் நிலைத் தீவுகள் கடலோ ரப் பகுதிகள் குறித்தும் ஐ.நா. தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுச் செயற்திட்டங்களும் உருவாக்கப்பட்டன. ஓசோன் படலத்தைப் பாதுகாப்பதற்காக 1985 இல் வியன்னாவிலும் 1987 இல் மாண்டரீலிலும்

**இன்று வரை கியோட்டோ உடன்பாட்டை ஏற்க மறுத்த அமெரிக்கா தற்போது இதைத் தகர்தெறிவதற்கான முயற்சியை மேற்கொண்டது.**

சர்வதேசக் கோட்பாடுகள் நிறைவேற்றப்பட்டன. தட்பவெட்பம் தொடர்பான உலக இரண்டாவது மாநாடு 1990 இல் நடைபெற்றது. இவற்றின் முத்தாய்ப்பாகத் தட்பவெட்பம் குறித்த வரையறைக் கோட்பாடு ஒன்றை ஐ.நா. 1992 மே 9 அன்று நியூயோர்க் நகரில் ஏற்று வெளியிட்டது.

1992ஆம் ஆண்டின் இந்த ஐ.நா. கோட்பாடு ஒரு மிக முக்கியமான பாகுபாட்டை அங்கீகரித்தது. புவிவெப்பம் அதிகரிப்பின் பாதிப்புகள் உலக நாடுகள் அனைத்துக்குமான அச்சுறுத்தலே என்றாலும் இந்தப் புவி வெப்பத்துக்குப் பிரதான பொறுப்பு பொருளாதார ரீதியிலும் வளர்ச்சியடைந்த நாடுகள் தான் வளரும் நாடுகள் தத்தம் பொருளாதார வளர்ச்சியிலும் அக்கறை கொள்ள வேண்டியவையாக இருப்பதனால் அவை புவி வெப்பத்துக்குக்



காரணமான கரியமில வாயு வெளியேற்றத்தைத் தவிர்ப்பதோ கட்டுப்படுத்துவதோ அவற்றின் மக்கள் நலன்களுக்கு உகந்ததாக அமையாது என்று இந்தக் கோட்பாடு வளர்ச்சியடைந்த நாடுகள், வளரும் நாடுகள் என்று உலக நாடுகளைப் பாகுபடுத்தி கரியமில வாயு வெளியேற்றத்தைக் கட்டுப்படுத்துகிறது. கடமையை வளர்ச்சியடைந்த நாடுகளின் மீதே சுமத்தியது. இந்தக் கோட்பாட்டில் இணைக்கப்பட்ட இரண்டு பட்டியல்களில் ஒன்றில் 36 நாடுகள் இடம்பெற்றன. இவை கரியமில வாயு வெளியேற்றத்தைக் கணிசமாகக் குறைப்பது உள்ளிட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள வலியுறுத்தப்பட்டன. இந்த 36 நாடுகளிலிருந்து 24 நாடுகளைத் தனியே பிரித்தெடுத்து - இவை பெரிதும் வளர்ச்சியடைந்து வசதி பெற்ற நாடு களாக இருந்தமையால் வளரும் நாடுக ளுக்கு புவிவெப்ப உயர்வு காரணமாக நேரி டும் பாதிப்புக்களை எதிர்கொள்ள நிதி உதவிக ளும் செய்யவேண்டும் என்றும் வலியுறுத் தப்பட்டிருந்தது. இந்த 1992 இன் ஐ.நா கோட்பாடு, உறுப்பு நாடுகள் அனைத்தாலு ஏற்றுக்கொள்ளப்பட்டபோதிலும், இது ஒரு குறிகோள் என்ற அளவில் மட்டுமே அமைந்தது. இதில் வரையறுக்கப்பட்ட கடமைகளை நிறைவேற்ற வளர்ச்சியடைந்த நாடுகள் மீது ஐ.நா. எவ்வித சட்டரீதியான நெருக்குதலையும் கொடுக்க இயலாது.

எனினும், இந்த ஐ.நா. கோட்பாடு அடுத்தடுத்த பேச்சுவார்த்தைகளுக்கும், மாநாடுகளுக்கும் அடிப்படையாக அமைந்தது. புவி வெப்ப அதிகரிப்பால் கூடுதலாகவும், உடனடியாகவும் பாதிப்புகளை எதிர்கொள்ள வேண்டிய கவலைக்குரிய நிலைமையில் உள்ள நாடுகளாக, சிறுதீவு நாடுகள் தாழ்நிலைக் கடலோர நாடுகள் ; சதுப்பு நிலம் ; காடுகள் நிறைந்த நாடுகள் இயற்கைப் பேரிடர்களை எதிர்கொள்ளும் நிலையில் உள்ள நாடுகள் ; வரட்சி -பாலை நில பாதிப்புக்களை கொண்ட நாடுகள் ; நகர்ப்புற சுற்றுச்சூழல் மாசுவிகிதம் உயர்வாக உள்ள நாடுகள்; எளிதில் பாதிப்புக்கு இலக்காகும் சுற்றுச்சூழல் அமைந்த நாடு கள் ; எரிபொருட்களை (நிலக்கரி, எண்ணெய்) எடுத்து ஏற்றுமதி செய்வதை மட்டுமே நம்பி நிற்கும் நாடுகள் சிறு நிலப் பகுதியை மட்டுமே உள்ளடக்கிய இடைநிற்கும் நாடுகள் என்று 9 வகையாக இந்தக்கோட்பாடு வரையறுத்தது ; வளர்ச்சியடைந்த நாடுகள் இந்த வகை நாடுகள் மீது அக்கறை செலுத்தி உதவிடவேண்டும் என்று அது சுட்டிக்காட்டியது.


ஒரு நல்லெண்ண சமிக்ஞையாக மட்டுமே அமைந்த இந்த ஐ.நா. கோட்பாட்டுக்கு வரையறுக்கப்பட்ட இலக்குகளுடன் கூடிய சட்டரீதியான நிர்ப்பந்தத்தை உள்ளடக்கிய ஓர் உடன்பாடாகச் செயல்வடிவம் கொடுக்கிற முன்னேற்றம் 1997 இல் நிகழ்ந்தது. ஜப்பானின் கியோட்டோ நகரில் ஐரோப்பிய யூனியனும், 37 வளர்ச்சியடைந்த நாடுகளும் சேர்ந்து 1997 டிசம்பர் 11 அன்று மேற்கொண்ட இந்த ஒப்பந்தம் தான் கியோட்டோ உடன்பாடு என்று அழைக்கப்படுகிறது. 2008 முதல் 2012 வரையிலான ஐந்தாண்டுகளுக்கு, வளர்ச்சியடைந்த ஒவ்வொரு நாடும் எந்த அளவுக்குப் பசுங்கூட வாயுக்கள் (கரியமில வாயு) வெளியேற்றத்தைக் குறைக்கவேண்டும் என்று இந்த உடன்பாடு வரையறுத்தது. 150 ஆண்டுகளுக்கும் மேலான தொழில் வளர்ச்சி நடவடிக்கைகளில் ஈடுபட்டுப் பலன் அனுபவித்து வரும் வளர்ச்சியடைந்த நாடுகளே, புவி வெப்பத் தணிப்புக்கான சுமையை ஏற்கவேண்டும் என்பது கியோட்டோ உடன்பாட்டின் மையக் கோட்பாடு. இதுவே பொதுவான - ஆனால் பாகுபடுத்தப்பட்ட - பொறுப்புக்கள் என்று அறியப்பட்டது. இந்த கியோட்டோ உடன்பாட்டை அமெரிக்கா இன்றளவும் ஏற்க மறுத்து வந்துள்ளது மட்டுமன்றி, இதைத் தகர்த்தெறிவதற்கும் தற்போது நடந்து முடிந்துள்ள கோபன் ஹேகன் மாநாட்டில் விடாப்பிடியான முயற்சியை மேற்கொண்டது.

இந்தப் பின்புலத்தில் தான் கோபன் ஹேகன் உச்சிமாநாடு சர்வதேச ரீதியில் பெரிய எதிர்பார்ப்புக்களை எழுப்பியிருந்தது. இதற்கு முன்னோடியாக அமெரிக்காவும், வளர்ச்சியடைந்த நாடுகள் சிலவும் சேர்ந்து, கோபன் ஹேகனில் ஒரு சர்வதேச ஒப்பந்தத்தை உருவாக்குவதற்கான முன்னோட்டப் பேச்சுவார்த்தைகளையும் மேற்கொண்டிருந்தன.

சுற்றுச்சூழலில் அக்கறை கொண்ட தன்னார்வ அமைப்புகள் பலவும், கோபன்ஹேகனில் குழுமி, ஆர்ப்பாட்டங்களை மேற்கொண்டு *பூமண்டலம் காப்போம் ; புவி வெப்பம் தணிக்க ஒப்பந்தம் நிறைவேற்று* என்று முழங்கவும் செய்தன.

இந்த உச்சி மாநாட்டில் அமெரிக்காவை ஒரு சர்வதேச உடன்பாட்டை ஏற்றுச் செயல்படுத்த இசைய வைக்க வேண்டும் என்று, ஐரோப்பிய வளர்ச்சியடைந்த நாடுகள் உள்ளிட்டு ஒருமுகமான நிர்ப்பந்தம் செலுத்தப்பட்டது. ஆனால் உச்சிமாநாட்டில் பங்கேற்ற அமெரிக்க அதிபர் பராக் ஒபாமாவோ, சட்டரீதியான கட்டுப்பாட்டை விதிக்கும் எந்த ஒப்பந்தத்தையும் ஏற்க மறுத்தார்.

தனி நபர் சராசரிக் கணக்கில், இந்தியாவைப் போல் 20 மடங்கு அதிக அளவில் கரியமில வாயுவை வெளியேற்றி வரும் அமெரிக்கா, தனக்கென்று எந்தப் பொறுப்பையும் ஏற்றுக் கொள்ளாமல், வளரும் நாடுகள்- குறிப்பாக சீனாவும், இந்தியாவும்- கரியமில வாயு குறைப்பு இலக்குகளை ஏற்க வேண்டும் என்று வலியுறுத்தியது; அது மட்டுமல்ல, வளரும் நாடுகளின் இந்த நடவடிக்கைகள் சர்வ




தேசக் கண்காணிப்புக்கு உட்படுத்தப்பட வேண்டும் என்று வாதிட்டது. வளரும் நாடுகள் ஜி-77 என்ற பெயரில் தங்களுக்கிடையிலான சர்வதேச ஒத்துழைப் பை அண்மைக் காலங்களில் மேற்கொண்டு வந்துள்ளன.

சர்வதேச நிதி நெருக்கடியின்போது, வளர்ச்சியடைந்த நாடுகளின் நிர்ப்பந்தங்களை எதிர் கொள்ள இந்த ஜி-77 நாடுகளின் ஒத்துழைப்புப் பெரிதும் பயன்பட்டது. கோபன் ஹேகன் உச்சி மாநாட்டில், அமெரிக்காவையும், வளர்ச்சியடைந்த இதர நாடுகளையும் ஒன்றிணைந்து நிர்ப்பந்திக்க இந்த ஒற்றுமையை வளர்த்தெடுத்துச் செல்ல வேண்டிய கடமையை இன்றைய இந்திய ஆட்சியாளர்கள் முழுமையாக நிறைவேற்ற முற்படவில்லை என்பது வருத்தத்திற்குரியது. ஜி-77 நாடுகளுடன் சேர்ந்து கொண்டே சில முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போதும், பிரேசில், தென் ஆபிரிக்கா, இந்தியா, சீனா ஆகிய நான்கு நாடுகள் தனியாக அமெரிக்காவுடன் கருத்தொற்றுமையை எட்ட முயற்சித்தன; இது வளரும் நாடுகளின் ஒற்றுமையை ஊனப்படுத்து வதாக அமைந்தது.

கியோட்டோ உடன்பாட்டுக்கு வேட்டு வைக்கிற அமெரிக்க முயற்சி வெற்றி பெறவில்லை என்பது, 2010ஆம் ஆண்டில் சர்வதேச உடன் பாட்டை எட்டுவதற்கான முயற்சியை மீண்டும் தொடர்ந்து மேற்கொள்ள



ஒரு வாயில் திறக் கப்பட்டுள்ளது என்பதுமே, கோபன்ஹேகன் உச்சிமாநாட்டில் 26 நாடுகள் இணைந்து ஏற்றுள்ள உடன்பாட்டின் சாதகமான அம்சங் கள், இந்த உடன்பாட்டை கவனத்தில் கொள் வதாக மட்டுமே உச்சி மாநாட்டில் பதிவானது.

இதில் அமெரிக்கா ஏற்றுக் கொண்டுள்ள (கரியமில வாயு குறைப்புக்கான) பொறுப்பு என்பது, வளரும் நாடுகளான இந்தியா-சீனாவோ, இதர வளர்ச்சியடைந்த நாடுகளான ஐரோப்பிய யூனியன்-ஜப்பானோ ஏற்றுக் கொண்ட அளவை விடக் குறைவே என்பது ஒரு நியாயமற்ற அளவுகோல். கரியமில வாயு குறைப்பு நடவடிக்கைகள் மீதான சர்வதேசக் கண்காணிப்பு என்பதற்குப்பதிலாக, சுயவிருப்பத்தின் பேரில் சர்வதேச சமுகத்திற்கு அறிக்கை அனுப்பி வெளிப்படையாக நடவடிக்கை மேற்கொள்வதாக இந்தியா இசைந்துள்ளது.

பாதிப்புக்கு இலக்காகக் கூடிய நாடுகளுக்கு நிதி உதவியாக 2010-2012-ல் 3 ஆயிரம் கோடி டொலரும், 2020-க்குள் 10 ஆயிரம் கோடி டொலரும் திரட்டி உதவுவ தாகப் பணக்கார நாடுகள் ஒப்புக்கொண்டுள்ளன.

ஆனால் கடல் கோளுக்கு இலக்காகும் அழி வின் விளிம்பைத் தொட்டு நிற்கிறது துவாலு என்ற குட்டித் தீவு நாடு *30 வெள்ளிக் காசுக்கு எங்கள் எதிர்காலத்தையே காவு கேட்பதா?* என்று வெளிப்படுத்திய குமுறல்தான் கோபன் ஹேகன் உச்சி மாநாட்டுக்குப் பின்

# பிறந்த எண் பலன்களும் அதிர்ஷ்ட பெயர்களும்

## உடல் எண் : 7

7, 16, 25 ஆகிய திகதி ஒன்றில் பிறந்தவராக இருப்பின் அவர் பிறந்த எண் 7 என்று அறிவோம்.

## உடல் எண் : 7 விதி எண் : 1

### உடலமைப்பு

பிறந்த எண் 7 விதி எண் 1 ஆகக் கொண்டு பிறந்தவர்கள் கேது, சூரியன் ஆகிய இருவரின் ஆதிக்கத்திற்குட்பட்டவர். இவர்கள் சற்று பருமனான உடலமைப்புக் கொண்டவர்களாயும் பிறரை எளிதில் வசீகரிக்கும் தன்மையுடையவர்களாயும் இருப்பர். இவர்கள் மாநிறமாக இருக்கக் கூடும்.

### மன, குணவியல்பு

இவர்கள் அறிவு நுட்பமுள்ளவர்களாயும் சிந்திக்கும் ஆற்றல் பெற்றவராயும் இருப்பர். தனக்கு நேரவிருக்கும் வருங்காலப் பலன்களை முன் கூட்டியே அறியும் தனித்திறன் இவர்களிடம் மிகுந்திருக்கும். இவற்றைக் கனவின் மூலம் முன்கூட்டியே அறிந்து கொள்ளக் கூடியவர்கள்.

இவர்கள் நேர்மையானவர்களாயும் உண்மைக்கு மதிப்பளிப்பவர்களாயும் இருப்பர்.

தன்னைச் சார்ந்தவர்களும் தம்மைப் போலவே நேர்மையாக இருக்க வேண்டுமென்று வற்புறுத்துவர். இதனால் இவர்களுக்கு பிறருடன் மோதும் நிலை அடிக்கடி ஏற்படும்.

இவர்கள் சுயநலத்துடன் பொது நலனிலும் அதிக அக்கறை கொண்டவர்களாக இருப்பர். பிறரும், தமது சமூகத்தினரும் உயர வேண்டும் என்ற உயர்ந்த இலட்சியம் கொண்டவர்களாக இருப்பர். இந்த வகையில் இவர்கள் பிறரால் பாராட்டப்படுவர்.

இவர்கள் பிறர் புகழ்ச்சிக்கு அடிமையாக மாட்டார்கள். தம்மைப் புகழ்பவர்களிடம் மிகவும் எச்சரிக்கையுடன் நடந்து கொள்வர். இவர்களும் பிறரைப் புகழ மாட்டார்கள். இவர்கள் மகிழ்ச்சியை பிறருடன் பகிர்ந்து கொள்வர்.

துன்பம் என்றால் வெளியிடாது தனிமையில் வேதனைப்படுவர். பிறரிடம் அன்புடன் பழகுவர்.

இவர்களிடம் இரக்கம், தாராள குணம் இருக்கும். பிறர்படும் துன்பம் கண்டு சகிக்க மாட்டார்கள்.

அவர்களின் துன்பத்தில் வலியச் சென்று பங்கு ஏற்பதோடு அத்துன்பத்தைப் போக்க முயலுவர்.

இவர்கள் கடவுள் பக்தி கொண்டவர்களாயும் தம் மதத்தில் ஆழ்ந்த பற்றுள்ளவர்களாயும் இருப்பர். தம் மதக் கொள்கையைப் பற்றிப் பெருமையாகப் பேசுபவர்களாயும் இருப்பர். எப்போதும் தூய்மையான ஆடை அணிவர்.

இவர்களிடம் மனபலம் குறைந்திருக்கும். சிறிது கஷ்டம் என்றாலும் பெருமளவு வேதனைப்படுவர். ஆண்டவனைக் குறை கூறுவர்.

### குடும்ப வாழ்க்கை

பொதுவாகவே இவர்கள் காதல் திருமணம் புரிந்து கொண்டவர்களாக இருந்தால் கூட இவர்களுக்குக் குடும்ப வாழ்க்கை மகிழ்ச்சிகரமாக அமைவதில்லை. இவர்களின் குடும்பத்தில் குழப்பங்களும் வேதனைகளும் மிகுந்திருக்கும்.

அதனால் அதிருப்தியுடனேயே வாழ வேண்டிய கட்டாயம் இருக்கும். அந்த அளவுக்கு ஏதேனும் குறைபாடு இருக்கும்.

### தொழிலும், வருமானமும்

இவர்கள் கலையார்வமிக்கவர்கள். கதை, காவியம் புனைபவராகவும் இருப்பர். கல்வி கற்றவராயும், தொழிற் கல்வியில் தேர்ச்சி பெற்று மருத்துவராகவோ பொறியியல் வல்லுனராகவோ இருக்கக்கூடும்.

இவை தவிர நெசவு, ஜவுளி போன்றனவும் ஆடம்பரப்பொருட்களையும் உற்பத்தி அல்லது விற்பனை செய்பவராகவோ இருப்பர். ஏஜென்சிகளாகவும் இருக்கக்கூடும்.

இவர்களில் சிலர் அரசியலில் ஈடுபட்டு பதவி வகிக்கும் வாய்ப்பும் பெறுவர். வண்டி வாகனங்களால் கூட இவர்கள் நன்மை பெறக்கூடும்.

இவர்கள் பொருளாதாரத் துறையில் உயர்வு பெற்றாலும் இவர்கள் பூரண சந்தோஷத்துடன் இருக்க மாட்டார்கள்.

### ஆரோக்கிய நிலை

இவர்களின் ஆரோக்கியத்தில் ஏதேனும் குறைபாடு இருந்தவண்ணமிருக்கும். இவர்களுக்கு சித்தப்பிரமை ஏற்படவும் கூடும். இவை தவிர இதய சம்பந்த நோய்கள் வயிற்றுக் கோளாறு, பல் சம்பந்த நோய் போன்றன உண்டாகும். இவர்கள் எப்போதும் தம் ஆரோக்கியக் கேடு பற்றியே குழப்பமும் கவலையும் கொண்டிருப்பர்.

### சாதக பாதக எண்களும் திகதியும்

இவர்கள் சுக்கிரன், சூரியன் ஆதிக்கத்திற்குட்பட்ட 6,1 மற்றும் அது தொடர்புடைய யோகப் பலனளிக்கும் எண்களுக்கு தம் பெயரை அமைத்துக் கொள்ளலாம்.

தம் நிறுவனங்களுக்குக்கூட 6,1 தொடர்புடைய எண்களிலேயே பெயர் அமைக்க யோகமாகும்.

இவர்களுக்கு 6,1 உடன் தொடர்புடைய எண்கள் யோகமானவை. இவை தொடர்புடைய திகதியும் யோகமானவைதான்.

ஆனால் செவ்வாய், சனி ஆதிக்கத்திற்குட்பட்ட 9, 8 அது தொடர்புடைய எண்களும் திகதியும் யோகமற்றவை.

## உடல் எண் : 7 விதி எண் : 2

### உடலமைப்பு

பிறந்த எண் 7 விதி எண் 2 ஆகக் கொண்டு பிறந்தவர்கள் கேது, சந்திரன் ஆகியவரின் கூட்டு ஆதிக்கத்திற்குட்பட்டவர்கள்.

இவர்கள் எப்போதும் தூய்மையான ஆடையுடன் காட்சியளிப்பர். இவர்கள் சிரித்த முகத்துடன் பிறர் மனம் கவரும் வண்ணம் இருப்பர்.

### மன, குணவியல்பு

இவர்கள் சலனபுத்தி உள்ளவர்களாகவும் நேரத்திற்கு நேரம் மாறுபட்ட குணவியல்பு கொண்டவர்களாகவும் இருப்பர். இவர்களைப் புரிந்து கொள்வது கடினம். இவர்கள் மன பலம் குறைந்தவர்களாக இருப்பர். சிறு பிரச்சினைகளுக்கெல்லாம் பெருமளவு குழப்பத்திற்கும் வேதனைக்கும் உள்ளாவர்.

இவர்கள் எப்பொழுதும் எதையாவது ஒன்றைப் பற்றி சிந்தித்த வண்ணம் இருப்பர். இவர்கள் தனக்குத் தானே திட்டங்கள் வகுப்பவர்களாக இருப்பர்.

இவர்கள் தம் வாழ்க்கையில் ஒரு குறிக்கோள் கொண்டிருப்பர். ஆனால் அதன்படி செயலாற்றும் போது தளர்ச்சியடைவர்.

இவர்கள் பிறருடன் சரளமாக பழகுவது கடினம். ஒரு சிலரோடு மட்டும் பழகினாலும் அவர்களிடம் கூட மனம் விட்டுப் பழக மாட்டார்கள்.

இவர்கள் பிடிவாதக் காரர்கள். பிறருடைய கருத்துக்களை ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். ஆனால் தம் கருத்துக்களை பிறர் ஏற்றுக் கொள்ள வேண்டுமென்ற எண்ணம் கொண்டவர்கள். இவர்கள் ஆடம்பரப் பிரியர்களாகவும் தம் வீட்டையும் தம் பொருட்களையும் அழகாக வைத்துக் கொள்பவர்களாகவும் இருப்பர்.

இவர்கள் பிறருடன் பெருமளவு கருத்து வேறுபாடு கெள்வர். அதனால் ஏற்படும் வம்பு வழக்குகளைப் பற்றிக்கூட கவலைப்பட மாட்டார்கள். இவர்கள் கடவுள் பக்தி மிகுந்தவர்களாக இருப்பர். தம் மதப் பற்றும் கொண்டவர்களாக இருப்பர்.

### குடும்ப வாழ்க்கை

இவர்களுக்கு குடும்ப வாழ்க்கை நல்ல முறையில் அமையும் என்றாலும் சிறு பிரச்சினைகளுக்குக்கூட பெருமளவு வேதனைப் படுவர்.

அதனால் வாழ்க்கையில் இவர்கள் சந்தோஷத்தைவிட பெருமளவு அமைதியின்மையே அடைய நேரும். இவர்கள் சிற்றின்பத்தில் அதிக நாட்டமுள்ளவர்களாக இருந்தாலும் சில நேரங்களில் பேரின்பமே நிலையானது என்ற எண்ணம் கொள்வர்.

### தொழிலும் வருமானமும்

இவர்கள் கலை ஆர்வம் கொண்டவர்களாகவும் கலைத் தொடர்பான இசை, சங்கீதம், நாட்டியத்துறையிலும், கதை, காவியம் புனைவதிலும் வல்லவர்களாக இருப்பர். மருத்துவம் ஜோதிடத்தில்கூட ஈடுபாடு கொண்டிருப்பர்.

இவர்கள் பொறியியல் துறையில் கூட பதவி பட்டம் பெறக்கூடும். போதகராகவும், மதகுருவாகவும் கூட இருக்கக்கூடும்.

இவர்கள் ஜவுளி, விவசாயம் சம்பந்தமான தொழிலும் வியாபாரத்திலும் மேன்மை அடைவர். இவர்களுக்கு ஆடம்பரம் மற்றும் அழகு சாதனப் பொருட்கள் விற்பனை மற்றும் அதன் தொடர்பில் பணிபுரிவது ஆதாயம் தரக்கூடும்.

சிலர் அரசியல்வாதிகளாக பேச்சு வன்மை பெற்றவராய் பதவி பெறக்கூடும். இவர்கள் பொருளாதாரத் துறையில் சிறப்புற்று விளங்கினாலும் இவர்கள் மனத் திருப்தியுடன் வாழ்வது கடினம்.

### ஆரோக்கியநிலை

இவர்கள் அதிக சிந்தனை செய்ய வல்லவர். அதனால் சித்தக் கலக்கம் ஏற்பட வாய்ப்புண்டு. உஷ்ண சம்பந்தமான வயிற்று வலி, மூலம் ஏற்பட வாய்ப்புண்டு. மூட்டு வலியும், வாய்வு சம்பந்தமான தொல்லைகளும் ஏற்படும்.

இவர்கள் அதிகமாக சிற்றின்பத்தில் ஈடுபடுவதினால் நரம்புத் தளர்ச்சிக்கும் அது தொடர்பான பால்வினை நோய்க்கும் ஆளாக நேரும்.

### சாதக பாதக எண்களும், திகதியும்

இவர்கள் சுக்கிரன், சந்திரன் ஆகியோர் ஆதிக்கத்திற்குட்பட்ட 6,2 எண் தொடர்புடைய எண்களுக்கு தன் பெயரை அமைத்துக் கொள்ளலாம். தம் நிறுவனங்களுக்கும் இது தொடர்பான பெயர் அமைப்பது யோகமாகும்.

இவர்களுக்கு 6,2 தொடர்பிலான எண்களும் திகதிகளும் யோகமானவை.

ஆனால் செவ்வாய் ஆதிக்கம் பெற்ற 9 ஆம் அது தொடர்புடைய எண்களும் திகதியும் யோகம் இல்லாதவை.

(தொடரும்)

# நீதியானதும் சுதந்திரமானதுமான தேர்தலுக்கு அனைத்து அதிகாரங்களையும் பயன்படுத்துவேன்

## தேர்தல் ஆணையாளர் உறுதி

(கொழும்பு)

தேர்தல்கள் ஆணையாளருக்கு இருக்கின்ற அனைத்து அதிகாரங்களையும் முழுமையாகப் பயன்படுத்தி எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலை நீதியானதும் சுதந்திரமானதுமான தேர்தலாக நடத்துவதற்கு சகல நடவடிக்கைகளையும் மேற்கொள்வதாக ஆணையாளர் தயானந்த திசாநாயக்க சர்வமதத் தலைவர்களுக்கு உறுதியளித்துள்ளார்.

நடைபெறவிருக்கின்ற ஜனாதிபதித் தேர்தலானது நீதியானதும் சுதந்திரமானதுமாக நடைபெறுவதற்கு ஏற்ற சூழலை ஏற்படுத்துமாறு தேர்தல்கள் ஆணையாளரை நேற்று முன்தினம் சந்தித்த சர்வமதத் தலைவர்கள் வலியுறுத்தியதை அடுத்தே, ஆணையாளர் மேற்கண்டவாறு உறுதியளித்துள்ளார்.


ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழக உபவேந்தர் பெல்லன் விமலரத்ன தேரர் தலைமையிலான இக்குழுவில் கொழும்பு மறை மாவட்ட உதவி ஆயர் அதிவண. மேரியன்ஸ் பீரிஸ், கொழும்பு பேராயர் துலிப் டி சிக்கேரா உள்ளிட்ட மதத் தலைவர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

இங்கு கருத்துத் தெரிவித்த பெல்லன் வல விமலரத்ன தேரர் கூறுகையில்,

சர்வமதத் தலைவர்கள் என்ற அடிப்படையில் நீதியானதும் சுதந்திரமானதுமான தேர்தலை நடத்துவதற்கு ஏதுவான சூழலை உருவாக்குமாறு நாம் தேர்தல்கள் ஆணையாளரை வலியுறுத்தினோம்.

இதன்போது தற்போதைய சூழலில் இடம் பெறக்கூடியதென எதிர்பார்க்கப்படும் தேர்தல் முறைகேடுகள் உள்ளிட்ட பிரச்சினைகள் குறித்து ஆணையாளர் எமக்குத் தெளிவுபடுத்தினார்.

அத்துடன் நீதியானதும் சுதந்திரமானதுமான தேர்தலை நடத்துவதற்கு தனக்கு இருக்கும் அனைத்து அதிகாரங்களையும் பயன்படுத்தி நடவடிக்கை எடுப்பதாகவும் உறுதியளிப்பதாகவும் தெரிவித்தார். (ஓ-6)




வறுமைக் கோட்டுக்குட்பட்ட மாணவர்களின் கல்வி வளர்ச்சியைக் கருத்திற் கொண்டு தென்மராட்சி கிழக்கு லயன்ஸ் கழகத்தினால் உசன் இராமநாதன் கல்லூரிக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டது. இந்நிகழ்வில் அரிமாக் கழகத் தலைவர், உப அதிபர் மற்றும் ஆசிரியரிடம் அவற்றைக் கையளிப்பதைப் படத்தில் காணலாம்.

# விஜயநகர கலைப்பாணி

85

### விஜயநகரம்

பதினான்காம் நூற்றாண்டின் முற்பகுதியிலே (கி.பி. 1335) கர்நாடக தேசத்தின் தென்பகுதியில் உதயமாகிய விஜயநகரம் காலப்போக்கில் ஒரு பெரும் பேரரசாக வளர்ச்சி அடைந்தது.அது கர்நாடக தேசத்தின் பெரும் பகுதியையும், ஆந்திரப்பிரதேசத்தின் சிலபகுதிகளையும், தமிழகத்தையும் உள்ளடக்கிய அமைப்பாக விளங்கியது. விஜயநகரம் 15 ஆம் நூற்றாண்டிலே , கிருஷ்ண தேவ ராயரின் ஆட்சியில் உன்னத நிலையை அடைந்தது.



தஞ்சை நாயக்கர் மாளிகை

துருக்கியரின் ஆதிக்கத்திலிருந்து மீட்சி பெற்று, இந்து கலாசாரத்தின் புகலி டமாக விளங்குவதற்கென்று அமைக்கப் பெற்ற விஜயநகரம் தென்னிந்திய வரலாற் றில் மிகுந்த முக்கியத்துவம் பெற்றது. வளத்திலும், ஆதிக்கபலத்திலும், கலை வனப்பிலும், மாடமாளிகைகள், கோபுரங்கள், கடைவீதிகள், சுகாதார வசதிகள் ஆகியவற்றின் சிறப்பிலும் அதற்கு நிகரான வேறெந்த நகரமும் (விந்தியத்திற்குத் தெற்கிலுள்ள) பகுதிகளில் அமைந்திருக்கவில்லை. இந்தியாவிற்கு வந்த மேனாட்டவர் உரோமபுரிக்கு நிகரான பெருநகரமாக அலங்காரக் கோலத்துடன் விஜயநகரம் விளங்குவதைக் கண்டு வியப்புற்றனர்.

அத்துணை சிறப்பு வாய்ந்த நகரம், 1565 ஆம் ஆண்டிலே இராமராயர் தலைக் கோட்டைப் போரிலே மாண்டதும், வஞ்சினங் கொண்ட பகைவர்களாற் பல மாதங்களாக இடித் தழிக்கப்பட்டது. அரண்மனைகளும், அரச மாளிகைகளும்,கோட்டைகளும், கோயில்களும், அங்காடிகளும், வீதிகள் தோறும் அமைந்த வீடுகளும், பிரதானிகள்,வணிகர், ஸ்தானிகர் முதலியோரின் மாளிகைகளும் இடிந்து வீழ்ந்தன.

முன்னொரு காலத்திலே அமராவதி போல் அமைந்திருந்த அற்புதக் கோலமான நகரம் குடியிருக்க முடியாத கொடும்பாழாகி விட்டது. அதன் அழிபாடுகள் ஹம்பியிலே, பல சுற்று மைல் வட்டத்திலே காணப்படுகின்றன. அவற்றைப் பார்ப்பதற்கு பல நாட்கள் செல்லும். பாழடைந்த நகரம் காலப் போக்கில் மண் மேடுகளாகி மறைந்துவிட்டது. பிரித்தானியர் காலம் முதலாக இன்றுவரையுள்ள தொல்லியல் விற்பன்னர்கள் மண் மேடுகளை அகழ்ந்து அரியனவும் பெரியனவுமாகிய தொல்பொருட் சின்னங்களை வெளிக்கொ ணர்ந்த வண்ணமாயுள்ளனர்.

அரண்மனையின் அத்திபாரங்களும், அழகிய வேலைப்பாடுகள் அமைந்த படிக்கட்டுகள் பொருந்திய நீர்த்தேக்கமும்,மகாநவமி மண்டபம் எனப்படும் ராயர்களின் சபா மண்டபத்தின் அதிர்ஷ்டானப் பகுதியும் மையப் பகுதியில் உள்ளன.அவற்றுக்குச் சமீபமாக, ஒரு பக்கத்தில் விசித்திரமான முறையிலமைந்த நீரேந்து கால்வாய் அமைந்துள்ளது. மற்றப் பக்கத்திலே, சற்றுத் தூரத்திலே ,பத்மமஹால் என்று சொல்லப்படும் அந்தப்புரக் கட்டடமொன்றும் ராயர்களின் பட்டத்து யானைகளுக்குரிய யானைப்பந்தியும் காணப்படுகின்றன.

அவை நன்கு பேணப்பட்ட நிலை யில் உள்ளன. அவற்றுக்கப்பால் கோயில் களின் இடிபாடுகள், கடைவீதிகளின் அழிபாடுகள், கோட்டை வாசல்களின் இடிபாடுகள் என்பன பரந்து காணப்படுகின்றன.

### விஜயநகர காலத்துப் பண்பாட்டுக் கோலங்கள்

தென்னிந்திய வரலாற்றிலே விஜயநகர காலம் பல சிறப்பம்சங்கள் பொருந்திய காலமாகும். நிர்வாக முறையிலும் சமுதாய வமைப்பிலும் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் ஏற்படலாயின. விஜயநகர ராயர்கள் தங்கள் பேரரசின் பகுதிகளை இராச்சியம் என்னும் பெரும்பகுதிகளாக அமைத்து, அவற்றின் நிர்வாகத்துக்குத் தேவையான ஏற்பாடுகளை உருவாக்கியிருந்தனர்.

அரச குடும்பத்தையும் படைத்தலைவர்களையும், விசுவாசம் மிக்க வேறு பிரதானிகளையும் அவற்றில் இராச பிரதிநிதிகளாக நியமித்தனர். முள்வாயி இராச்சியம், சந்திர கிரி இராச்சியம், படைவீடு இராச்சியம் முதலி யன இராச்சியப் பிரிவுகளாகும். தமிழகத்திலே மதுரை, தஞ்சாவூர், செஞ்சி என்னும் சமஸ்தானங்கள் உருவாகியிருந்தன. அவற்றில் இராச பிரதிநிதிகளாக நியமிக்கப்பட்டவர்கள் நாயக்கர் என்னும் பதவிப் பெயரைக் கொண்டிருந்தனர்.

பதினாறாம் நூற்றாண்டிலே, தலைக் கோட்டைப் போரின் விளைவாக விஜயநகர ராயர்களின் ஆதிக்கம் சரிந்ததும் நாயக்கர் பரம்பரை அடிப்படையிலே சுதந்திரமாக ஆட்சி புரியத் தலைப்பட்டனர்.



விஜயநகர காலத்தில் வளர்ச்சி பெற்ற கதகளி நடனத்தின் தோற்றங்கள் சில

விஜயநகர காலத்திலே தென்னிந்திய சமுதாயத்திலும் கலாசார வளர்ச்சிகளிலும் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் ஏற்பட்டன. தெலுங்கு தேசத்துப் பிரதானிகளும் கர் நாடகத்தவர்களும் நிர்வாக அமைப்பிலும் படைகளிலும் பிரதானமான பதவிகளைப் பெற்ற னர்.

மதுரை, தஞ்சாவூர், செஞ்சி முதலான

பேராசிரியர் சி.பத்மநாதன்

இடங்களில் இராச பிரதிநிகளாகச் சென்ற நாயக்கர் தெலுங்கர் என்பது குறிப்பிடற்குரியது.அவர்களின் வசமாயிருந்த படைகளிலும் கர்நாடகரும் தெலுங்கரும் பெருமளவிலே காணப்பட்டனர். அவர்களுக்கு நிலமானியங்கள் வழங்கப்பட்டன. பெருந் தொகையான பிராமணரும்,நெசவாளரும், கம்மாளரும்,வணிகரும் அதற்கு வடக்கிலுள்ள பகுதிகளிலிருந்து தமிழ்நாட்டிற்குச் சென்று அங்கு குடிகளாயினர். மக்கட்செறிவு. சனசஞ் சாரம் என்பவற்றிலே விஜயநகரப் பேரரசிலே புதிய பரிமாணங்கள் ஏற்பட்டன. அதன் பிரதி பலனாகக் கலாசாரப் பரிவர்த்தனை குறிப் பிடத்தக்க வகையிலே, மொழி வேறுபாடுகளைக் கடந்த நிலையில் ஏற்பட்டது. தென்னிந்தியா அனைத்திலும் கலாசாரப் பொதுமை அழுத்தம் பெறுவதற்கு விஜயநகரப் பேர்ரசு எதுவாகியது வைதீக மரபினை அடிப்படையாகக் கொண்ட இலக்கிய பண்பாட்டு மறுமலர்ச்சி ஏற்பட்டது.

கன்னடம்,தமிழ்,தெலுங்கு ஆகிய மொழிகளில் ஏற்பட்ட இலக்கிய வளர்ச்சி களிடையே பொதுப் பண்புகள் காணப்படு கின்றன. புராணம்,இதிகாசம், காவியம் ஆகியவற்றின் செல்வாக்கு அவற்றிடையே மிகுந்து காணப் படுகின்றது. ஆலயங்களையும், ஆலய வழி பாட்டினையும் அடிப்படையாகக் கொண்ட இலக்கிய வளர்ச்சிகளும், பண்பாட்டு வளர்ச்சிகளும் மொழிவழியாக அமைந்த நான்கு தென்னிந்தியப் பிராந்தியங்களிலும் பொதுவானவையாகும். விஜயநகர காலம் தமிழ் இலக்கியத்திலே தலபுராணங்கள் தோன்றிய காலமாகும். பிரபந்தங் களிற் பெரும்பாலானவையும் அக்காலம் முத லாகத் தோன்றியவை என்பது குறிப்பிடற்குரியதாகும். அவை கோயில்களைப் பற்றியவை என்ப தும் கவனித்தற்குரியது.

கட்டடக்கலை , நடனம்,இசை, ஓவியம் ஆகிய துறைகளிற் பொதுவான அம்சங்களின் அடிப்படையிலே புதிய மரபுகள் தோன்றலாயின. அவை பரஸ்பரத் தொடர்புகளின் மூலமாகவும் பரஸ்பரச் செல்வாக்குகளின் விளைவாகவும் ஏற்பட்டவை. கட்டடம், சிற்பம் ஆகிய துறைகளிலே கர்நாடக மரபு களும் தமிழக மரபுகளும் வேறுபாடின்றிக் கலப்புற்று விடுகின்றன.

ஓவியக் கலையில் விஜயநகர காலத்தில், கர்நாடகத்திலும் ஆந்திர தேசத்திலும் ஒரு புதிய கலைப்பாணி உருவாகியது. அது விரை விலே தமிழகத்திலும் பரவிவிடுகின்றது. பிரதா னமான தென்னிந்தியக் கோயில்கள் பலவற் றிலே விஜயநகர காலத்தில் வரை யப் பெற்ற வண்ண ஓவியங்கள் இன்றும் வனப்புடன் விளங்குகின்றமையைக் காணலாம். இசைக் கலை யைப் பொறுத்தமட்டில் கர்நா டக சங்கீதம் வளர்ச்சி பெற்ற காலமாக விஜயநகர காலம் விளங்குகின்றது.

அதிலே தமிழிசையும் தெலுங்கு இசை மரபும் சங்கமமாகி விடுகின்றன. தென்னிந்திய கலாசாரப் பொதுமையினைப் பிரதிபலிக்கும் சாதனமாகக் கர்நாடக சங்கீதம் விளங்குகின்றது. கதகளி, யக்ஷகானம், குச்சுப்புடி என்னும் நாட்டிய வகைகள் விஜயநகர காலம் முதலாக உற்பத்தியான பிரவிருத்திகளை ஆதாரமாகக் கொண்டவை.

### கோயிலமைப்பில் மாற்றங்கள்


விஜயநகர காலத்திலே தென்னிந்தியக் கட்டடக்கலையிற் குறிப்பிடத்தக்க வளர்ச்சிகள் ஏற்பட்டன. விஜயநரகத்திலும் அதன் மேலாட்சியின் கீழமைந்த மாநிலப் பகுதிகளிலும் நூற்றுக்கணக்கான பல புதியகட்டடங்கள் அமைக்கப்பட்டன. பல கோயில்கள் புதிதாக அமைக்கப்பட்டன. விஜயநகரத்திலுள்ள விட்டலசுவாமி கோயில், ஹஸாரராமர் கோயில், ஆந்திரப் பிரதேசத்திலுள்ள லெபாக்ஷி என்னுமிடத்துக் கோயில், வேலூர் சகல கண்டேஸ்வரம், தேவிகாபுரத்து அம்மன் கோயில் முதலியன புதிதாக அமைக்கப்பட்ட கோயில்களாகும்.

புராதனமான தலங்கள் பலவற்றிலும் புதிய கட்டடங்கள் அமைக்கப்பட்டன. சோழராட்சிக் காலத்தைப் போல விஜயநகர காலமும் தென்னிந்தியாவிலே கோயில் கள் புனரமைப்புப் பெற்ற காலமாகும். நூற்றுக் கணக்கான தலங்களிலே சிதைவுற்ற பழங்கட்டடங்கள் இடிக்கப் பெற்றுப் புதிய கட்டடங்கள் உருவாக்கப்பட்டன. மதுரை ,ஸ்ரீரங்கம், காஞ்சிபுரம், அழகர்மலை முதலியவற்றில் அவ் விதமான புனரமைப்பு வேலைகள் இடம்பெற்றன. அவற்றிலே நன்கு பேணப்பட்ட நிலையிலுள்ள சில கட்டடங்கள் தொடர்ந்தும் நிலை பெற்றன. நூற்றுக்கணக்கான தலங்களிலே புராதனமான கட்டடங்களைச் சுற்றியும், அவற்றுக்கிடையில் புதிய கட்டடங்கள் அமைக்கப்பெற்றன.அதனாற் கோயில் வளாகம் விசாலமாகிப் பேரமைப்பாகியது. கோயிலின் பிரமாண்டமான தோற்றம் விஜயநகர கலைப் பாணியின் ஒரு அம்சமாகும்.

விமானங்கள் பொருந்திய கற்றளிகைகளைச் சில நகரங்களிலே பல்லவ மன்னர்கள் அமைத்தனர். சோழப் பேரரசர் காலத் தில் அத்தகைய கோயில் தமிழகம் முழுவ திலும் அமைக்கப்பட்டன. அயல்நாடுகள் சிலவற்றிலும் சோழர் கலைப்பாணியில் அமைந்த கட்டடங்கள் உருவாக்கப்பட்டன. பிற்காலச் சோழரின் ஆட்சியிலே கட்டட அமைப்பிலே குறிப்பிடற்குரிய மாற்றங்கள் ஏற்பட்டன. அவை சிதம்பரம் கோயிலை மையமாகக் கொண்டிருந்தன. பன்னிரண்டாம்,பதின்மூன்றாம் நூற்றாண்டுகளிலே அங்கு திருக்காமகோட்டம், நூற்றுக்கால் மண்டபம், திருத் தேர்க்கோயில், ஆயிரங்கால் மண்டபம், திருநடைமாளிகை எழு நிலைக் கோபுரம், சுற்றுப்பிரகாரங்கள் என்னும் பல அமைப்புக்கள் தோன்றியிருந்தன.

சைவசமய மரபிலே கோயில் எனப் படுவதாகிய சிதம்பரம் அளவுப் பிரமாணங்களிலும் அலங்கர்ரத் தோற்றத்திலும் தென்னகத்திலே தலைமைக் கோயிலா கியது. அதனை முன் மாதிரியாகக் கொண்டு பின்பு விஜயநகரப் பேரரசின் பல பகுதி களிலே கோயிலமைப்புகள் பெரும் வளர்ச்சி அடைந்தன.

பிற்காலச் சோழரின் ஆட்சியிலே குறிப்பாகச் சிதம்பரத்திலே காணப்பெற்ற சோழர் கலைப் பாணியின் சிறப்பம்சங்கள் விஜயநகர காலத்திலே திராவிட கலைப்பாணியின் பொது அம்சங்களாகிவிடுகின்றன. பாண்டியப் பேரரசரின் காலத்திலே, சோழர் கலைப் பாணியில் அமைந்துள்ளனவற்றைப் போன்ற அம்சங்கள் தென் தமிழ்நாட்டிலும் விருத்தி பெற்றிருந்தன என்பதும் இங்கு கவனித் தற்குரியதாகும். தமிழகத்திலுள்ள பிரதானமான தலங்கள் பலவற்றிலே திருக்காமகோட்டம், நூற்றுக்கால் மண்டபம், ஆயிரங்கால் மண்டபம், திருநடைமாளிகை, பல்தளக் கோபுரங்கள், சுற்றுப்பிரகாரங்கள் என்னும் அமைப்புக்கள் விஜயநகர காலத்தில் மிகுந்த வனப்பும் உறுதிப்பாடும் கொண்டு விளங்கும். வண்ணமாக அமைக்கப்பட்டன. கோயில் வளாகம் பல சுற்றுப்பிரகாரங்களைக் கொண்டிருக்கும். அவை ஒவ்வொன்றிலும் வானோங்கு கோபுரங்கள் அமைந்திருக்கும்.



சிதம்பரம் -வடக்கு கோபுரமும் குளமும்

விஜயநகர கலைப்பாணியில்ஆலயம் பிரமாண்டமாய் அமைந்திருப்பதோடு அலங்கார வேலைப்பாடுகள் நிறைந்ததாகவும் விளங்கும். அந்த வேலைப்பாடுகள் மண்டபங்களிலும் தூண்களிலும் சிறந்துவிளங்கும்.

(தொடரும்)



நீதம் மலர் அறிமுக விழா நேற்று யாழ்.பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் மேல்நீதிமன்ற நீதிபதி இ.த.விக்னராஜா உரையாற்றுவதையும், ஓய்வுபெற்ற உயர்நீதிமன்ற நீதிபதி ஆர்.வரதராஜா ஆய்வுரை நிகழ்த்துவதையும், யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கன் யாழ். மாவட்ட நீதிபதி ஆர்.வசந்தசேனனுக்கு சிறப்புப் பிரதியை வழங்குவதையும், நிகழ்வில் கலந்துகொண்ட ஒரு தொகுதியினரையும் படங்களில் காணலாம். (படங்கள்:-அலுவலக செய்தியாளர்)

# புலிகளின் கப்பல் வலையமைப்பு தொடர்பான சகல தகவல்களும் கிடைக்கப் பெற்றுள்ளன

## சிங்கள ஊடகம் தகவல்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பின் கப்பல் வலையமைப்பு குறித்த சகல தகவல்களும் கிடைக்கப் பெற்றுள்ளதாக சிங்கள ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

புலிகளின் பிரின்சஸ் கிறிஸ்டினா கப்பல் கைப்பற்றப்பட்டதன் மூலம் பல்வேறு முக்கிய தகவல்கள் கிடைக்கப் பெற்றுள்ளதாகவும் இத் தகவல்கள் சர்வதேச காவல்துறையினரின் ஒத்துழைப்புடன் திரட்டப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கப்பல்களை சேவையில் ஈடுபடுத்தி வரும் நிறுவனங்கள் தொடர்பான தகவல்களையும் புலனாய்வுப் பிரிவினர் கண்டுபிடித்துள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

தமிழீழ விடுதலைப்புலிகளின் கப்பல் வலையமைப்பை முற்று முழுதாக முடக்க முடியும் என பாதுகாப்புப் பிரிவினர் நம்பிக்கை வெளியிட்டுள்ளனர். (6-2)

# பொன்சேகா இராணுவ நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட வேண்டும்


## விமல் வீரவன்ச தெரிவிப்பு

(கொழும்பு)

எதிர்க்கட்சிகளின் பொதுவேட்பாளர் ஜெனரல் சரத்பொன்சேகா இராணுவ நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தப்பட வேண்டுமென ஜே.என்.பி.கட்சியின் தலைவர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ மற்றும் மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா ஆகியோருக்கு எதிராக ஜெனரல் பொன்சேகா வெளியிட்டுள்ள கருத்துக்கள் பாரதூரமானவை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பாதுகாப்புத்துறை முக்கியஸ்தர்களுக்கு எதிராக பொன்சேகா கடுமையான குற்றச்சாட்டுக்களை சுமத்தியுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.



பாதுகாப்புச் செயலாரை யுத்தக் குற்றச்செயல்களில் சிக்கவைக்கும் நோக்கில் சில சக்திகள் முன்னெடுக்கும் சதித் திட்டத்தின் விளைவே இந்தப் பத்திரிகை செய்தி என அவர் தெரிவித்துள்ளார்.

ஜெனரல் பொன்சேகாவின் கூற்றுக்கள் ஐக்கிய நாடுகளின் விசாரணைகளுக்கு வழியமைத்துக் கொடுக்கும் என அவர் குற்றம் சுமத்தியுள்ளார். (6)

# போலி வெளிநாட்டு முகவர்களை கைதுசெய்ய புதிய திருத்தச் சட்டம்

(கொழும்பு)

போலி வெளிநாட்டு முகவர்களை கைது செய்வதற்கான புதிய திருத்தச் சட்டத்தின் கீழ் மோசடிகளில் ஈடுபடும் நபர்களைக் கைது செய்து நேரடியாக நீதிமன்றத்தில் நிறுத்துவதுடன் இவர்களுக்கெதிராக கூடுதலான தண்டனை வழங்க திருத்தச் சட்டம் கொண்டு வரப்பட்டுள்ளதாக வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் தெரிவித்துள்ளது.

சட்டத்துக்கு விரோதமான முறையில் ஆட்களை வெளிநாட்டுக்கு அழைத்துச் செல்லும் இம்முகவர்களின் நடவடிக்கைகள் அதிகரித்துள்ளதை அடுத்தே புதிய சட்டதிருத்தம் கொண்டுவரப்பட்டுள்ளதாக பணியகத்தின் தலைவர் கிங்ஸ்லி ரணவக்க தெரிவித்தார்.

அதேசமயம் முன்னைய சட்டத்தின் கீழ் 171 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக குறிப்பிட்ட அவர் ஊழல்கள் மற்றும் மோசடிகளுக்கெதிரான விசேட பிரிவினால் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் அனைவருக்கும் எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டார். புதிய சட்டத் திருத்தத்திற்கிணங்க இவ்வாறான மோசடி நடவடிக்கைகளில் ஈடுபடுவோருக்கு குறைந்தது 1 இலட்சம் ரூபாய் அபராதமும் நான்கு வருட சிறைத்தண்டனையும் வழங்க முடியுமென அவர் மேலும் தெரிவித்தார். (6-4)

## பொதுக்கூட்டம்


காரை மத்தி மேம்பாட்டுக் கழகத்தின் 4 ஆவது ஆண்டுப் பொதுக் கூட்டம் இன்று வியாழக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு கழக அலுவலகத்தில் கழகத்தலைவர் ந.கிருஷ்ணபவன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக காரைநகர் உதவி அரசாங்க அதிபர் இ.த.ஜெயசீலன் கலந்து சிறப்பிப்பதுடன், சிறப்பு விருந்தினர்களாக ஊர்காவற்றுறை கோட்டக் கல்விப் பணிப்பாளர் ச.பாஸ்கரன், காரை மத்தி கிராம அலுவலர் கி.திருப்புகலூர்சிங்கம், காரை மெய்கண்டான் வித்தியாலய ஆசிரியர் து.சசிகரன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

இந்நிகழ்வில் கழக அங்கத்தவர்கள் அனைவரும் தவறாது கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். (ஓ-246)

# மக்களின் பணம் சூறையாடப்படுவதை தடுக்கவே தேர்தலில் போட்டியிடத் தீர்மானித்தேன்

## சரத் பொன்சேகா



(கொழும்பு)

யுத்தம் காரணமாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்க வேண்டிய பணம் சூறையாடப்படுவதனைத் தடுக்கும் நோக்கில் தாம் தேர்தலில் போட்டியிடத் தீர்மானித்ததாக ஜெனரல் சரத் பொன்சேகா அறிவித்துள்ளார்.

இடம்பெயர் மக்களுக்காக ஒதுக்கப்பட்ட நிதி மோசடி செய்யப்பட்டதாகவும் அதனைத் தடுக்கும் நோக்கிலேயே இராணுவ சீருடைக்கு விடைகொடுத்து, அரசியல் களத்தில் குதித்ததாக அவர் தெரிவித்துள்ளார். மாத்தறை சனத் ஜயசூரிய மைதானத்தில் நடைபெற்ற கூட்டமொன்றில் கலந்துகொண்டபோது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

40 ஆண்டுகளாக இராணுவத்தில் சேவையாற்றிய போதிலும் தாம் தமது குடும்ப சொத்துக்களை பெருக்குவதில் நாட்டம் காட்டவில்லை எனவும் எவ்வாறெனினும், சிலர் பதவிக்கு வந்த சில வருடங்களிலேயே ஏழு தலைமுறைக்குத் தேவையான சொத்துக்களைத் திரட்டியுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

முழு நாடும் அடையாளம்கண்டிருக்கும் குடும்ப அரசியலை இல்லாதொழித்து, ஜனநாயகத்தை நிலைநாட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் தெரிவித்துள்ளதோடு இன்னுமொரு இராணுவப் படைத்தளபதிக்கு விடுதலைப்புலிகளுடன் போரிடுவதற்கு சந்தர்ப்பம் அளிக்கமாட்டேன் என்ற தமது வாக்குறுதி நிறைவேற்றப்பட்டதனைப் போன்றே, நாட்டை நல்வழிப் படுத்தும் உறுதிமொழியும் நிறைவேற்றப்படும் என அவர் தெரிவித்துள்ளார்.

யுத்த காலத்தில் நாட்டை விட்டு தப்பியோடிய நபர்கள் இன்று தேசப் பற்றைப் பற்றி பிரமாண்டமான தோரணையில் பிரச்சாரம் செய்து வருவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (6-2)

# ஐ.நா.விசாரணைகளின் மூலம் இலாபமீட்ட முயல்கிறது அரசாங்கம்

## மங்கள சமரவீர

(கொழும்பு)

ஐக்கிய நாடுகளின் யுத்தக் குற்றச்செயல் விசாரணைகளை பயன்படுத்தி அரசாங்கம் அரசியல் ரீதியான இலாபத்தை ஈட்டுவதற்கு முயற்சி மேற்கொண்டு வருவதாக ஜெனரல் சரத்பொன்சேகாவின் ஊடகப்பேச்சாளர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

இந்த விவகாரத்தைப் பெரிதுபடுத்தி, அரசாங்கமே விசாரணைகளுக்கு வழியமைப்பதாக அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

சர்ச்சைக்குரிய பத்திரிகை செய்தி வெளியான உடனேயே ஜெனரல் சரத்பொன்சோக அதற்கான விளக்கத்தை அளித்துள்ளதாகவும் மேலும், யுத்த களத்தில் இடம்பெற்ற சம்பவங்களுக்கு தாம் தனிப்பட்ட ரீதியில் பொறுப்புக் கூறுவதாகவும் பகிரங்கமாக ஒப்புக் கொண்டுள்ளார் என அவர் தெரிவித்துள்ளார்.



ஜெனரல் சரத் பொன்சேகா யுத்த இரகசியங்களை அம்பலப்படுத்தவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

மிகவும் ஒழுக்கம் நிறைந்த படைவீரர்களைக் கொண்டு யுத்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டதாக ஜெனரல் சரத்பொன்சேகா தெரிவித்துள்ளார்.

ஆகையால் தேவையற்ற வகையில் யுத்தக் குற்றச் செயல்களைப் பற்றி கதைப்பதன் மூலம் சர்வதேச விசாரணைகளுக்கு இலங்கை அரசாங்கம் வழியமைப்பதாக அவர் குற்றம் சுமத்தியுள்ளார். (ஓ-2-6)

## அவுஸ்திரேலியாவில்

# குற்றத்தை ஒப்புக்கொண்ட மூன்று தமிழ் இளைஞர்கள்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பிற்கு நிதியுதவிகளை வழங்கியதாக 3 தமிழர்கள் அவுஸ்திரேலிய நீதிமன்றில் ஒப்புக் கொண்டுள்ளனர்.

வழக்குத் தாக்கல் செய்யப்பட்டால் தங்களது குற்றங்களை ஒப்புக்கொள்வதாக சட்டத்தரணி ஊடாக குறித்த மூன்று தமிழ் இளைஞர்களும் விக்டோரியா நீதிமன்றில் தெரிவித்துள்ளனர். ஆரூரன் விநாயகமூர்த்தி, சிவராஜா யாதவன் மற்றும் ஆறுமுகம் ரஜீவன் ஆகியோரே இவ்வாறு தங்களுடைய குற்றச் செயல்களை ஒப்புக்கொண்டுள்ளனர்.

பயங்கரவாத நடவடிக்கைகளுடன் தொடர்புடைய குற்றச்சாட்டின் பேரில் குறித்த நபர்கள் கடந்த 2007 ஆம் ஆண்டு கைது செய்யப்பட்டு பின்னர் பிணையில் விடுதலை செய்யப்பட்டனர். இந்த வழக்கு தொடர்பான விசாரணைகள் இன்று வியாழக்கிழமை மீண்டும் நடைபெறவுள்ளது. (ஓ-2-6)

# இலங்கை தமிழர்கள் கடல் பயணமாக தமிழகம் வர அனுமதி வழங்க வேண்டும்

**இல. கணேசன்**



சிதம்பரத்தில் நடைபெறும் திருவாதிரை விழாவில் கலந்து கொள்வதற்கு இலங்கை தமிழர்கள் தமிழகம் வருவதற்கு அரசு உதவ வேண்டும் என்று தமிழக பாரதீய ஜனதா கட்சி தலைவர் இல. கணேசன் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவித்திருப்பதாவது,

இலங்கையில் உள்ள தமிழர்கள் பெரும்பாலும் இந்துக்களே. அவர்களில் பெரும்பாலோனோர் சைவர்கள். சைவ மக்கள் பெரிதும் போற்றும் திருவாதிரை திருநாள் டிசம்பர் 31 ஆம் திகதி வருகிறது.

இதையொட்டி சிதம்பரத்தில் 11 நாள் சிறப்பு வழிபாடுகள் நடப்பது வழக்கம். இந்த வழிபாட்டில் நமது நாட்டவர் மட்டுமல்லாது வெளிநாடுகளில் வாழும் இந்துக்கள் குறிப்பாக சைவர்கள் பெருமளவில் கலந்து கொள்வது வ்ழக்கம். அதிலும் நமது தொப்புள் கொடி உறவுகளான இலங்கை வாழ் இந்துக்கள் இந்த விழாவில் கலந்து கொள்வதை பெரிதும் விரும்புவார்கள்.

திருவாதிரையை முன்னிட்டு இலங்கை இந்துக்கள் சிதம்பரம் வருவது காலம் காலமாக தொடர்ந்து கொண்டிருக்கிறது.

இதன் பொருட்டே அவர்கள் தாங்கள் வரும் போது தங்குவதற்காக சிதம்பரத்தில் மடாலயங்களை கட்டி வைத்திருக்கின்றனர். அவர்களுக்கு அந்த மடாலயங்கள் இன்றும் இருக்கின்றன.

போர்ச் சூழல் காரணமாக அவர்களின் இந்த யாத்திரையில் சிறிது தொய்வு ஏற்பட்டிருந்தது. போர் முடிவடைந்த நிலையில் அவர்கள் இந்த வருடம் சிதம்பரம் வர ஆவலாய் இருக்கிறார்கள். 1920 ஆம் ஆண்டிற்கு முன்பு வரை அவர்கள் இலங்கையின் வடக்கு பகுதியில் இருந்து படகு மற்றும் கப்பல் பயணமாக சிரமமின்றி தமிழகம் வந்து சென்றார்கள். ஆனால் நிலைமை தற்போது முற்றிலும் பாதகமாக அவர்களுக்கு இருக்கிறது. அவர்கள் தமிழகம் வர வேண்டுமானால் கொழும்பிலிருந்து விமானம் மூலமாக மட்டுமே வர முடியும்.

இது பல மடங்கு கூடுதல் செலவுக்கு வழி வகுப்பதோடு அதிக சிரமமானதாகவும் இருக்கிறது. தற்போதைய நிலையில் இலங்கையின் வடக்குப்பகுதி தமிழர்கள் கொழும்பு செல்வதில் ஏராளமான நடைமுறை சிக்கல்கள் இருக்கின்றன.

எதிர்வரும் காலமாவது தங்களுக்கு ஏற்றம் நிறைந்ததாக இருக்க வேண்டும் என்ற பெருத்த எதிர்பார்ப்போடு, புதிய விடியலுக்காக காத்திருக்கும் இலங்கைத் தமிழர்கள் அதற்காக தங்களின் முழ்முதற் கடவுளான சிவபெருமானை அவருக்கு விசேடமான திருநாளில் தரிசிக்க பெரிதும் ஆவலாய் உள்ளார்கள்.

இலங்கை தமிழர்களின் நம்பிக்கையை குலைப்பதற்கான ஏராளமான நிகழ்வுகள் கடந்த சில மாதங்களில் நிகழ்ந்து விட்ட நிலையில் அவர்களின் முழுமுதற் கடவுளை விடவும் அவர்களுக்கு அதிகம் நம்பிக்கை தருபவர் இன்று யார் உள்ர்?

இலங்கை தமிழர்கள் நம்பிக்கை பெறுவது இன்றைய நிலையில் இன்றியமையாதது என்பதை உணர்ந்து அதற்கேற்றவாறு இந்த விடயத்தை இந்திய அரசும் இலங்கை அரசும் கையாள வேண்டும்.

முந்தைய காலங்களில் இருந்ததை போல் இலங்கையின் வடக்கு பகுதியில் இருந்து படகு அல்லது கப்பல் பயணமாக அவர்கள் இந்தியாவிற்கு தமிழகத்திற்கு வருவதற்கு இந்திய அரசு அனுமதிக்க வேண்டும்.

அவர்கள் அங்கிருந்து சிதம்பரம் செல்ல தேவையான பஸ் வ்சதிகளை தமிழக அரசு செய்து தர வேண்டும். யாத்திரை முடிந்து அவர்கள் இதே முறையில் கப்பலில் தங்கள் நாட்டுக்கு செல்வதற்கும் வாய்ப்பு உருவாக்கப்பட வேண்டும்.

இலங்கை தமிழர்களின் மிக முக்கிய கோரிக்கையான இந்த விடயத்தில் இந்திய அரசும், தமிழக அரசும் அக்கறை காட்ட வேண்டும். இலங்கை அரசிடம் பேசி தேவையான நடவடிக்கையை விரைந்து எடுக்க வேண்டும். இன்றைய நிலையில் இதைவிட அவர்களுக்கு வேறு என்ன நன்மையை செய்ய முடியும் என்றார். (ஓ-6)

## இந்தியாவின் தலையீட்டால் நேபாளத்தில் நெருக்கடி

நேபாள நாட்டின் அரசியல் உள் விவகாரத்தில் இந்தியா நேரடியாகத் தலையிடுவதால் தான் நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது என்று குற்றஞ்சாட்டினார் நேபாள மாவோயிஸ்ட் கட்சித்தலைவர் பிரசண்டா.

இப்போதுள்ள அரசுக்குப் பதிலாக அனைத்து அரசியல் கட்சிகளும் இடம்பெறும் தேசிய அரசை வரும் ஜனவரி 24 ஆம் திகதிக்குள் அமைக்க வேண்டும் ; நேபாள இராணுவத்தில் எங்களுடைய கட்சியைச் சேர்ந்த ஆயுதப் பயிற்சி பெற்ற தொண்டர்கள் அனைவரையும் சிப்பாய்களாக சேர்க்க வேண்டும்.

தேசிய அரசின் உள்நாட்டு, வெளிநாட்டு கொள்கைகள் நேபாளத்தின் சுதந்திரத்தையும் இறையாண்மையையும் நிலைநாட்டும் வகையில் இருக்க வேண்டும். மன்னராட்சியை எதிர்த்துப் போரிட்ட மாவோயிஸ்ட் தொண்டர்களை நேபாள இராணுவத்தில் அப்படியே சேர்க்க தயக்கம் காட்டக்கூடாது.

இந்திய அரசின் வழிகாட்டுதலின் படி நேபாள அரசு நிர்வாகம் நடைபெறக்கூடாது. நேபாளத்தில் எந்த இனத்துக்கும் பிரதேசத்துக்கும் தனி ஆட்சி உரிமை தரப்படக்கூடாது. இந்த நிபந்தனைகளை மாதவ்குமார் நேபாள் அரசு ஏற்றுக் கொள்ளாவிடில் விளைவுகளைச் சந்திக்கத் தயாராக இருக்க வேண்டுமென்று பொதுக்கூட்டத்தில் எச்சரித்தார் பிரசண்டா. (ஓ-6)

## கொழும்பிலிருந்து தங்கம் கடத்தல் மீனம்பாக்கத்தில் நால்வர் கைது

கொழும்பில் இருந்து சென்னைக்கு ரூ. 55 இலட்சம் மதிப்புள்ள தங்க பிஸ்கட்களை கடத்தி வந்த இலங்கை வாலிபர்கள் உட்பட 4 பேர் கைது செய்யப்பட்டனர்.

சென்னை மீனம்பாக்கம் அண்ணா சர்வதேச விமான நிலையத்துக்கு கொழும்பில் இருந்து தனியார் விமானம் ஒன்று வந்தது. அந்த விமானத்தில் வந்தவர்களை சுங்க இலாகா அதிகாரிகள் தீவிரமாக கண்காணித்து வந்தனர்.

அப்போது சந்தேகப்படும்படியாக சென்ற 2 வாலிபர்களை பிடித்து விசாரணை நடத்தியதில் அவர்கள் இருவரும் முன்னுக்குப் பின் முரணாக பேசினார்கள். இதனால் சந்தேகம் அடைந்த சுங்க இலாகா அதிகாரிகள் அவர்களது உடமைகளை சோதனை செய்தனர். ஆனால் அதில் எதுவும் சிக்கவில்லை.

ஆனால் அவர்களின் நடையில் மாற்றம் காணப்பட்டதையடுத்து இருவரையும் மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தினார்கள். அப்போது அவர்களின் ஆசன வாய்ப் பகுதியில் ஏதோ மர்மப் பொருள் இருப்பதை கண்டறிந்தனர்.

இதையடுத்து அவர்களை சோதனை செய்ததில் ஆண் உறைக்குள் தங்க பிஸ்கட் கட்டிகளை வைத்து ஆசன வாய் பகுதியில் மறைத்து கடத்தி வந்தது தெரியவந்தது.

விசாரணையில் அவர்கள் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த செய்யது அகமது (வயது 45), அகமது பாசுலி (வயது 46) என்பது தெரிய வந்தது. மேலும் இவர்கள் சுற்றுலா விசாவில் சென்னை வந்துள்ளனர்.

இதுபோல மற்றொரு தனியார் விமானத்தில் இருந்து வந்தவர்களை சோதனை செய்ததில் இராமநாதபுரத்தை சேர்ந்த பஷீர் (வயது 30) மற்றும் அலி (வயது 32) ஆகியோரும் தங்க ளது ஆசன வாய்ப் பகுதியில் தங்க பிஸ்கட்களை கடத்தி வந்ததை கண்டுபிடித்தனர்.

இதையடுத்து இலங்கை வாலிபர்கள் உட்பட 4 பேரையும் சுங்க இலாகா அதிகாரிகள் கைது செய்தனர். மேலும் அவர்களிடம் இருந்து மொத்தம் 3 ஆயிரத்து 166 கிராம் தங்க பிஸ்கட் கட்டிகளையும் பறிமுதல் செய்தனர். இதன் மதிப்பு ரூ. 55 இலட்சம் ஆகும்.

இவர்கள் 4 பேரும் யாருக்காக தங்க பிஸ்கட்களை கடத்தி வந்தனர் என்று சுங்க இலாகா அதிகாரிகள் விசாரணை நடத்தி வருகின்றனர். (6-2)

## தமிழ்நாடு மீனவர்கள் மீது இலங்கை கடற்படை தாக்குதல்

(இராமேஸ்வரம்)

இராமேஸ்வரத்தில் இருந்து கடந்த திங்கட்கிழமை 450 விசைப்படகுகளில் மீனவர்கள் கடலுக்குச் சென்றனர். அவர்கள் கச்சதீவு அருகே மீன்பிடித்து கொண்டிருந்த போது அங்கு வந்த இலங்கை கடற்படையினர் திடீர் தாக்குதல் நடத்தினர். மீண்டும் இங்கு வந்தால் உயிரோடு திரும்பமாட்டீர்கள் என மீனவர்களை எச்சரித்தனர்.

இலங்கை கடற்படை தாக்கியதில் 10 படகுகள் பலத்த சேதமடைந்தன. இதனால் மீனவர்கள் அங்கிருந்து கரை திரும்பினர்.

இதுகுறித்து மீனவர் சங்க தலைவர் போஸ் கூறுகையில்,

இலங்கை அகதிகளுக்கு மத்திய மாநில அரசுகள் உதவி வருகின்றன. ஆனால் தமிழக மீனவர்கள் மீதான தாக்குதல் சம்பவங்களை மத்திய, மாநில அரசுகள் கண்டு கொள்ளவில்லை.

இதே நிலை தொடர்ந்தால் மீனவர்கள் வாழ்க்கை கேள்விக்குறியாகிவிடும் என்றார். (6-2)

## நாம் தமிழ் நாட்டிலேயே வசிக்க விரும்புகின்றோம்

**ஈழ அகதிகள்**

(இராமநாதபுரம்)

வெளிநாட்டில் தனி ஈழம் வேண்டுமா, வேண்டாமா? என்ற வாக்கெடுப்பு நடந்துள்ள நிலையில், தமிழகத்தில் உள்ள அகதிகளுக்கு இலங்கைக்கு செல்லும் திட்டம் இல்லை என்று கியூ பிரிவு பொலிஸாரின் விசாரணையில் தெரியவந்துள்ளது.

தனி ஈழம் வேண்டுமா, வேண்டாமா? என்பது குறித்து உலகம் முழுவதும் உள்ள இலங்கை தமிழர்களிடம் பல்வேறு விவாதங்கள் உள்ளது. இது தொடர்பாக, கனடாவில் வசிக்கும் இலங்கைத் தமிழர்களிடம் வாக்கெடுப்பு நடத்தப்பட்டது.

இந்நிலையில், தமிழக அகதிகள் முகாம்களில் வசிக்கும் அகதிகளின் நிலை குறித்து கியூ பிரிவு பொலிஸார் இரகசிய விசாரணை நடத்தினர். இதில் பெரும்பாலான அகதிகள் இனி இலங்கையில் தமிழர்கள் நிம்மதியாக வாழமுடியாது.

தனி ஈழம் என்பது கனவாகிவிட்டது. தமிழ்நாட்டிலேயே வசிக்க விரும்புகிறோம் என்று தெரிவித்தனர்.

மேலும் இலங்கையில் நடைபெற உள்ள தேர்தல் குறித்து அகதிகள் ஆர்வம் காட்டவில்லை என்பதும் பொலிஸார் விசாரணையில் தெரியவந்துள்ளது. ஆனால் அகதிகள் முழுமையான தகவல்களை தெரிவிக்காமல் இரகசியம் காக்கலாம் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

பொலிஸ் அதிகாரி ஒருவர் கூறும்போது, அகதிகளிடம் அவ்வப்போது விசாரித்து வருகிறோம். யாரும் இலங்கை செல்ல விருப்பம் தெரிவிக்கவில்லை. இங்குள்ளது போல் வசதி இனி இலங்கையில் கிடைக்காது. அங்கு பாதுகாப்பும் இருக்காது என்பது பலரது கருத்தாக உள்ளது என்றார். (ஓ-6)

## தனி மாநிலத்துக்காக பதவியையும் துறப்போம் தெலுங்கானா காங்கிரஸ் எம்.பி.க்கள் எச்சரிக்கை

(புதுடில்லி)

தெலுங்கானா முடிவில் மத்திய அரசு பின்வாங்கினால் கடும் விளைவுகள் ஏற்படும் என்று தெலுங்கானா பகுதி காங்கிரஸ் எம்.பி.க்கள் எச்சரித்துள்ளனர்.

இது தொடர்பாக பிரதமர் மன்மோகன் சிங், காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி ஆகியோருக்கு கடிதம் எழுதி உள்ளனர்.

அதில் தெலுங்கானா தனி மாநிலம் பெறுவதற்காக எங்கள் பதவியை துறந்து போராட்டத்தில் குதிக்கவும் தயாராக உள்ளோம் என்று எச்சரித்துள்ளனர்.

தெலுங்கானா தனி மாநிலத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து ராயலசீமா மற்றும் ஆந்திரத்தின் பிற பகுதிகளில் நடைபெற்று வரும் போராட்டங்கள் ஏதோ மக்கள் தாங்களாகவே முன்வந்து நடத்தும் போராட்டங்கள் அல்ல.

அனந்தப்பூர் மாவட்டத்தில் நடைபெற்று வரும் போராட்டங்களுக்கு பின்னணியில் கர்நாடகத்தைச் சேர்ந்த ரெட்டி சகோதரர்கள் உள்ளனர். மேலும் செல்வாக்குமிக்க காங்கிரஸ் தலைவர்கள் சிலரும் இந்தப் போராட்டத்தின் பின்னணியில் உள்ளனர் என்று அவர்கள் கடிதத்தில் கூறியுள்ளனர்.

தெலுங்கானா தனி மாநிலம் என்பது 50 ஆண்டுகால கோரிக்கை. இந்தப் போராட்டம் மக்கள் போராட்டம் தெலுங்கானா பகுதியில் உள்ள காங்கிரஸ் தொண்டர்கள் மற்றும் தலைவர்கள் மிகவும் கட்டுப்பாடானவர்கள். கட்சி முடிபுக்கு எதிராக செயல்பட கூடியவர்கள் அல்ல.

கட்சியின் முடிவை ஏற்றவர்கள். ஆனால் தெலுங்கானா விடயத்தில் தேவைப்பட்டால் பதவியை துறந்து விட்டு போராட்டத்தில்குதிக்க தயாராக உள்ளனர் என்று கடிதத்தில் கூறியுள்ளனர்.

தெலுங்கானாவுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் ராயலசீமா மற்றும் கடலோர மாவட்டங்களைச் சேர்ந்த காங்கிரஸ் எம்.பி.க்கள் பிரதமர் மன்மோகன் சிங்கை டில்லியில் திங்கட்கிழமை சந்தித்து தெலுங்கானா விடயத்தில் நிதானமாக முடிபு எடுக்குமாறு கேட்டுக் கொண்டனர்.

இதற்கு பதிலடியாக தெலுங்கானா எம்.பி.க்கள் பிரதமர் மன்மோகன் சிங், சோனியா காந்திக்கு கடிதம் எழுதி உள்ளனர். (6-2)

## மருத்துவர் முரளியின் மனு மீதான விசாரணையை தொடர்ந்து மேற்கொள்ள நீதிமன்று அனுமதி

(கொழும்பு)

மின் மடல் ஒன்றில் தனிப்பட்ட கருத்தை பரிமாறியதற்காக பணி நீக்கம் செய்யப்பட்ட முரளி வல்லிபுரநாதன் என்ற மருத்துவர் தாக்கல் செய்த அடிப்படை உரிமை மீறல் மீதான விசாரணையைச் தொடர்ந்து மேற்கொள்ள உயர் நீதிமன்றம் திங்களன்று அனுமதி வழங்கியுள்ளது.

இடைத்தங்கல் முகாம் குறித்து மருத்துவரான முரளி தெரிவித்த கருத்து இலங்கை அரசாங்கத்திற்கு அபகீர்த்தியை ஏற்படுத்தியுள்ளது என்று தெரிவித்தே முரளியை சுகாதார அமைச்சு பணியில் இருந்து இடைநிறுத்தியிருந்தது.

உயர் நீதிமன்ற நீதியரசர்களான அசோக டி சில்வா , நிஹால் காமினி அமரதுங்க, பீ.ஏ.ரத்னநாயக்க ஆகியோரைக் கொண்ட குழு விசாரணையை எதிர்வரும் மார்ச் 31ஆம் திகதிக்கு ஒத்தி வைத்தது.

மருத்துவரான முரளி தனது அடிப்படை மீறல் மனுவில் ஆரம்ப விசாரணை அதிகாரி ஏ.யூ.கே.வன்னியாராச்சி, பணிப் பாளர் எஸ்.எல்.ஏ.நவரதன் மற்றும் சுகாதார அமைச்சைச் சேர்ந்த யூ.ஏ.மென்டிஸ், அமைச்சின் செயலாளர் எச்.ஏ.ஹகன் தலியனகே, அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா ஆகியோரை குற்றவாளிகளாகக் குறிப்பிட்டிருந்தார்.

தன்னைப் பணியிலிருந்து இடை நிறுத்தியது சட்ட ரீதியற்றது எனவும் சட்டத்தின் முன்னால் யாவரும் சமம் என்ற அடிப்படை உரிமையும் தனது கருத்து வெளிப்பாட்டு மற்றும் பேச்சு சுதந்திரமும் மீறப்பட்டுள்ளது என்றும் மனுதாரர் தனது மனுவில் குறிப்பிட்டுள்ளார்.

மருத்துவரான கிரிசாந்த அபேசேகரவிற்கு தனது தனிப்பட்ட கருத்தை மின் அஞ்சல் ஊடாக தெரிவித்ததற்காகவே தன் மீதான ஆரம்ப விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அரசாங்கத்தை அவமதிக்கும் எந்த நோக்கமும் தனது மின்னஞ்சலில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை என்றும் அவர் தனது மனுவில் குறிப்பிட்டுள்ளார். (6-2)

## புலிகளின் தலைவர்கள் கொலை தொடர்பான பொன்சேகாவின் தகவல்கள் உறுதியாகியுள்ளன

### –விக்ரமபாகு கருணாரத்ன–

(கொழும்பு)

சண்டேலீடர் பத்திரிகையில் சரத் பொன்சேகா வெளியிட்டுள்ள தகவல்களின்படி விடுதலைப்புலிகளின் தலைவர்களான நடேசன், புலித்தேவன் உள்ளிட்ட தலைவர்கள் இராணுவத்தினரிடம் சரணடைந்த பின்னரே கொலை செய்யப்பட்டமை உறுதியாகியுள்ளதாக இடதுசாரி முன்னணியின் தலைவரும் ஜனாதிபதி வேட்பாளருமான விக்ரமபாகு கருணாரத்ன தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகளின் தலையீட்டுடன் ஜனாதிபதியுடன் ஏற்பட்ட இணக்கத்தின் அடிப்படையில் விடுதலைப்புலிகளின் தலைவர்கள் வெள்ளைக்கொடிகளுடன் சரணடைய நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. சிலர் குடும்பத்துடன் சரணடைந்தனர்.

இவ்வாறு சரண டைந்த பிரபாகரன், நடேசன், புலித்தேவன் உள்ளிட்ட தலைவர்கள் அவர்களின் குடும் பங்களுடன் பொல்லுகளினால் தாக்கப்பட்டு கொலை செய்யப்பட்டதாக கடந்த காலங்களில் கதையொன்றும் பரவியிருந்தது. பொன் சேகாவின் இந்தக் கருத்தின் மூலம் அதில் உண்மை இருப்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக விக்ரமபாகு கருணாரத்ன குறிப்பிட்டுள்ளார்.

பிரபாகரனின் மகன்பாலச்சந்திரன், மகள் துவாரகா, மனைவி மதிவதனி பிரபாகரன், நடேசனின்மனைவிமற்றும்மகன் ஆகியோர்இவ்வாறு கொல்லப்பட்டதாக அவர் கூறியுள்ளார்.

எவ்வாறாயினும் இலங்கைக்கு உதவிகளை வழங்கிவரும் உலக செல்வந்த நாடுகள் இலங்கையில் இவ்வாறான குற்றச் செயல் இடம்பெற்றிருக்குமானால் அவர்களை சர்வதேச நீதிமன்றத்தில் நிறுத்த வேண்டும் என குரல் எழுப்பி வருகின்றன.

இலங்கையின் வரலாற்றில் மகிந்த கோத்தபாய போன்றவர்கள் யுத்தத்தின் வீரர்களாக தம்மை இனங்காட்டிக்கொண்டதுடன் சிலர் தம்மை துட்டகைமுனுவாக காட்டிக்கொள்ள முயற்சித்தனர்.

வரலாற்றில் இடம்பெற்ற யுத்தத்தின் போது இரு தரப்பிலும் மக்கள் கொல்லப்படுவதால் தனித்தனியாக மோதலில் ஈடுபடுவோம் என எல்லாளன் துட்டகைமுனுவிற்கு யோசனை தெரிவித்ததாகவும் அப்போது எல்லாளன் 70 வயதுடன் காணப்பட்டதாகவும் கூறப்படுகிறது. பின்னர் இடம்பெற்ற யுத்தத்தில் எல்லாளன் கொல்லப்பட்டதும் துட்டகைமுனு எல்லாளனுக்கு அவமரியாதை செய்யவில்லை.

எல்லாளனை தனது தந்தைப் போல் தூக்கிச் சென்று அடக்கம் செய்ததுடன் அவரது கல்லறைக்கு மரியாதை செலுத்துமாறும் மக்களுக்கு கற்பித்ததாக கருணாரத்ன குறிப்பிட்டுள்ளார். (ஓ-2-6)

## ஜனாதிபதியின் தேர்தல் பதாதைகளை அகற்ற ஆளணி பற்றாக்குறை நிலவுகின்றது

### – பொலிஸ் மா அதிபர் தெரிவிப்பு –

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் பிரதான வேட்பாளர்களில் ஒருவரான ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் கட் அவுட்டுக்கள் மற்றும் பதாதைகள், சுவரொட்டிகள் என்பவற்றை அகற்றுவதற்கு பொலிஸ் திணைக்களத்திடம் ஆளணிப் பற்றாக்குறை காணப்படுகின்றது. இதனாலேயே இவற்றை அகற்ற முடியாதுள்ளது என்று பொலிஸ்மா அதிபர் மஹிந்த பாலசூரிய தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் தேர்தல் திணைக்களத்தில் ஜனாதிபதி வேட்பாளர்களுடன் இடம்பெற்ற சந்திப்பின் போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் கட் அவுட்டுக்கள் மற்றும் சுவரொட்டிகளை அகற்ற பொலிஸார் ஏன் உரிய நடவடிக்கை எடுக்கவில்லையென்று இந்தக் கூட்டத்தில் பொலிஸ் மா அதிபரிடம் கேள்வி எழுப்பப்பட்டது. இதன் போதே பொலிஸ்மா அதிபர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

தேர்தல் கட் அவுட்டுக்களை அகற்றுவதற்கு பொலிஸ் திணைக்களத்தில் ஆளணிப்ப்றாக்குறை காணப்படுகின்றது.

இந்த ஆளணிகளை சேர்த்துக்கொள்வதற்கு உரிய நிதி தேவையாகும். பொலிஸ் திணைக்களத்தில் இதற்கான நிதி இன்மையினால் உரிய நிதியினை வழங்குமாறு தேர்தல் திணைக்களத் திடம் நாம் கோரிக்கை விடுத்துள்ளோம்.

இந்த நிதிகிடைத்ததும் உரிய ஆளணிகளைப் பெற்று கட் அவுட் மற்றும் சுவரொட்டிகளை அகற்றுவோம் என்று பொலிஸ்மா அதிபர் கூறியுள்ளார்.

தேர்தல் பிரசாரத்தின் போது வன்முறைகள் ஏதேனும் நடைபெற்றால் உடடியாக அந்தந்த பகுதிப் பொலிஸ் பொறுப்பதிகாரிக்கு அறிவிக்குமாறும் உரிய நடவடிக்கை எடுக்காவிடின் தனது கவனத்திற்கு அதனை கொண்டு வருமாறும் பொலிஸ்மா அதிபர் தெரிவித்துள்ளார். (6-2)

## பருத்தித்துறை நகராட்சி மன்றம் அறிவித்தல்கள்

**ஆதனவரி அறிவித்தல்கள் –2010**

ஆதன மதிப்பீட்டிற்கமைவாக 2009 ஆம் ஆண்டு நடைமுறையிலிருந்த ஆதனவரித் தொகைகளே 2010ஆம் ஆண்டிற்கும் அவ்வாதனங்களுக்கு செலுத்தப்படற்பாலானதென்றும் இவற்றிற்குரிய ஆதனவரி அறிவித்தல் படிவங்கள் தனித்தனியாக விநியோகிக்கப்பட்டு வருகின்றனவெனவும் வரியிறுப்பாளர்களுக்கு இத்தால் அறியத்தரப்படுகின்றது. இவ்வாதனவரி அறிவித்தல் படிவங்கள் கிடைக்கப்பெறாதவர்கள் அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளலாம். ஆட்சேபனைகள் இருப்பின் இவ்வறிவித்தல் கிடைத்து ஒரு மாத காலத்திற்குள் நகரசபை அலுவலகத்தில் எழுத்து மூலம் சமர்ப்பிக்க வேண்டும். இவ்வாதன வரித் தொகைகள் 2010 ஆம் ஆண்டு மார்ச் –31, ஜுன் –30, செப்ரெம்பர் –30, டிசம்பர் –31 ஆகிய திகதிகளில் காலாண்டுகளுக்கு ஒரு தடவை செலுத்தப்பட வேண்டும்.2010 ஜனவரி– 31 ஆம் திகதிக்கு முன்னர் ஆண்டின் முழு ஆதனவரியையும் செலுத்தினால் 10% வரிக்கழிவும் ஒரு காலாண்டிற்குரிய வரியை அக்காலாண்டின் முதல் மாதத்தில் செலுத்தினால் 5% வரிக்கழிவும் வழங்கப்படும். குறித்த காலாண்டினுள் ஆதனவரி செலுத்தப்படாவிட்டால் அதற்காக முறையே தரிசு நிலம், வதிவிடங்களுக்கு 15 % மும், வியாபார நிலையங்களுக்கு 20% மும், பற்றாணைச் செலவாக (தண்டம்) அறவிடப்படும்.

மேலும் உரிய காலங்களில் அக் காலப் பகுதிக்குரிய ஆதனவரி செலுத்தப்படாவிட்டால் குடியிருப்பாளரின் பொருட்கள் நடுக்கட்டல் செய்யப்படும் எனவும் நகராட்சி மன்ற கட்டளைச் சட்டத்தின் 255 ஆம் அத்தியாயம் 170 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 252ஆம் அத்தியாயமான மாநகரசபை கட்டளைச் சட்டத்தின் 243 ஆம் பிரிவின் பிரகாரம் வாடகைக் காரர் தாங்கள் குடியிருக்கும் ஆதனங்களுக்குரிய வரியைச் செலுத்தி அத்தொகையை வாடகையிலிருந்து குறைத்துக்கொள்ளலாம் எனவும் குடியிருப்பாளர்களின் கவனத்திற்கு அறியத்தரப்படுகின்றது.

புதிதாக காணி கொள்வனவு செய்தவர்களும் நகரசபை ஆதனவரிப் பதிவேட்டில் பெயர் மாற்றம் செய்யப்படாத ஆதனச் சொந்தக்காரர்களும் தமக்குரிய ஆதனங்களை நகர சபை ஆதனவரிப் பதிவேட்டில் பெயர் மாற்றம் செய்வதற்கு உரிய ஆவணங்களை சபை அலுவலகத்தில் சமர்ப்பித்து பெயர் மாற்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள். இது தொடர்பான மேலதிக விளக்கங்கள் தேவைப்படின் அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**1978ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகார சபைச் சட்டம்**

இந் நகரசபை எல்லைக்குட்பட்டோர் தங்களது ஆதனத்தில் புதிதாக கட்டடங்கள், மதில்கள் அமைப்பதானாலும் அல்லது பழைய கட்டடத்தினை திருத்துவதானாலும் நகரசபையில் உரிய ஆவணங்களைச் சமர்ப்பித்து அனுமதி பெற்ற பின்னரே கட்டடங்கள், மதில்கள் அமைக்கப்படல் வேண்டும். புதிய கட்டடம் அமைப்பதற்கு அனுமதி பெற்றவர்கள் அனுமதி பெற்ற திகதியிலிருந்து ஒருவருட காலத்தினுள் வேலை பூர்த்தியடையாது விடின் உரிய கட்டணம் செலுத்தி கட்டட அனுமதியை புதுப்பிக்க வேண்டும்.

அத்துடன் கட்டடம் கட்டி முடிக்கப்பட்டதும் நகரசபை அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு படிவங்களைப் பெற்று பூர்த்தி செய்து உரிய கட்டணத்தினைச் செலுத்தி அமைவு சான்றிதழைப் பெற்றுக்கொண்ட பின்னரே கட்டடத்தில் குடிபுகுதல் வேண்டும். அனுமதி பெறாது அமைக்கப்படும் கட்டடங்கள், மதில்கள் தொடர்பாக ஆதனச் சொந்தக்காரர் மீது குறித்த சட்டப் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும்.

**காணி உபபிரிவிடுகை**

ஆதனமொன்று பல துண்டுகளாக பிரிக்கப்பட்டு அதில் ஒரு காணித்துண்டினை கொள்வனவு செய்ய நேரிடும் சந்தர்ப்பத்தில் பிரிவிடல் (அனுமதி வழங்கப்பட்ட) நில அளவைப் படத்திற்கு அமைவாக எழுதப்பட்ட உறுதி பெயர் மாற்ற நடவடிக்கைக்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். இவ்வாறு காணி பிரிக்கப்படும் போது நகர அபிவிருத்தி அதிகார சபை சட்ட விதி முறைகளுக்கு அமைவாக பிரிவிடப்படுதல் வேண்டும். இவ்வாறு பிரிக்கப்படும் ஒவ்வொரு துண்டுகளும் 150 சதுர மீற்றர் (அண்ணளவாக குளி 10.7)க்கு குறையாது பிரிக்கப்பட வேண்டும் . இவ்விடயம் தொடர்பான மேலதிக விபரங்களுக்கு அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**சூழல் பாதுகாப்பு உரிமம்**

சூழல் பாதுகாப்பு உரிமம் பெற்றுக்கொள்ள வேண்டிய செயற்பாடு தொடர்பாக 2000ஆம் ஆண்டு நவம்பர் 22ஆம் திகதி 1159 / 22 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் “ஆ” பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ள தொழில் / வியாபார நடவடிக்கைகளை நகரசபை எல்லைக்குள் மேற்கொள்பவர்கள் சூழல் பாதுகாப்பு உரிமம் பெற்றுக்கொள்ள வேண்டும். மேற்படி தொழிலை / வியாபாரத்தினை நடத்துபவர்கள் நகரசபை அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு விண்ணப்ப் படிவங்களைப் பெற்று பூர்த்தி செய்து சமர்ப்பித்து உரிய கட்டணத்தினைச் செலுத்தி இவ்வுரிமத்தினை பெற்றுக்கொள்ளலாம். இவ்வுரிமம் பெறாது மேற்படி தொழில்கள் / வியாபாரம் நடத்த அனுமதிக்கப்படமாட்டாது என்பதுடன் அத்தகையவர்கள் மீதும் சட்ட நடவடிக்கை எடுக்க முடியும் எனவும் அறியத்தரப்படுகின்றது.

**வியாபார உரிமம் –2010**

சகல வியாபார / தொழில் நிலையங்களும் தங்கள் வியாபாரத்திற்கான உரிமம் கோரும் விண்ணப்பப் படிவத்தினை நகரசபை காரியாலயத்தில் பெற்று பூர்த்தி செய்து சமர்ப்பித்து உரிய கட்டணத்தினைச் செலுத்தி உரிமத்தினை பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள். 31.03.2010 ஆம் திகதிக்கு முன் உரிமத்தினை பெற்றுக்கொள்ளத் தவறுவோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அறியத்தரப்படுகின்றது.

**வாகனங்கள், மிருகங்களுக்கான உரிமம் 2010**

இந் நகராட்சி மன்ற எல்லைக்குட்பட்டோர் தமது வளர்ப்பு நாய்களுக்கும், துவிச்சக்கர வண்டிகளுக்கும் 2010 ஆம் ஆண்டிற்குரிய உரிமத்தை 31.03.2010 ஆம் திகதிக்கு முன்னர் இவ்வலுவலகத்தில் உரிய கட்டணங்களைச் செலுத்தி பெற்றுக்கொள்ளுமாறு அறியத்தரப்படுகின்றது.

நகராட்சிமன்ற அலுவலகம்,
பருத்தித்துறை.
21.12.2009

திரு.அ.அ.நடராசா,
செயலாளர்,
நகராட்சிமன்றம், பருத்தித்துறை.

(சி/4028)

சில சமயங்களில் அசலை விட போலியே அழகாகத் தோன்றும்

-ஓர் அறிஞர்

## விலைப்படாத பொருட்களின் சந்தையாக மாறும் யாழ்ப்பாணம்

இலங்கையில் பொருளாதார வளம் மிக்க மாவட்டம் எது எனக் கேட்டால் அதற்கான பதில் யாழ்ப்பாணம் எனக் கூறவேண்டும் போல் உள்ளது.

அந்தளவிற்கு யாழ்ப்பாணத்தை வங்கி சார் அமைப்புகளும், வர்த்தக நிறுவனங்களும் ஆக்கிரமிக்கத் தொடங்கியுள்ளன.

தலைநகர் கொழும்பில் இருக்கக் கூடிய அத்தனை வங்கிகளும் யாழ்ப்பாணத்தில் கால் பதித்துள்ளன.

இத்தனை வங்கிகளும் எங்ஙனம் தங்கள் தொழிற்பாட்டை நட்டமின்றி மேற்கொள்ளவுள்ளன என்ற கேள்வியின் மத்தியில் இன்னும் பல வங்கி அமைப்புகள் யாழ்ப்பாணத்தை நோக்கி தாழமுக்க வேகத்தில் வந்து கொண்டிருப்பதான தகவல் விசித்திரமானதே.

ஒரு சிறிய நகரத்தில் இத்துணை வங்கி அமைப்புகள் என்பதை எண்ணும் போது ஆச்சரியமாகவே இருக்கின்றது.

அதேநேரம் அந்த வங்கிகள் யாழ்ப்பாணத்து மக்களின் தேட்டத்தை வாரிச்சுருட்டி தென்னிலங்கைக்குக் கொண்டு சென்று அபிவிருத்திப் பணியில் ஈடுபடுத்தவுள்ளன என்ற உண்மையும்,

யாழ்ப்பாணம் தன்னிடம் இருந்த சேமிப்பையும் இழந்து அபிவிருத்தியும் இல்லாமல், ஆன வீதியும் இல்லாமல் அம்போ என அலையப் போகும் துயரத்தையும் நினைக்கும் போது யாழ்ப்பாண மக்கள் பாவம் செய்தவர்கள் என்பது உறுதியாகின்றது.

இதற்கு மேலாக. கொழும்பில் இருந்து வரும் பொருட்களை கொள்வனவு செய்வதில் மக்கள் முண்டியடிப்பதை பார்க்கும் போது,

பொருளியல் சிந்தனைகள் மிகப் பஞ்சமாகவுள்ளன என்பதையும் ஏற்றுத்தான் ஆக வேண்டும்.

நேற்றைய தினம் திருநெல்வேலிச் சந்தியில் வைத்து லொறி ஒன்றில் இருந்த பிளாஸ்ரிக் பொருட்களை தென்னிலங்கையில் இருந்து வந்தவர்கள் விற்பனை செய்து கொண்டிருந்தனர்.

நிறைந்த மக்கள் கூட்டம். அப்பகுதியால் வாகனங்கள் கூட செல்ல முடியாத பரிதாபம். பிளாஸ்ரிக் பொருட்களை இந்தப் பிறப்பில் கண்டது பெரும்பாக்கியம் என்பது போல் மக்கள் போட்டி போட்டு அவற்றை வேண்டிக் கொண்டனர்.

உலகம் முழுவதும் பிளாஸ்ரிக் பொருட்களை தடை செய்துவரும் இக்கால கட்டத்தில்-தென்னிலங்கையில் பிளாஸ்ரிக் பொருட்களை மக்கள் ஒதுக்கிவிட்ட இந்த நேரத்தில், யாழ்ப்பாண மக்கள் அவற்றை வேண்டுவதற்கு முண்டியடிப்பது வேதனைக்குரிய விடயமே.

இது பற்றிய விளக்கங்களும், தெளிவு படுத்தல்களும் இல்லாத நிலையில், தென்பகுதியில் விலைப்படாத பொருட்களின் சந்தையாக யாழ்ப்பாணம் மாறுவதும், மாறிவருவதும் தவிர்க்க முடியாததாகிவிடும்.

# தேர்தலில் மக்களின் வளங்கள் துஷ்பிரயோகம் செய்யப்படுகிறது

## ட்ரான்ஸ் பெரன்ஸி இன்டர்நஷனல் தகவல்

(கொழும்பு)

தேர்தல் பிரசார நடவடிக்கைகளுக்காக ரூபாய் 700 கோடி தொடக்கம் 800 கோடி ரூபாய் வரை பெறுமதியான பொது வளங்கள் அரசாங்கத்தினால் பயன்படுத்தப்படுவதாக ட்ரான்ஸ் பெரன்ஸி இன்டர்நஷனல் அமைப்பு குற்றம் சாட்டியுள்ளது.

அத்தோடு தேர்தல் ஆணையாளர் சுதந்திரமாக செயற்பாடுவார் என்றும் எதிர்பார்க்க முடியாது என்று இலங்கை ட்ரான்ஸ் பெரன்ஸி இன்டர்நஷனல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ஜே.சி.வெலியமுன்ன குறிப்பிட்டுள்ளார். அதனால் தேர்தலின் போது பொது மக்களின் வளங்கள் துஷ்பிரயோகம் செய்யப்படுவதற்கு எதிராக பொதுமக்கள் மத்தியாலான சக்தி ஒன்று உருவாக்கப்படுவது முக்கியமானது என்று நேற்று முன்தினம் கொழும்பில் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே வெலியமுன்ன இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அரசாங்க வாகனங்கள், ஹெலிகொப்டர்கள் மற்றும் ஏனைய போக்குவரத்து வசதிகள், அரச அதிகாரிகள், அரச கட்டிடங்கள் மற்றும் இதர சேவைகள் அல்லது அரச வங்கிகளால் வழங்கப்படும் விசேட கடன் வசதிகள் போன்ற பொது மக்களின் வளங்களை துஷ்பிரயோகம் செய்யும் சம்பவங்கள் தொடர்பாக அறிவிக்குமாறு பொதுமக்களிடம் வெலியமுன்ன கோரிக்கை விடுத்திருக்கின்றார்.

இவ்வாறு அரச சொத்துக்கள் துஷ்பிரயோகம் செய்யப்பட்டால் லஞ்ச ஊழல் குற்றச்சாட்டின் அடிப்படையில் வழக்குத் தொடரக் கூடிய சாத்தியம் இருப்பதாகவும் அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

அத்துடன் அரச அச்சு, இலத்திரனியல் ஊடகங்கள் துஷ்பிரயோகம் செய்யப்பட்டாலும் அது தொடர்பாக அறிக்கை சமர்பிக்க முடியும். பொது மக்களின் வளங்களைப் பாதுகாப்பதற்கான ட்ரான்ஸ் பெரன்ஸி இன்டர்நஷனலின் நிகழ்ச்சித்திட்டம் விசாரணைகளை மேற்கொள்ளும் எனத்தெரிவித்தார். (ச-5)

# ஒன்றிணைந்து செயற்பட்டால் எந்த சவாலையும் வெல்ல முடியும்

## ஜனாதிபதி தெரிவிப்பு



(கொழும்பு)

தனித்து நின்று செயற்படுவதிலும் பார்க்க நாம் ஒன்றிணைந்து செயற்படுவதன் ஊடாக எந்தவொரு சவாலையும் நாம் வெற்றி கொள்ள முடியுமென ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கண்டி ஜனாதிபதி வாசஸ்தலத்தில் நேற்று முன்தினம் இடம் பெற்ற மத்திய மாகாண வர்த்தகர்களுடனான சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இந்த நாட்டின் மீது பற்றுள்ளவர்கள் கடந்த காலங்களில் என்னுடன் இணைந்து செயற்பட்டதன் மூலம் அனைத்து வெற்றிகளையும் அதாவது யுத்த வெற்றி, அரசியல் வெற்றியை அடைய முடிந்தது. பயங்கரவாதத்துக்கு எதிரான நடவடிக்கையின் போது அரசியல் ஸ்திரத் தன்மையின் பொருட்டு எதிர்க் கட்சிகளிடம் நான் ஆதரவு கோரியுள்ளேன். நான் இவ்வாறு ஆதரவு கோரிய போது நாட்டினதும் மக்களினதும் அன்பு கொண்டவர்கள் எனது செயற்பாடுகளுக்கு பங்களிப்பு செலுத்தினார்கள். இதன் மூலம் நாம் எல்லாவற்றிலும் வெற்றி கொண்டோம்.

ஒதுக்கப்பட்டிருந்த கிராமங்களை அபிவிருத்தி செய்யும் சவாலை வெற்றிகொள்ளும் வாய்ப்பு கடந்த 4வருடங்களாக அரசாங்கத்துக்கு கிடைத்துள்ளது.

நவீன உலக முறைமைக்கு ஏற்றவாறு கூட்டுறவு முறைமையை வலுப்படுத்துவதற்கான புதிய செயல் திட்டமொன்றை நடைமுறைப் படுத்தவுள்ளோம். இதன் மூலம் நாட்டு மக்களும் நாமும் பல நன்மைகளை பெற்றுக் கொள்ளமுடியும் என்று கூறினார்.

இதேவேளை கண்டி டி.எஸ்.மாவத்தையில் அமைக்கப்பட்டுள்ள 137வது லக் சதொச கிளையையும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ திறந்து வைத்தார். (ச-5)

## ஆழிப்பேரலை அனர்த்தத்தின் 5ஆவது ஆண்டு நினைவு நிகழ்வும் கண்காட்சியும்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக நூலக சமூகத்தினர் ஆழிப் பேரலை அனர்த்தத்தின் 5ஆவது ஆண்டு நினைவு நிகழ்வையும் அதனையொத்த கண்காட்சியினையும் நாளை மறுநாள் சனிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடத்தில் நடத்த தீர்மானித்துள்ளனர்.

எனவே ஆர்வலர்கள் அனைவரும் நினைவு நிகழ்வில் கலந்து கொள்வதுடன் கண்காட்சியினையும் பார்வையிடுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். (ஓ-2,4,6,9)

## தன்னையே அர்ப்பணித்தார் யேசு



உண்மை விடுதலை தந்தவரும்
உத்தமர் யேசு பிரான்தானே
எண்ணம் எல்லாம் மனிதவாழ்வு
இன்ப மாக இருக்கவென்று
கண்க ளாக மக்களையே
கருதி யேசு தன்னைத்தான்
உண்மை யாக அர்ப்பணித்தார்
உன்னத சமுதா யமமைக்க

*கவிஞர்*
*வ. யோகானந்தசிவம்*

# இறைவன் உண்டு, இல்லையெனும் மனிதன் - பாபா

பாரதப் போரின் போது கிருஷ்ணனை தேரோட்டியாகக் கொண்ட அருச்சுனன் சரமாரியாக தான் விடும் அம்புகள் குறி தவறாது எதிரிகளை வீழ்த்துவதைக் கண்டு அருச்சுனன் கிருஷ்ணனைப் பார்த்து 'பார்த்தீரா எனது அம்புகள் குறிதவறாது எல்லோரையும் அடித்து வீழ்த்துகின்றது. இருந்தும் எதிர்பக்கத்தில் இருந்து என்னை நோக்கி ஏவும் அம்புகள் ஒன்றும் என்னைத் தாக்கவில்லை எப்படி எனது தீரம்' என்று இறுமாப்போடு கேட்டான். அதற்கு கிருஷ்ணன், 'அருச்சுனா இங்கே பார்' என்று தனது மார்பினைக் காட்டினார். மார்பு முழுவதுமாக அம்புகள் தைத்தவாறு இருக்கக் கண்டான். அருச்சுனன் கிருஷ்ணா என்று ஓலமிட்டவாறு அவரின் பாதத்தில் வீழ்ந்தான் அப்போது கிருஷ்ணன் , அருச்சுனா தேரில் நீ ஏறும் போது கிருஷ்ணா என்று வணங்கியே ஏறினாய். உன்னை நான் காப்பது என் கடமை. எனவே இவற்றையெல்லாம் தாங்கிக் கொண்டேன் என்றார்.

தனக்கு கேடு வரும்போது ; துன்பம் வரும் போது தன் நிலை சார்ந்த காரியங்கள் ஆக வேண்டும் எனும் போது இறைவன் உள்ளான். அவனாலேயே .இவ்விடர் எல்லாம் இடறிப்போக வேண்டும் என ஓயாது வணங்கும் மனிதன் காரியசித்தியானவுடன் கனவிலும் நினையா நீசனாகின்றான். மேலும் இவற்றுக்கெல்லாம் இறைவன் உண்டு, எனக்கு இரங்குவான் என்ற நம்பிக்கை கொண்ட அதே மனிதன் பிறருக்கு மனதாலும், உடலாலும் தீங்கு விளைவிக்கும் போது உண்டென்ற இறைவன் இல்லை என்று தனது செய்கையினால் பதில் தருகிறான்.



இவ்வாறே மனிதன் தனது வேண்டுதல் நிறைவேறியதும் துன்பம் நீங்கியதும் தானே முடிவும் முதலுமான நாய கனாகத் தன்னைக் காண்பிக்கின்றான். படைத்தவனும், எம்மைத் தாங்குபவனும் , இயற்கையும் எம்மைப்பார்த்து ஏளனம் செய்யும். அன்பே உருவான இறைவன் தனது ஆதரவை எமக்கு அருளியவாறே உள்ளான். மாயை என்னும் மாய வலை அகக்கண்ணை மறைத்து தனி வேதம் ஓதும். இதனை நீக்கி இன்னருள் பெற்று ஜீவாத்மா, பரமாத்மாவைச் சேர்வதே பகவான் சாயியின் அவதாரப் போதனையாகும்.

ஜெய்சாயிராம்

யாதவன்

# வலி. வடக்கு மக்கள் தமது சொந்த இடங்களில் மீள்குடியமர்த்தப்படுவர்

## அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உறுதி



(யாழ்ப்பாணம்)

வலிகாமம் வடக்கு அதி உயர் பாதுகாப்பு பிரதேசத்திலிருந்து இடம்பெயர்ந்துள்ள மக்கள் மீளவும் தங்களது சொந்த இடங்களில் மீளக்குடியமர்த்தப்படுவார்கள் என இடம்பெயர்ந்த மக்கள் மத்தியில் உரையாற்றிய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

வலிகாமம் வடக்கு தெல்லிப்பளை பிரதேச செயலக மண்டபத்தில் வலிகாமம் வடக்கு இடம்பெயர்ந்த மக்களுடனான சந்திப்பின் போது உரையாற்றுகையிலேயே அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேற்கண்டவாறு தெரிவித்தார். வலி .வடக்கு மீள் குடியேற்ற ஒன்றிய தலைவர் ஏ.எஸ்.நடராஜா தலைமையில் இடம்பெற்ற இச் சந்திப்பில் இடம் பெயர்ந்த மக்களில் பெருந் தொகையானோர் கலந்துகொண்டனர்.

இக்கூட்டத்தினை ஆரம்பித்து வைத்து உரையாற்றிய நடராஜா சுமார் இரு தசாப்தகாலமாக இடம் பெயர்ந்துள்ள வலி .வடக்கு மக்களின் மனவேதனைகளையும் உள்ளக்குமுறல்களையும் விலாவாரியாக எடுத்துரைத்தார்.

இதனைத் தொடர்ந்து உரையாற்றிய தெல்லிப்பளை பிரதேச செயலாளர் முரளிதரன் இடம் பெயர்ந்த மக்களின் எண்ணிக்கை குறித்த புள்ளிவிபரங்களை முழுமையாக எடுத்துக் கூறினார். இதன் பிரகாரம் இப்பகுதியில் இருந்து சுமார் 60 ஆயிரம் வரையான மக்கள் இடம்பெயர்ந்து மீளக் குடியேற வேண்டியுள்ளதாக தெரிவித்தார்.

இதனைத் தொடர்ந்து உரையாற்றிய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இடம்பெயர்ந்த மக்களின் மன உணர்வுகளை தான் நன்குணர்ந்துள்ளதாக தெரிவித்தார். தான் புனர்வாழ்வு அமைச்சராக இருந்த போது வலிகாமம் இடம்பெயர்ந்த மக்களுக்காக வேறொரு பிரதேசத்தில் வீட்டுத் திட்டம் அமைக்க நடவடிக்கை எடுத்ததாகவும் அத்திட்டமானது மக்கள் நலனைக்குறித்து அக்கறை கொள்ளாத அரசியல் வாதிகளினால் சீர்குலைக்கப்பட்டதாகவும் கூறினார்.

தான் முன்னெடுத்த திட்டம் மட்டும் செயற்படுத்தப்பட்டிருக்குமானால் அமைக்கப்பட்ட வீட்டுடன் மீளக் குடியேறும் போது சொந்த வீடுமாக இரு வீடுகளுக்கு இடம் பெயர்ந்த மக்கள் சொந்தக்காரர்களாக இருந்திருக்க முடியும் என்பதையும் தெளிவுபடுத்தினார். (ஓ-6)

# ஈழத்துச் சிதம்பரத்தான் திருவடிக்கு...

## இன்று இரண்டாம் நாள் உற்சவம்



புனருத்தாரணம் செய்யப்பட்ட ஆலயச் சுவரில் அமைக்கப்பட்டுள்ள சிவதாண்டவ மூர்த்தங்களும், சிவனின் திருவிளையாடல்களைக் குறிக்கும் ஓவியங்களும்

## மாசிலிப் பதியில் நீடு மாதவஞ் செய்தால் வீடாம்

காசியிலிறக்க வீடாந்
தில்லையைக் காண வீடாம்
பேசிடு மாரூர் தன்னிற்
பிறந்திட வீடாம் பெட்பார்
தேசுறு மருணை தன்னைச்
சிந்திக்க வீடாமென்பர்
மாசிலிப் பதியில் நீடு
மாதவஞ் செய்தால் வீடாம்

ஈழத்துச் சிதம்பர புராணம்

# காரைநகர் கடற்தொழிலாளர்களுக்கு ராடர் தெறிகருவிகள் வழங்கப்பட்டன!

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் மேற்கு மற்றும் காரைநகர் பிரதேச கடற்தொழிலாளர்களுக்குநேற்று முன்தினம் அமைச்சர் டக்ளஸ் தேவாணந்தா ராடர் தெறிகருவிகளை வழங்கியுள்ளார்.

கட்டுமரத்தில் கடற்தொழில் செய்யும் கடற்தொழிலாளர்கள் தற்சமயம் கடல்வலய தடைச்சட்டம் முற்றாக நீக்கப்பட்ட நிலையிலும் ராடர் தெறிகருவிகள் இல்லாமையால் பாதுகாப்பற்ற நிலையில் கடற்தொழிலை மேற்கொள்ள வேண்டியிருந்தது. இதன் காரணமாக கடற்படை படகுகளினால் விபத்துக்குள்ளாகும் நிலை மட்டுமின்றி இயற்கை அனர்த்தங்களினால் கடற்தொழிலாளர்கள் காணாமற் போகும் போது அல்லது வழிதவறி போகும் போது அவர்களைக் கண்டு பிடிப்பதும் சிரமமான காரியமாக இருந்தது.

இவ்விடயம் தொடர்பில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் கவனத்திற்கு ஏற்கனவே கடற்தொழிலாளர்களினதும் கடற்படையினராலும் சுட்டிக்காட்டப்பட்டிருந்த நிலையில் அவுஸ்திரேலிய அரசின் நிதியுதவியுடன் ஐ.ஓ.எம் நிறுவமானதும் ஒவ்வொன்றும் 3 ஆயிரத்து 750 ரூபா பெறுமதியுடைய மொத்தம் சுமார் பத்து இலட்ச ரூபா மதிப்புடைய ராடர் தெறிகருவிகளை அன்பளிப்பு செய்துள்ளது.

பொன்னாலை இறால் குளிரூட்டும் நிலைய வளாகத்தில் யாழ். மாவட்ட கடற்தொழில் திணைக்கள உதவிப்பணிப்பாளர் தர்மலிங்கம் தலைமையில் இடம் பெற்ற நிகழ்விலேயே ராடர் தெறிகருவிகளை காரைநகர் மற்றும் வலிகாமம் மேற்கு கடற்தொழிலாளர்களுக்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வழங்கினார். இதே போன்று ஏனைய பகுதிகளில் உள்ள கடற்தொழிலாளர்களுக்கும் இக் கருவிகள் வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (ஓ)

# அரசின் செயற்பாடுகளால் 3 இலட்சம் பேர் தொழில்களை இழக்கவுள்ளனர்

## -ரணில் விக்கிரமசிங்க-

மகிந்த ராஜபக்சவின் ஜனநாயகமற்ற மனித உரிமை மீறல் செயற்பாடுகள் காரணமாக, நாட்டில் சுமார் 3 இலட்சம் பேர் வரை தமது தொழில்களை இழக்கவுள்ளதாக எதிர்க்கட்சி தலைவர் ரணில் விக்கிர மசிங்க தெரிவித்துள்ளார்.

ஐரோப்பிய ஒன்றியத்தின் ஆடைக் கோட்டா, வரிச்சலுகை இரத்துச் செய் யப்படுமானால் 3 இலட்சம் பேர் வரை தமது தொழில்களை இழப்பர் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நிலையில் சரத் பொன்சேகா, ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டால், ஆடைக் கோட்டாவை மீண்டும் பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என அவர் தெரிவித்துள்ளார்.

சரத் பொன்சேகா ஆட்சிக்கு வந்தால் உடனடியாக, நிறைவேற்று ஜனாதிபதி முறை ஒழிக்கப்பட்டு, அதிகாரம் உள்ள பிரதம மந்திரி முறை உருவாக்கப்படும் என்றும் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். (6-2)


## கூறுவிலை கோரல் - அலுவலக கட்டிடம்

இலங்கை மின்சார சபை பிரதம மின்பொறியியலாளர் (கட்டமைப்பு) வடமாகாணம் அலுவலகத்திற்கு கீழ்க் குறிப்பிடப்படும் வசதிகளுடைய ஓர் கட்டிடம் வாடகைக்கு உடனடியாக தேவைப்படுகிறது.

(1) 1000 சதுரமீற்றர் கட்டிட நில விஸ்தீரணம் உடையதாக இருத்தல் வேண்டும்.

(2) யாழ். மாநகர எல்லைக்கு உட்பட்டதாக இருத்தல் வேண்டும். (கே.கே.எஸ் வீதி, மனோகராசந்தி அருகாமையிலான கட்டிடம் விரும்பத்தக்கது)

(3) நீர் வசதி உள்ளதாக, 15 பேர் பாவனைசெய்யக்கூடிய மலசல கூட வசதியுள்ளதாக இருத்தல் வேண்டும்.

(4) சுமாராக 4 வாகனங்களை நிறுத்தி வைக்கக்கூடியதான இட வசதியுள்ளதாக இருத்தல் வேண்டும்.

குறைந்தது 1 வருடம் பாவனை செய்யக்கூடியதாக ஒப்பந்தம் செய்ய விருப்பமாக இருத்தல் வேண்டும்.

மேற்படி வசதிகளை உடைய கட்டிட உரிமையாளர்கள் தங்கள் கூறு விலைகளை பதிவு செய்யப்பட்ட காணி உறுதி பிரதிகளுடன் எதிர்பார்க்கும் மாதாந்த வாடகையையும் குறிப்பிட்டு 30.12.2009 க்கு முன்னதாக கிடைக்கும் படி கீழ் குறிப்பிடப்படும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

மேலதிக தகவலுக்கு மின் பொறியியலாளர் (வாணிபம்)
பிரதிப் பொது முகாமையாளர் (வடக்கு)
பிரதிப் பொது முகாமையாளர் (வடக்கு) அலுவலகம்,
இல. 500 கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்

தொலைபேசி இல. 021 222 2496
021 222 3233
தொலைநகல் இல. 021 222 2497

"சூழல் மற்றும் அபிவிருத்தி வேலைகளிற்கு கை கொடுக்கும் இலங்கை மின்சார சபை" (சி/4031)


# ஜே.வி.பி.யின் முன்னாள் சிரேஷ்ட தலைவர்கள் சரத் பொன்சேகாவிற்கு ஆதரவளிக்கத் திட்டம்

(கொழும்பு)

ஜே.வி.பி கட்சியின் முன்னாள் சிரேஷ்ட தலைவர்கள் சிலர் எதிர்க் கட்சிகளின் பொது ஜனாதிபதி வேட்பாளர் ஜெனரல் சரத் பொன்சேகாவிற்கு ஆதரவளிக்கத் தீர்மானித்துள்ளனர்.

ஜே.பி.பி.கட்சியின் முக்கிய தலைவர்களாகக் கருதப்படும் லயனல் போபகே மற்றும் கெலி சேனநாயக்க ஆகியோரே சரத்பொன்சேகாவிற்கு ஆதரவளிப்பதாக அறிவித்துள்ளனர்.

இதற்காக குறித்த முன்னாள் ஜே.வி.பி. உறுப்பினர்கள் ஜெனரல் சரத் பொன்சேகாவிற்கு ஆதரவளிக்கும் மக்கள் அமைப்பு என்ற அமைப்பை நிறுவியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தற்போதைய ஜனாதிபதிக்கு எதிரான போராட்டத்தில் தாங்கள் இணைந்து கொள்ளப் போவதாகவும் தேசத்தின் நன்மையை கருத்திற் கொண்டு இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டதாகவும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

1971ஆம் ஆண்டு மற்றும் 1976 ஆம் ஆண்டு ஆகிய கிளர்ச்சிகளின் போது குறித்த இந்த இரண்டு தலைவர்களும் மிக முக்கிய பங்காற்றியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (6-2)

# மருந்துப் பற்றாக்குறையை ஆராய்வதற்கு சுகாதார அமைச்சு புதிய நடவடிக்கை

(கொழும்பு)

அரசாங்க வைத்தியசாலைகளில் நிலவும் மருந்துப் பற்றாக் குறைகள் தொடர்பாக ஆராய்வதற்கு விசேட அதிகாரி ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவிக்கிறது.

அரச வைத்தியசாலைகளில் நிலவும் மருந்துப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சு கூறுகிறது.

அத்தியாவசிய மருந்துப் பொருட்களுக்குத் தட்டுப்பாடு நிலவுவதாக வெளியாகும் தகவல்களை ஆராய்ந்து தேவைக்கேற்ப மருந்துகளைப் பெற்றுக்கொடுப்பதற்காகவே இந்த அதிகாரி நியமிக்கப்பட்டுள்ளார்.

இதன்பிரகாரம் எந்தவொரு வைத்தியசாலையிலாவது மருந்துப் பொருட்களுக்குத் தட்டுப்பாடு நிலவுவதாகத் தெரிய வந்தால் 0112681175 அல்லது 0777347721 என்ற தொலைபேசி இலக்கங்களூடாக தகவல்களைத் தெரிவித்தால் உடன் நடவடிக்கை எடுக்கப்படுமென அமைச்சு கூறுகிறது.(ஓ-2-6)

# மட்டக்களப்பு கல்வியியற் கல்லூரிக்கு நேர்முகத்தேர்வுக்கு அழைக்கப்பட்டோர்

(யாழ்ப்பாணம்)

**மட்டக்களப்பு தேசிய கல்வியியற் கல்லூரிக்கு 2010 ஆம் கல்வியாண்டுக்குத் தொழில்நுட்பம், சமூக விஞ்ஞானம், நாடகமும் அரங்கியலும், நடனம், சங்கீதம் ஆகிய பாடநெறிக்கான நேர்முகப் பரீட்சை 2010 ஜனவரி 2 ஆம், 3 ஆம் திகதிகளில் யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரியில் இடம்பெறும் என பீடாதிபதி எஸ்.கே.யோகநாதன் அறிவித்துள்ளார்.**

**இவர்களுக்கு நேர்முகப் பரீட்சைக்கான கடிதங்கள் மட்டக்களப்பு தேசிய கல்வியியற் கல்லூரியினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்பட்டுள்ளவர்களின் விபரம் வருமாறு,**

### தொழில்நுட்பம்

கே.புனிதா (பண்டத்தரிப்பு), ஏ.கஜந்தன் (கைதடி), ஜி.தனுஷன் (மீசாலை), ரி.சுந்தரசன் (மல்லாகம்), எஸ்.பிரமானந்தன் (ஆனைக்கோட்டை), எஸ்.தினேஷா (புன்னாலைக்கட்டுவன்), கே.சுதாகரன் (சுழிபுரம்), எஸ்.கிருஷ்ணவரன் (காரைநகர்),

ரி.சுஜிதா (வல்வெட்டித்துறை), பி.ஜெனனி (சாவகச்சேரி), யு.கர்னிகா (பண்டத்தரிப்பு), எஸ்.சிவனேஸ்வரன் (வல்வெட்டித்துறை), ரி.பிரபு (வல்வெட்டித்துறை), ஜி.டென்ஜெனி (சுழிபுரம்), எஸ்.யசோதரன் (அச்செழு),

அசான் யாடிவெல் (யாழ்ப்பாணம்), எம்.செல்வராசா (மானிப்பாய்), எம்.மேரி டயானா (சுன்னாகம்), ஆர்.கபிலதாஸ் (மீசாலை), ரி.ஆபிரகாம்லிங்கன் (தெல்லிப்பழை), பி.பிரியந்தி (சாவகச்சேரி),

ஆர்.சுகந்தி (மானிப்பாய்), ரி.கஜானன் (உசன்), ரி.மதன்ராஜ் (அச்சுவேலி), ஆர்.டிலக்ஷனா (பண்டத்தரிப்பு), எஸ்.கஜிதா (ஆனைக்கோட்டை), ரி.சிவரூபன் (காரைநகர்), ரி.நிமல் (கொடிகாமம்), ரி.வினோசியா (ஆறுகால்மடம்), ஜி.கருணாகரன் (நாரந்தனை வடக்கு),

கே.கலிஞானரட்ணா (வல்வெட்டித்துறை), யு.வதனா (கோண்டாவில்), எஸ்.டயஸ் மல்லாகம்), பி.துஜனிதா (யாழ்ப்பாணம்), ப.பார்த்தீபன் (மல்லாகம்),பி.துஷாஜினி (உடுவில்), எஸ்.வாகீசன் (காங்கேசன்துறை), எஸ்.ரகுவரன் (ஆனைக்கோட்டை), எஸ்.பிரதாபன் (நீர்வேலி),

வி.விஜிதரன் (வல்வெட்டித்துறை), எல்.சுதர்ஷினி (ஆனைக்கோட்டை), ரி.சுபேஷ் (சாவகச்சேரி), எஸ்.அஜந்தன் (மானிப்பாய்), எஸ்.லக்ஷ்மன் (மிருசுவில்), கே.நிருஜன் (இணுவில்), எம்.ரஞ்சினி (காரைநகர்), எம். , இலட்சுமிகாந்தன் (மிருசுவில்),

எஸ்.செந்தூரன் (வட்டுக்கோட்டை), எஸ். உமர்ணா (கைதடி), என்.சிவரஞ்சன் (சாவகச்சேரி), ஜே.சுதாகரன் (சுழிபுரம்), எம்.துவாரகன் (கோப்பாய்), ரி.பரமநாதன் (வரணி), எஸ்.கோபிகா (மானிப்பாய்),

ரி.தவபாலசிங்கம் (மிருசுவில்), எவ்.கமில்டன் நிஷாந்தன் (யாழ்ப்பாணம்), எஸ்.லிக்ஷன் (கோண்டாவில்), இ.கோகுலதாபன் (உடுப்பிட்டி), கே.கல்யாணி (உடுவில்), எஸ். மணிமாறன் (இணுவில்),

பி.சுஜானி (யாழ்ப்பாணம்), ஏ.பேரிஸ் பேகர் (உரும்பிராய்), ரி.எஸ்.பிரியதர்ஷினி (சுழிபுரம்), ஜி.கவிதா (ஏழாலை), ஆர்.ஸ்ராலின் (பண்டத்தரிப்பு), எம்.சபாநாயகம் (இணுவில்), ஆர்.சர்மிளா (காரைநகர்), ஏ.ரமணன் (பருத்தித்துறை),

வி.கஜீபன் (அளவெட்டி), எஸ்.கார்த்திகா (நீர்வேலி), பி.சிந்துஜா (சாவகச்சேரி), எம்.மதுசூதனன் (அல்வாய்), எஸ்.சுமித்திரா (உடுவில்), கே.சிறிநிரோஜா (மானிப்பாய்), ரி.ரஜீத் (யாழ்ப்பாணம்), எஸ்.ஜெனகன் (உரும்பிராய்), எஸ். பிரகாந்தன் (வட்டுக்கோட்டை),

எஸ்.ரவிவர்மன் (இணுவில் தெற்கு), ஆர். பிரதீபன் (காரைநகர்), ஏ.நிஷாந்தன் (உரும்பிராய்), பி.குணசோதிநாயகம்(அச்சுவேலி), எஸ்.ஆரணி (கைதடி), கே.மயூரி (நுணாவில்), ஏ.ஜங்கரன் (மல்லாகம்), ஆர். கவிந்தன் (சாவகச்சேரி),

எஸ்.பூங்குன்றன் (புத்தூர்), ஜே.வி.அஜித் (மல்லாகம்), ஜி.கோகுலன் (காரைநகர்), எஸ். ரி.சங்கீதா (வட்டுக்கோட்டை), ஆர். கதீஸ்வரன் (மிருசுவில்), கே.சிவயோகன் (கோப்பாய்), ஆர்.யூழற் நிதர்ஷினி (இளவாலை), ஆர்.காண்டீபன் (கொக்குவில்), ரி.ஜெகஞானம் (தையிட்டி),

எம்.செந்தூரன் (சுன்னாகம்), ஜே.ஜென்சி ராஜ் (மல்லாகம்),

### சமூக விஞ்ஞானம்

ஆர்.சின்னராசா (மீனாட்சி அம்மன் வீதி, யாழ்ப்பாணம்), எஸ்.றொபின்ராஜ் (கூட்டைக்காடு), எஸ்.பத்மநாதன் (கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்), பி.கீர்த்திகா (இணுவில் கிழக்கு), ஆர்.வினிதா (ஊரெழு வடக்கு), கே.யதுப்பிரியா (யாழ்.இராமநாதன் வீதி), ஆர்.சிந்துஜா (திருநெல்வேலி கிழக்கு),

பி.கஜேந்திரகுமார் (கைதடி தென் கிழக்கு), எஸ்.விஷ்ணுராஜா (ஆவரங்கால் மேற்கு), எஸ்.பாரதி (நாகர்கோவில் தெற்கு), கே.நந்தினி (வட்டு.தென்மேற்கு), என்.பிருந்தா (புலோலி தெற்கு), பி.சுகிர்தா (நவாலி வீதி, ஆனைக்கோட்டை),

ஜி.சதாசிவம் (நல்லூர் வடக்கு), கே.உதயராஜ்(வேலணை கிழக்கு), ரி.மோகனதாஸ் (தொல்புரம் மத்தி.), எஸ்.சுஜீவன் (ராஜவீதி, அச்சுவேலி), கே.சியாமளா (ஐயனார் தெரு, பருத்தித்துறை), பி.தினேஷ்குமார் (வேலணை கிழக்கு), ரி.மயூரன் (சங்கானை மேற்கு),

கதிரமலைநாதன் (வண்ணார்பண்ணை மேற்கு), சபேஷன் (கைதடி தென்கிழக்கு), எம்.இறைன் நியோசா (கோவில் வீதி,யாழ்ப்பாணம்),எஸ்.கிருஷ்ணவரன் (வாரியவளவு காரைநகர்), எம்.இரத்தினம் (பொன்னாலை மேற்கு), பிரின்சி (8 ஆம் வட்டாரம், நெடுந்தீவு).

### நாடகமும் அரங்கியலும்

ஈ.சுவிற்ரி (சண்டிலிப்பாய் மேற்கு), ரி.கிருஷ்சாளினி (சண்டிலிப்பாய் மேற்கு), பி.கார்த்தீபன் (புலோலி கிழக்கு), கே.இராசதுரை (கரணவாய் வடக்கு), ஏ.நிரோஜா (மூளாய் வடக்கு), வி.இமாஜினி (சண்டிலிப்பாய் வடக்கு),

ஆர்.பானுஜா (கைதடி மேற்கு), ஆர். பாலசுப்பிரமணியம் (கோப்பாய் மத்தி.), எம்.நிரோஜன் (கோப்பாய் மத்தி.), என்.நித்தியானந்தன் (கல்வளை வீதி, சண்டிலிப்பாய்),ஜே.ஜெனார்த்தன் (வியாபாரிமூலை),என்.எஸ்.அழகையா (துன்னாலை வடக்கு),

என்.விஜிதரன் (மனோகரா, அல்வாய்), எம்.ஏ.எல்.ராஜி (சில்லாலை வடக்கு),எஸ்.பத்மநாதன் (பற்றாளை வீதி, சுழிபுரம்), தஞ்ஜனராஜி (நவக்கிரி சந்தி, புத்தூர் வடக்கு), பி.சுபத்திரா (இமயாணன் கிழக்கு), ரி.தியாகராஜா (வட்டு.தெற்கு),

வி.யசோதா (நாகர்கோவில் தெற்கு), கே. ஆருணி (கரவெட்டி தெற்கு),ஏ.ஜெயகுணம் (கரணவாய் தெற்கு), வி.ஜெயராஜா (அளவெட்டி மேற்கு), வை.சுதர்ஷன் (சண்டிலிப்பாய் மேற்கு), ஏ.டுமினிக் றீகன் (பருத்தித்துறை),

ரி.சயானா (உடுவில் கிழக்கு), ஆர்.துஷா (கரவெட்டி தெற்கு), எஸ்.சிந்துராஜ் (கரவெட்டி மேற்கு), எஸ்.அனுஷா (தொட்டிலடி, சங்கானை), பரமேஸ்வரன் (கொடிகாமம் வீதி, நெல்லியடி),எஸ்.தேவகுமார் (கோப்பாய் மத்தி.),கே.பிரசாளினி (வட்டு.மேற்கு),

பி.பவித்ரா (வதிரி, கரவெட்டி), பி.தமிழினி (அல்வாய் மேற்கு), ஆர்.ஜெனனி (அம்பன் குடத்தனை), ரி.காளிதாஸ் (அளவெட்டி தெற்கு), கே.கந்தசபேஷன் (அம்பன் குடத்தனை), எஸ்.மகிஜா (சண்டிலிப்பாய் வடக்கு), கே.சிந்துஜா (கைதடி மத்தி.), எஸ்.சங்கீதா (அராலி வடக்கு),

ரி.சஜீபன் (அளவெட்டி மத்தி.), என்.தம்பிப்பிள்ளை (களபூமி,காரைநகர்),எம்.பிரதீபன் (அம்பனை, தெல்லிப்பழை),ஆர்.சுமணா (பொலிகண்டி),ஏ.நிரோஜன் (வி.எம். வீதி, பருத்தித்துறை), என்.சந்தியேந்திரா (மிருசுவில் வடக்கு),

வி.செந்தூரன் (தும்பளை, பருத்தித்துறை), கே.கலைஞானரத்தினா (வல்வெட்டித்துறை), எஸ்.சாளினி (அளவெட்டி வடக்கு),எஸ்.டயஸ் (நீதிமன்ற வீதி, மல்லாகம்), வி.பார்த்தீபன் (புகையிரத வீதி, மல்லாகம்), என்.புஷ்பராசா (கீரிமலை வீதி, சித்தன்கேணி),

ஆர்.சுஜன் (துர்க்காபுரம், தெல்லிப்பழை), எஸ்.சுதாகரன் (குப்பிளான் வடக்கு), கே.மீரா (கரவெட்டி கிழக்கு), ஏ.மதிகிருபா (ஏழாலை மத்தி.), தி.கஸ்தூரி(கரணவாய் வடக்கு),எம்.செந்தூரன் (அல்வாய் வட மேற்கு), கே.சரண்ஜா (மடத்தடி, சண்டிலிப்பாய்),

வி.சிந்துஜா (சண்டிலிப்பாய் மேற்கு), எஸ். கபிலினி (அளவெட்டி வடக்கு), எம்.சிவதர்ஷன் (புலோலி வடக்கு), ஜி.தமிழினி (2 ஆம் வட்டாரம், அல்லைப்பிட்டி), எஸ்.அஜந்தன் (நவாலி வடக்கு), ரி.லக்ஷ்மன் (நல்லையான் தெரு, இளவாலை),

வி.மிரிசியா (வட்டு.தெற்கு), எம்.ரவிசாந் (அரியாலை மேற்கு), ஜே.பாலச்சந்திரன்(நீர்வேலி வடக்கு), பி.நிரோஜினி (சண்டிலிப்பாய் வடக்கு), கே.கிரிதரன் (சரவணை மேற்கு), ப. சிவராஜா (சுழிபுரம் மேற்கு), எஸ்.தங்கராசா (மாகியப்பிட்டி, சண்டிலிப்பாய்),

என்.வீரசிங்கம் (கைதடி மத்தி.), ஜே.டபிள்யூ. மேனகா (கடவப்புலம், சுன்னாகம்), எம். சஜித்தா (தொல்புரம் மேற்கு), பி.செல்வராஜா (நீர்வேலி வடக்கு), ஜி.தர்ஷினி (புலோலி வடக்கு), எஸ்.ரஜீவனா (கரணவாய் வடக்கு), வி.ரகுவரன் (தொல்புரம் மேற்கு), எச்.யோகநாதன் (மூளாய் வீதி, வட்டு.தெற்கு),

கே.கோபி (அல்வாய் மேற்கு), கே.வாகீசன்(அராலி தெற்கு), கே.யோகநாதன் (வட்டு. தெற்கு),சி.செல்வரதி (நெல்லியடி கிழக்கு), வி. சுரேக்கா (சண்டிலிப்பாய்), என்.ஜெகதரன் (தெல்லிப்பழை), கே.பிரதீபன் (மீசாலை வடக்கு),

ரி.விகோபன் (கரணவாய் தெற்கு), கே. சுதர்ஷன் (தெல்லிப்பழை கிழக்கு), என்.லபாகரன் (வேலணை கிழக்கு), கே.ரூபிதா (இமயாணன் மேற்கு), வி.தாரகா(இமயாணன் மேற்கு), எம்.மதியழகன் (ஏழாலை மத்தி.), எஸ்.துசிதா (அல்வாய் தெற்கு),

வி.நந்தினி (வட்டு.வடக்கு), வி.துஷ்யந்தன் (அல்வாய்), ரி.தனுசியா (டச்சு வீதி, சண்டிலிப்பாய்), எஸ்.சபரிதன் (பண்ணாலை, தெல்லிப்பழை), கே.தர்மதாசன் (சண்டிலிப்பாய் மேற்கு), எஸ்.அனுராகன் (தெல்லிப்பழை கிழக்கு), ரி.திலக் (வட்டு.கிழக்கு),

வி.சயந்தன் (சண்டிலிப்பாய் வடக்கு), எஸ். நிஷாந்தன் (விடத்தல் பளை,மிருசுவில்), ஜி. குணசேகரன் (துர்க்காபுரம், தெல்லிப்பழை), எஸ்.நிஷாந் (மனோகரா, அல்வாய்), பி.மருதலிங்கம்(கட்டுடை, மானிப்பாய்),

ரி.மகாலிங்கம் (வடலியடைப்பு), கே.ஜெகதர்ஷன் (மனோகரா, அல்வாய்), ஈ.மதநீசன் (பண்ணாளை, தெல்லிப்பழை), எம்.சபாநாயகம்(இணுவில் தெற்கு), எஸ்.கஜந்தி (சுன்னாகம் கிழக்கு), ஈ.துவாரகன் (அல்வாய் தெற்கு), கே.தாட்சாயினி (மகாத்மா ஒழுங்கை, நெல்லியடி),

கே.காந்தன் (கரவெட்டி தெற்கு), பி.சுபாஜினி (அளவெட்டி கிழக்கு), எம்.துஷ்யந்தன் (குப்பிளான் வடக்கு), வை.மகிந்தினி (உரும்பிராய் கிழக்கு),எல்.சுரேந்தர் (குருநகர்), எஸ். ஜெனார்த்திகா (மானிப்பாய் மேற்கு), எம்.நிசுதர்மன் (வண்ணார் பண்ணை, யாழ்ப்பாணம்), வி.விக்டர் (குருநகர்),

எம்.றஜனி (கல்லூரி வீதி,இளவாலை), எஸ்.ஜெனார்த்தனி (பெரியஅரசடி, சாவகச்சேரி), ஜே.பூரணி (புலோலி கிழக்கு), எஸ்.வரலக்சுமி (தொல்புரம் மேற்கு), வை.றோகினி (சுழிபுரம்),ஜே.செல்வராசா (சண்டிலிப்பாய்), ஜே.கிருஷ்ணகுமார் (வட்டு.வடக்கு, சித்தன் கேணி),

எஸ்.கிருஷாந்தினி (இளவாலை),எஸ்.ஜெயலக்சுமி (சுழிபுரம் மத்தி.), ரி.நிர்மல்காந் (வசந்தபுரம்,கொழும்புத்துறை), பி.நடராசா (சுழிபுரம் கிழக்கு), எஸ்.பரணிகா (புகையிரத நிலைய வீதி, மல்லாகம்), எஸ்.குணசிங்கம் (நீர்வேலி வடக்கு),

ஏ.நசீரா (ஊரெழு மேற்கு), எஸ்.கௌசலா (புளியடி வைரவர் வீதி, உடுவில்), வி.விக்னராஜா (கம்பர் மலை,வல்வெட்டித்துறை), ஆர். தர்மதேவன் (சுழிபுரம் மத்தி.), ஜே.கோமவாசன் (சிவன்கோவிலடி, சித்தன்கேணி), பி. சின்னத்துரை (கோப்பாய் தெற்கு),

ஆர்.முகுந்தன் (நீர்வேலி வடக்கு), ரி.நிருஷாந் (இமயாணன் தெற்கு), ரி.ரஜித்தா (ஏழாலை தெற்கு), ரி.ஏலனோதீஸ்வரன் (சில்லாலை தெற்கு), கே.மோகனா (கட்டுடை, மானிப்பாய்), கே.எல்.எம்.றெபோர்ட் (சுன்னாகம்), எஸ்.மகிந்தன் (வாரியபுலம், சுன்னாகம்),

எஸ்.தனுஷியா (கோண்டாவில் மேற்கு), ஈ.ஆர்.கோ.(க.பொ.த.உயர் தரப் பரீட்சை சுட்டெண் 9391282-கொடிகாமம்), யூ.றஜீவன் (கந்தரோடை, சுன்னாகம்), அதிபன் (பொலிகண்டி), எஸ்.வி.கஜன் (வேலணை கிழக்கு), கே.நிருஜா (கரவெட்டி தெற்கு),

### நடனம்

கே.இராசகுமாரன் (வைத்தியசாலை வீதி, சங்கானை), எஸ்.அன்னலிங்கம் (சங்கானை), என்.சிறிகாந்தன் (சரசாலை தெற்கு), எம்.திவ்யா (இணுவில் மேற்கு), ஏ.பரமநாதன் (பண்டத்தரிப்பு), கே.சோதிராசா (மானிப்பாய் வடகிழக்கு),

பி.ராஜகுமார் (இருபாலை தெற்கு), ரி.பாலசுப்பிரமணியம் (மூளாய், சுழிபுரம்), ஏ.காங்கேயநாதன் (கல்வியங்காடு),ஜே.சுப்பிரமணியம் (பெரியமாவடி, சாவகச்சேரி), எஸ்.சைலஜா (கல்வியங்காடு), டபிள்யூ.ஜான்சியா (அரியாலை), ஆர்.சுவேந்தினி (நெல்லியடி வடக்கு),

என்.நிரோஜி (வரணி), என்.பிரசாந்தினி (கண்டிவீதி, அரியாலை), எஸ்.வல்லிபுரம் (சுதுமலை வடக்கு), என்.குணராசா (மானிப்பாய்), ஆர்.ரட்ணராஜா (நவாலி தெற்கு), எஸ். ஜார்மிலா (வரணி), பி.இராசகுமார் (உடுவில் தெற்கு),

எல்.லோகேந்திரன் (சுன்னாகம் தெற்கு), ரி.தவரட்ணம் (மாதகல்), எஸ்.சிவசுப்பிரமணியம் (இணுவில் கிழக்கு), வி.தியாகராஜா (திருநெல்வேலி மேற்கு), எம்.ஆர்.பி.ஜெயராசா (இளவாலை), பி.தேமகுலசிங்கம் (தாவடி தெற்கு), எஸ்.பத்மசீலன் (வடலியடைப்பு), ஜி. ஜெகதீஸ்வரன் (சுழிபுரம் மேற்கு),

எஸ்.நித்தியானந்தம் (கந்தரோடை, சுன்னாகம்), எம்.சண்முகநாதன் (கல்வியங்காடு), ரி.முரளிதரன் (அராலி தெற்கு), எம்.நடராசா (பண்ணாகம், சுழிபுரம்),

என்.நர்மதா (இணுவில் கிழக்கு), கே. மனோகரன் (நவாலி கிழக்கு), ரி.பொன்ராஜன் (வதிரி, கரவெட்டி), என்.குகநாதன் (வண்ணார் பண்ணை,யாழ்ப்பாணம்),

எம்.பிருந்தா (குடமியன், வரணி), என். செல்வராஜா (சங்கானை), ஜே.பரமநாதம் (கந்தரோடை, சுன்னாகம்), எஸ்.சிந்துஜா (ஆனைக்கோட்டை), எஸ்.ஜெயகுமார் (நல்லூர் கிழக்கு), கே.செல்வரட்ணம் (நல்லூர் தெற்கு),

ஆர்.டி.சோபனா (நவாலி தெற்கு), கே. பிரேமரட்ணம் (வி.எம்.வீதி, பருத்தித்துறை), பி.கதிரமலை (வட்டு.கிழக்கு), எஸ். சுகன்ஜா (வேலணை மேற்கு), எஸ்.மணிராசா (உடுவில் தெற்கு), எஸ்.ப்வீந்திரன் (மல்லாகம் சந்தி, ஏ.சௌந்தரராசன் (நவாலி தெற்கு),

### சங்கீதம்

எஸ்.பத்மநாதன் (யாழ்ப்பாணம்), பி.குலசேகரம்(பாண்டியன்தாழ்வு), ஜெ.திருஞானம் (மீசாலை), கே.அனுஷியா (கிளிநொச்சி), ரி. விஜிதா (யாழ்ப்பாணம்), எஸ்.சிறிஸ்கந்தராசா (கோப்பாய்), ஏ.தாரணி (சாவகச்சேரி), ஆர். பாலசுப்பிரமணியம் (கோப்பாய்), வி.தங்கராஜா (நீர்வேலி),

கே.கிருஷ்ணாநந்தன் (அல்வாய்), எஸ். ஜெயகதீஸ்வரன் கோப்பாய்), வை.செல்வராஜா (காரைநகர்), ஜே.யோகநாதன் (சுழிபுரம்),ஆர்.கோபாலசிங்கம் (மானிப்பாய்), வை.அமிர்தராஸ் (சாவகச்சேரி),ஜே.தவராசா (சுன்னாகம்),

கே.கனகசிங்கம்(கொழும்பு), எஸ்.யோகராஜா (நீர்வேலி), கே.சிவராஜினி (மாதகல்), எஸ்.சின்னவன் (மிருசுவில்), ஜி.சவுந்தரி (சுன்னாகம்), கே.கதிரவேலு (கரவெட்டி), பி. செந்தூரன் (கொடிகாமம்), ரி.மகேந்திரன் (யாழ்ப்பாணம்),


எஸ்.ஜெயகுமார்(யாழ்ப்பாணம்), கே.யோகேஸ்வரன் (மானிப்பாய்),என்.சோபினி (சண்டிலிப்பாய்), கே.தியாகராஜா (மாதகல்), ஆர். ரவி(நீர்வேலி), எஸ்.கதிரமலை (கோப்பாய்), எஸ்.வினுசா (யாழ்ப்பாணம்), என்.ஞானச்சந்திரன்(கோப்பாய்),

பி.சந்திரபாலன் (கொக்குவில்), ஜி.எழிலரசி (இணுவில்), எஸ்.வைத்தீஸ்வரசர்மா (அளவெட்டி), ரி.கந்தசாமி (கரவெட்டி), என். ஜெயராஜசிங்கம் (சங்கானை), ரி.செல்வராஜா (பருத்தித்துறை), ரி.ஜெயரூபினி (காங்கேசன் துறை), ரி.குலராஜசிங்கம் (பருத்தித்துறை),

கே.எதிர்வீரசிங்கம் (சுழிபுரம்), பி.பாலசுப்பிரமணியம்(வேலணை), என்.விஜயரத்தினம் (தொண்டைமானாறு), ஆர்.சாளினி (கோப்பாய்), ஏ.இராஜதகிரீசன் (சுன்னாகம்), எஸ்.சிவசுப்பிரமணிம்(கொடிகாமம்), ஆர். சடாச்சரம் (காரைநகர்). (ச-5)

*(தொடரும்)*





யாழ்ப்பாணத்துக்கு நேற்று விஜயம் செய்த அமைச்சர் ஜி.எல். பீரிஸ் யாழ். செயலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் கலந்து கொண்ட போது எடுக்கப்பட்ட படங்கள்.

## நாடுகடந்த தமிழீழ அரசாங்க...

தமிழீழ அரசு என்ற கட்டமைப்பை உருவாக்கி தற்போது அரசுக்கு புதிய அச்சுறுத்தலையும் ஏற்படுத்தியுள்ளார்கள்.

இந்த கட்டமைப்புக்களை நாம் நிச்சயம் உடைப்போம். அதற்கு உள்நாட்டிலும் வெளி நாட்டிலும் புலனாய்வு நடவடிக்கைகளை முடுக்கி விட்டுள்ளோம். இந்த கட்டமைப்பு களை முற்றாக அழித்தொழிப்பதற்கு பத்து வருடங்களும் ஆகலாம். கடந்த மே மாதம் போர் முடிபடைந்த பின்னரும் நாம் எமது இலக்குகளை மாற்றி அவற்றுக்கு எதிரான நடவடிக்கைகளை தொடர்ந்து வருகிறோம் என்றார்.

**ஐ.நாவின் விளக்கம்**

சரணடைந்த விடுதலைப்புலிகளின் தலை வர்களுக்கு என்ன நடந்தது என்று ஐக்கிய நாடுகள் சபை விளக்கம் கோரியிருப்பது தமக்கு வியப்பளிக்கிறது. மிகப்பாரதூர மான ஒரு விடயத்தை ஊடகவியலாளர் ஒருவரிடம் தான் அறிந்து கொண்டதாக அரசியல்வாதி ஒருவர் கூறினார் என்று தெரிவித்து அதனை ஆதாரமாக கொண்டு ஐக்கிய நாடுகள்சபை எம்மிடம் விளக்கம் கோருகின்றது என்றால் இதைவிட பொறுபற்றசெயல் வேறு ஒன்றுமே இருக்க முடியாது. உண்மையிலேயே ஐ.நா வின் இந்த செயல்எமக்குமிகுந்தவியப்பைஅளித்துள்ளது.

போர் முடிந்து இரண்டு நாட்களுக்கு பின்னர் தான் கேள்விப்பட்ட சம்பவத்தை போர் முடிபடைந்து எட்டு மாதங்களின் பின்னர் பொன்சேகா வெளியிட்டிருக்கிறார் என்றால் இதில் எவ் வளவு தூரம் உண்மை உள்ளது என்பதை முதலில் உணரவேண்டும் என்றார். (ச-5)

## வடகொரியாவில் கைப்பற்ற...

அதில் பயணித்த ஐந்து விமானிக்களும் கைது செய்யப்பட்டனர். எனினும் இந்த விமானிகள், தமக்கும் சர்வதேச ஆயுதக்கடத்தல் காரர் விக்டர் பௌட்டுக்கும் தொடர்புகள் இல்லை என தெரிவித்துள்ளனர்.

விக்டர்பௌட்டும் குறித்த விமானிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ள சிறையிலேயே தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

இவர்களில் நால்வர் கஸகஸ்தானையும் ஒருவர் பெலாரஸ்ஸையும் சேர்ந்தவர்களாவர். இதேவேளை, இந்த விமானம் ஈரானை நோக்கி சென்றதாக கூறப்பட்ட தகவலில் உண்மையில்லை என தாய்லாந்து அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் ஆயுத கடத்தல் ஆய்வாளர்களின் கருத்துப்படி, விமானம், ஈரானின் தெஹ்ரான், பாங்கொக் மற்றும் கொழும்பு, அஸர்ப ஜான், உக்ரெய்ன் ஆகிய இடங்களில் தரித்து செல்ல வாய்ப்புகள் இருந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)

## இந்திய அரசுடனான உறவை...

பொன்சேகாவினால் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் பாரதூரமானவை எனவும், அவற்றை சுலபமாக பார்க்க முடியாது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்தவிவகாரம் தொடர்பில் இராசதந்திர நடவடிக்கைகளை மேற்கொள்ள அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

இலங்கைப் படைவீரர்களை சர்வதேச நீதிமன்றில் ஆஜர்படுத்த அனுமதிக்கப்படா தென தெரிவித்த ஜே.வி.பி. இன்று ஏன் சரத் பொன்சேகாவின் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் மௌனம் காத்து வருகின்றது என அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

முப்படையினரையும் நாட்டு மக்களையும் பாதுகாக்க அரசாங்கம் சகல வழிகளிலும் முனைப்புக் காட்டும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

அரசியல் பேதங்களை களைந்து சரத் பொன்சேகாவின் கூற்றுக்கு எதிராக நாட்டு மக் கள் அனைவரும் அணிதிரள வேண்டும் என அமைச்சர் கோரிக்கை விடுத்துள்ளார். (ச-5)

## ஐரோ.அதிகாரி...

பிரவேசித்திருப்பது அமெரிக்காவின் முன்னாள் இராணுவ அதிகாரிடுவைட் டி எஸின்கௌவர் ஜனாதிபதி போட்டியிட்டு வென்றதனை ஞாபக மூட்டுவதாக உள்ளது என்று ஐரோப்பிய ஒன்றியத்தின் இலங்கைகான தூதுக்குழுவின் தலைவர் பேர்னர்ட் சவகே தெரிவித்த கருத்தை வெளிவிவகார அமைச்சர் வன்மையாக கண்டித்துள்ளார். (ச-5)

## ஏற்றுமதி அபிவிருத்தி...

கேட்போர் கூடத்தில் முக்கிய சந்திப்பொன்று இடம் பெற்றது.

அமைச்சர்களான டக்ளஸ் தேவானந்தா மற்றும் ஜி.எல்.பீரிஸ் ஆகியோருடன் மேஜர் ஜெனரல் மார்க்கும் இச்சந்திப்பில் பங்குகொண்டனர். தற் சமயம் விவசாயம் மற்றும் பழச்செய்கை ஆகியன மேற்கொள்ளப்படும் இடங்கள் புதிதாக விடுவிக்கப்படவுள்ள உயர்பாதுகாப்பு வலய பிரதேசங்கள் உற்பத்தி விளை பொருள்களை களஞ்சியப்படுத்தக் கூடிய பொருத்தமான இடங்கள் என்பன குறித்து விரிவாக ஆராயப்பட்டது.

அதன்பின் யாழ். செயலகத் துக்கு சென்ற அமைச்சர் பீரிஸ் பொதுப் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடியதுடன் பழச்செய்கைக்குத் தேவையான உபகரணங்களையும் பயனாளிகளுக்குக் கையளித்தார். (ச-5)

## ஜனநாயகத்தை நிலை...

ஆட்சியில் குடும்ப ஆதிக்கம் உருவாகிவிட்டது. ஜனநாயகத் துக்கு குடும்ப ஆதிக்கம் சவாலாக அமைந்துள்ளது.

இதன்காரணமாக எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஜெனரல் சரத்பொன்சேகாவை ஆதரித்து ஜனநாயகத்தை பாதுகாக்க வேண்டிய பொறுப்பு நாட்டுமக்கள் அனைவருக்கும் உண்டு.

இதற்காகவே ஜே.வி.பி. பாடுபடுகின் றது. அரசியல் இலாபங்களை அனுபவிக்கவேண்டும் எனஜே.வி.பி. நினைத்திருக்குமாயின், ஜனாதிபதி மகிந்தவின் ஆட்சியிலேயே அதனை செய்திருக்க முடியும்.

எம்மை பொறுத்தவரை நாட்டில் ஜனநாயகம் நிலைக்க வேண்டும். இதற்கு ஒரேவழி ஆட்சிமாற்றமாகவே இருக்க முடியும் என்றார் அவர். (ந)

## பாணின் விலை...

மற்றும் உப பொருட்களின் விலைகளில் மாற்றம் செய்யாது அவற்றின் விலைக்கழிவினையும் பாணின் விலையில் குறைத்துள்ளதாக யாழ். மாவட்ட வெதுப்பக உற்பத்தியாளர் கூட்டுறவுச்சங்கம் அறிவித்துள்ளது. (ச)

## படையினர் மீதான...

சுட்டுக்கொன்ற தாக ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் பொது வேட்பாளர் ஜெனரல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளது இராணுவத்தினர் செய்ட்டியில் மேற்கொண்டு வரும் ஐக்கிய நாடுகள் பணிகளை பாதிக்கும்.

ஐக்கிய நாடுகள் சபையின் பணிகளுக்கு படையினர் தெரிவு செய்யப்படு வதை யும் இது பாதிக்கும் இது அவர்களின் வெளி நாட்டு பயிற்சிகளையும் பாதிக்கும் என்றார். (ச-5)

## ஐ.நா.அனுப்பிய கடிதத்துக்கு...

பத்திரிகை ஒன்றுக்கு வழங்கிய செவ்வியில் இறுதி யுத்தத்தில் சரணடையவந்த புலிகளின் மூன்று தலைவர்களும் அவர்களின் குடும்பங்களும் படுகொலை செய்யப்பட்டது தொடர்பாக தெளிவுபடுத்து மாறு ஐ.நா. சபையின் விசேட பிரதிநிதி விளக்கம் கேட்டிருந்தார்.

அரசாங்கத்தின் முழுமையான நிலைப்பாடு என்னவெனில் பிலிப் அல்ஸ்டனுக்கு நாம் விரிவான பதில் வழங்குவோம் எமது வெளி விவகார அமைச்சர் ஊடாக ஜெனிவாவில் உள்ள எமது தூதுவர் ஊடாக அதற்கு பதி லளிக்க வேண்டும். அதுவே உத்தியோகப் பூர்வ முறையும் கூட எனினும் இது வரை நாம் அந்த நடவடிக் கைக்கு செல்லவில்லை. ஆனால் செய்யவுள்ளோம். கடந்தசில மாதங்களுக்குமுன்னர் இலங்கை தொடர்பில் சர்வதேச மனித உரிமை பேர வையில் இலங்கைக்கு எதிராக கொண் டுவரப் பட்டபிரேரணை வெற்றிகரமாக தோல்வி அடைய செய்தபின்னர் மீண்டும் இவ்வாறான பிரச்சினை ஏற்படுவது எமக்கு கவலை தருகின்றது.

எனவே நாம் மீண்டும் ஜெனிவாவுக் குச் சென்று பதிலளிக்க வேண்டியுள்ளது. தாம் அதனை சரியாகச் செய்வோம் அத்துடன் அங்கு பதில் அளிக்க கூடிய கேள்விகள் அங்கு கேட்கப்படுவதில்லை ஏன்எனில் நாம் தெளிவான நிலைப்பாட்டில் உள்ளோம் குறிப்பிட்ட சம்பவம் அங்கு இடம் பெறவில்லை என்பது உண்மை எனினும் எமக்கு தற்போது இது தொடர்பில் பிரச்சினை சர்வதேச ரீதியாக ஏற்பட்டுள்ளது. எமது பதில் கிடைத்தவுடன் அதனை மனித உரிமை பேரவையில் முன்வைக்க பிலிப் அல்ஸ்டன் முயல்கின்றார் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச-5)


# மரண அறிவித்தல்

## திருமதி இராசரத்தினம் அன்னம்மா

வேலணை மேற்கு முடிப்பிள்ளையார் கோவிலடியை பிறப்பிடமாகவும் இல.40 நாயன்மார் வீதி நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராசரத்தினம் அன்னம்மா அவர்கள் நேற்று (23.12.2009) காலமாகி விட்டார்.

இறுதிக் கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறியத் தரப்படும்.

மக்கள், மருமக்கள்

40, நாயன்மார் வீதி,
நல்லூர்.
021 222 6762

தகவல்:
பொ.அருணகிரிநாதன்
அதிபர் வேலணை மத்திய கல்லூரி.

(C-4033)


## மோசமான மனித அவலம் நிகழ்ந்த...

போர்களின் போது பொதுமக்கள் அவர்களுக்கான உயிர் காப்பு உதவிகளை பெறுவதில் இருந்து தடுக்கப்படுவது அதிகரித்து வருவதாக பிரான்ஸை தளமாகக் கொண்டு செயற்படும் எம்.எஸ்.எஃப் என்னும் அந்த அமைப்பு கூறியிருக்கிறது.

விடுதலைப்புலிகளுக்கு எதிரான இலங்கை அரசாங்கத்தின் இறுதிக் கட்டப் போரின் போது, ஆயிரக்கணக்கான மக்கள் உதவிகள் துண்டிக்கப்பட்டும், மட்டுப்படுத்தப்பட்ட மருத்துவ பராமரிப்புடனும் பெரும் அவதிக்கு உள்ளதாகவும் அந்த அமைப்பு கூறியுள்ளது.

இலங்கையில் போர் வேளையில் அந்தப் பகுதிக்கு செல்ல தாம் அனுமதிக்கப்படவில்லை என்றும், போர் வலயத்துக்கு வெளியேயே தாம் பணிசெய்ய அனுமதிக்கப்பட்டதாகவும் கூறுகிறார் அந்த அமைப்பைச் சேர்ந்த வனசா வான் ஸ்கோர். அதனால் தாங்கள் பல சிரமங்களை எதிர்கொண்டதாகவும் கூறினார்.

இவ் அமைப்பு வெளியிட்ட அறிக்கை குறித்து அவ்வமைப்பின் வனசா வான் ஸ்கோர் கருத்து தெரிவிக்கையில்;

போர் நடைபெறும் போது பொது மக்கள் தமக்கான உயிர் காப்பு உதவிகளை பெறுவதிலிருந்து தடுக்கப்படுவது உலகில் அதிகரித்து வருகின்றது. இவ்வாறு மிகவும் மோசமான மனிதப் பேரவலங்கள் நடந்த சம்பவங்கள் 10ஐ பட்டியலிட்டுள்ளோம். அந்த மனிதப் பேர வலங்கள் நிகழ்ந்த நாடுகளில் இலங்கையும் அடங்குகின்றது. இலங்கையில் இவ்வருடம் மே மாதம் அளவில் புலிகளுக்கும், அர சுக்குமிடையில் நடை பெற்ற யுத்தத்தில் பெரியளவான மனிதப் பேரவலம் இடம் பெற்றுள்ளது. இரு தரப்புக்குமிடையே நடந்த போரில் ஆயிரக்கணக்கான பொது மக்கள் உயிரிழந்தும் மேலும் பலர் உதவிகள் கிடைக்காமையினாலும், உதவிகள் துண்டிக்கப்பட்டும் மற்றும் மட்டுப் படுத்தப்பட்டளவான மருத்துவப் பராமரிப்புடனும் பெரும் அவலத்துக்கு உள்ளாயினர்.

இலங்கையில் போர் நடந்த போது குறிப்பிட்ட பகுதிக்குச் செல்ல தாம் அனுமதிக்கப்படவில்லை என்றும் போர் வலயத்துக் வெளியே தாம் பணி செய்ய அனுமதிக்கப்பட்டோம் எனவும் இதனால் தாம் பெரும் சிரமங்களை எதிர் கொண்டுள்ளதாகவும் கூறினார். (ச-5)


# NEW SCIENCE HALL

கன்னாதிட்டி | யாழ்ப்பாணம்

2012 A/L

தமிழ் மொழி மூலம், ஆங்கில மொழி மூலம்

கணித, உயிரியல் பிரிவு

**PHYSICS**
MR.S.சோதிலிங்கம்
MR.R.குமரன்
MR.R.குகன்

**CHEMISTRY**
MR.N.மகேஸ்வரன்
MR.K.சிவத்திரன்

**BIOLOGY**
MR.T.தம்பிராஜா
MR.T.கெங்காதரன்
MR.M.அல்போன்ஸ்
வழமையான ஆசிரியர்

**COM.MATHS**
MR.S.செந்தில்ராஜ்
MR.P.செந்தில்நாதன்

ஆரம்பம்:28.12.2009 காலை 9.30மணி

(C-4032)



**Computer Personal Classes**

MS Office, PageMaker, Photoshop, CorelDraw,. ICT, GIT, Internet & E-mail ஆகியன உங்கள் வசதிக்கேற்ப வீடுகளுக்கு நேரடியாக வந்து கற்பிக்கப்படும். அத்துடன் Hardware Repairing & Servicing செய்து கொடுக்கப்படும்.

T.P.: 0778070662 ,0776158090 (127)


இப்பத்திரிகை வலம்புரி அன்.தோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 24.12.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.